
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜூலை - 2003
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00




படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கடிதம்

"பொடா பாய்ச்சல்..." ஜெயா சாட்டை எடுத்தால், மூத்திரம் பெய்யக் கூடிய வர்கள் இன்றைய பத்திரிக்கையாளர்கள் எனக் குறிப்பிட்டது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. திருச்சியில் மின் கட்டணம், கல்விக் கட்டணம், மருத்துவக் கட்டண உயர்வைக் கண்டித்து ம.க.இ.க - பு.மா.இ.மு - பு.ஜ.தொ.மு ஆகிய அமைப்புக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை அனைத்துப் பத்திரிக்கைகளும் போலீசின் மிரட்டலால் வெளியிடவில்லை.

பாலியல் குறித்த சமூகத்தின் பார்வை எப்படி இருக்கிறது என்பதை அட்டைப் படமே தெளிவாக வெளியிட்டிருக்கிறது. ஜூனியர் விகடனுக்கு எந்த வகையிலும் சளைத்தவைகள் அல்ல என்று நிரூபித்துக் கொண்டிருக்கும் இதர புலனாய்வு மற்றும் வெகுஜனப் பத்திரிக்கைகளுக்கும் பின் அட்டையில் இன்னும் இரண்டு பக்கம் சேர்த்து இலவச விளம்பர வாய்ப்பை வழங்கியிருக்கலாம். கதாசிரியர், அறிவியல் அறிஞர் சுஜாதாவிற்கு நீங்கள் வழங்கியிருக்கிற மஞ்சள் நிறம் மிகப் பொருத்தமானதுதான். மனநல நோக்கில் பாலியல் வன்முறை குறித்த கேள்விகளுக்கு டாக்டர் ருத்ரன் சரியான தேர்வு. வெகுஜன ஊடகங்களான தொலைக்காட்சி, சினிமா, பத்திரிக்கை இவைகளெல்லாம் கவர்ச்சியே அழகு, வக்கிர உணர்வே பாலுணர்வு எனச் சிந்திக்கும் நிலைக்கு மக்களைக் கொண்டு வந்திருக்கிறது. ஆண்களையும், பெண்களையும் இந்த மயக்கத்திலிருந்து மீட்டால் மட்டுமே அவர்களைச் சமூகம் குறித்துச் சிந்திக்கச் செய்ய முடியுமென்று கருதுகிறேன். உங்கள் கட்டுரையை பாலியல் குறித்த பார்வையில் ஒவ்வொருவரும் எந்தத் தளத்தில் இருக்கிறோம் என்று அடையாளம் காட்டும் ஒரு நிலைக் கண்ணாடி என்றே கருதுகிறேன். இந்த இதழைப் பரவலாக எல்லா இளைஞர்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும்; கொண்டு செல்வோம்.

— **வாசகர் வட்டம்,** திருச்சி.

தரமற்ற ஏனைய பத்திரிக்கைகள் ஆபாசங்களை மலிவு விலையில் அவிழ்த்து விட்டு விபச்சார வலையில் விழும் வாசகர்களை வரிந்து கட்டி காமுகர்களாக மாற்றுகின்ற நிலையில், இருபத்தி ஒன்றாம் ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ள ***புதிய கலாச்சாரம்*** இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற இதழ் என்றால் அது மிகையானதல்ல!

— **A.M. லுக்மானுல்ஹக்கீம்** மற்றும் நண்பர்கள், கோயம்புத்தூர்.

''பாலியல் வன்முறை: அந்தரங்கத்தின் அவலம்'' கட்டுரையைப் படித்ததன் வாயிலாக, பாலியல் என்பது மனித வாழ்க்கையில் எவ்வாறு மதிப்பீடு செய்யப்படவேண்டும் என்பதற்கு மாறாக, பாலியல் இச்சமூகத்தில் எவ்வாறு பல்வேறு நிலைகளில் வன்முறை வடிவமாக மக்களிடத்தே நிலவி வருகின்றது என்பதை விளக்கியிருப்பது என் நெஞ்சத்தை நெகிழச் செய்தது. மேலும் அக்கட்டுரையை ஒட்டி மனநல மருத்துவர் ருத்ரன் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகள் ஒவ்வொன்றும் சிந்தனையைத் தூண்டும் வண்ணமாக அமைந்ததோடு அவர் அளித்த பதில்களின் வாயிலாகப் பாலியலைப் பற்றி பல புதிய செய்திகளைச் சமூக உணர்வோடு புரிந்து கொள்ள முடிந்தது.

— **வே. கணேசமூர்த்தி,** சென்னை.

''பாலியல் வன்முறை...'' எழுதிய கட்டுரையாளர் உண்மையிலேயே சமூகத்தை உற்றுப் பார்த்து ஆழமாக எழுதியுள்ளார். ஒரு மனிதனின் கடமை என்பது தன்னுடைய சமுதாயம் எப்படி உள்ளது, தனக்குப் பின்னால் எப்படி இருக்கப் போகிறது - அதற்குத் தான் என்ன செய்யப் போகிறோம் என்பதே. அவ்வகையில் இக்கட்டுரை இன்றைய சமுதாயத்திற்கும், நாளைய சமுதாயத்திற்கும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

— **உதயன்,** திருச்சி.

''மாணவி கற்பழிப்பு'', ''சிறுமியிடம் வாலிபர் சில்மிஷம்'' போன்ற செய்திகளைப் பார்த்தவுடன் கோபப்படுவதற்குப் பதிலாக 'அது எப்படி' என்று ஆராய்ச்சி மனக்கண் கொண்டு படிக்கும் இளைஞர்களுக்கு உங்கள் கட்டுரை ஒரு படிப்பினையாக அமைந்திருக்கிறது.

— **ஜே. எலியாஸ்,** இருதயகுளம்.

''பொடா பாய்ச்சல்...'' கட்டுரை மூலம் பல பத்திரிக்கைகள் ஆளும் கும்பலுக்கு ஜால்ராப் போடுவதையும், போலி சனநாயகம் பற்றி எழுதுவதையும் தோலுரித்துக் காட்டியிருந்தீர்கள்.

— செம்மலர் **மா. நடராசன்,** அறந்தாங்கி.

''ஓய்வு, பொழுதுபோக்கு, ரசனை'' - கட்டுரைத் தொடர் முன்பு முடிவடைந்தது கண்டு ஏமாற்றம் அடைந்திருந்தேன். ''பாலியல் வன்முறை..'' கட்டுரை மேற்சொன்ன கட்டுரையின் தொடர்ச்சியாக உள்ளது. மேலும் ஆபாசச் சீரழிவு பரப்பும் பத்திரிக்கை, திரைப்படம், விளம்பரங்களைப் பார்க்கும் போது மலத்தை வாயில் திணிப்பது போல் உணர்வேன். இவை பகுத்தறிவை மழுங்கடிக்கின்றன, பெண்களை இழிவு படுத்துகின்றன என்ற அளவில்தான் எனது புரிதல் இருந்தது. நண்பர்களுக்கோ, குடும்பத்துக்கோ, உழைக்கும் மக்கள் விடுதலைக்கோ எப்படி எதிராக உள்ளது என்பதை விளக்க முடியாதிருந்தேன். உங்கள் கட்டுரை விளங்க வைத்திருக்கிறது. பண்பாட்டு விழிப்பு தொடர்பான இத்தகைய கட்டுரைகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

— **கே. சுந்தரமூர்த்தி,** திருப்பூர்.

### ஜூலை மாதத்துடன் முடிவுறும் சந்தாதாரர்கள்

4, 11, 14, 27, 31, 36, 43, 125, 126, 204, 210, 211, 212, 216, 217, 218, 225, 226,228, 236, 240, 496, 498, 500, 504, 505, 506, 508, 509, 513, 514, 515, 516, 517, 518, 521, 522, 523, 524, 525, 526, 527, 528, 529, 530, 531, 532, 549, 550, 551, 552, 553, 554, 555, 556, 557, 559, 560, 562, 563, 564, 566, 567, 568, 569, 570, 571, 572, 573, 574, 575, 576, 577, 578, 579, 581, 587, 609, 610, 611, 612, 619, 773

### ஆகஸ்டு மாதத்துடன் முடிவுறும் சந்தாதாரர்கள்

12, 139, 145, 156, 199, 237, 243, 244, 580, 582, 583, 584, 585, 586, 588, 589, 590, 591, 592, 593, 594, 595, 597, 598, 599, 601, 602, 603, 604, 605, 606, 607, 616, 617, 618, 621, 622, 623, 624, 625, 627, 629, 630, 631, 633, 634, 635, 636, 637, 638, 639, 640, 642


படிப்பகம்

www.padippakam.com

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர்: 21
- குரல்: 2
- ஜூலை - 2003

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

தொலைபேசி: 044-23718706

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# பேயாட்சி

வெறி பிடித்த மிருகத்தைப் போல போராடும் அரசு ஊழியர், ஆசிரியர்கள் மீது பாய்ந்து கடித்துக் குதறியிருக்கிறது ஜெயலலிதா அரசு. ''நாடாளுமன்ற - சட்டமன்ற ஜனநாயகம்'' என்ற பெயரில் ஆட்சி நடக்கும் எந்தவொரு நாட்டிலும், எந்தவொரு காலத்திலும் இதுபோன்ற போலீசுக் காட்டுமிராண்டித்தனம் ஏவிவிடப்பட்டதில்லை.

சுரண்டல் வெறியும் பார்ப்பனத் திமிரும் ஒருசேர அமைந்த டி.வி.எஸ்., சிம்சன் போன்ற தரகுப் பெரு முதலாளிகளின் நிறுவனங்கள் இப்படி நடந்திருக்கின்றன. பாசிச சர்வாதிகாரி இந்திராகாந்தியின் ஆட்சியில் கடுமையாக ஒடுக்கப்பட்ட இந்திய இரயில்வேத் துறை வேலை நிறுத்தம் கூட அது தொடங்கிய சில நாட்களுக்குப் பிறகுதான் இதுபோன்ற தொழிலாளர் குடியிருப்புகளில் புகுந்து, அவர்களைத் தாக்கி வேலைக்கு இழுத்து வந்தார்கள். அதையும் விஞ்சும் அளவுக்குப் பார்ப்பன பாசிச பயங்கரவாத ஜெயலலிதா அடக்குமுறையை ஏவியுள்ளார்.

அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் நிலையோ உண்மையில் பரிதாபகரமானது. கவுரவமான - மதிப்புக்குரிய வெள்ளுடைப் பணியாளர்களாக தங்களை அரசும் போலீசுக்காரர்களும் 'நாகரிகமாகவே' நடத்துவார்கள் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தனர். அந்தப் பிரமை இப்போது தவிடுபொடியாகி விட்டது. ''எங்களுக்கும் இந்தக் கதிதானா?'' என்று புலம்புகிறார்கள், பரிதவிக்கிறார்கள். ''ஆமாம் உங்களுக்கும் இதே கதிதான்'' என்று சொல்லவில்லை; செய்து காட்டுகிறார்கள் போலீசுக்காரர்கள். ''போலீசுக்காரர்களும், அரசு ஊழியர்கள் தானே. உங்களுக்கும் சேர்த்துத் தானே போராடுகிறோம். எங்கள் போராட்டம் வெற்றி பெற்றால் உங்களுக்கும் அதன் பலன்கள் கிடைக்குமே. நாளை போலீசு சங்கம் அமைக்க அனுமதிக் கோரிப் போராடினால், நீங்களும் இராணுவத்தைக் கொண்டு ஒடுக்கப்படுவீர்கள். அப்போது நாங்கள் உங்களை ஆதரிப்போம்'' என்று நயந்தும் பயந்தும் பேசுகிறார்கள்.

''எங்கள் சகோதரர்களாகிய அரசு ஊழியர்கள் சிறையிலடைக்கப்படுவதைக் கண்டு வேதனை அடைகிறோம்'' என்று கூறித் தாங்களும் போராட்டத்தில் குதித்தார்களே நீதித்துறை ஊழியர்கள், அப்படிப்பட்ட அரசு ஊழியர்கள் அல்ல போலீசார். ஆமாம். போலீசுக்காரர்கள் அரசின் தனிவகை சாதிக்காரர்கள். ஊழியர்களைப் போல பேனாவும், ஆசிரியர்களைப் போல சுண்ணாம்புக் கட்டியும் ஏந்தியவர்கள் அல்ல. குண்டாந் தடிகளையும், துப்பாக்கிகளையும் ஏந்துவதற்கு, அதைக் கொண்டு போராடுபவர்கள் யாராயினும் ஒடுக்குவதற்குப் பயிற்றுவிக்கப்பட்டு, வானமே எல்லை என்று அதிகாரம் வழங்கப்பட்டவர்கள். அதோடு கூடவே ஆளும் பார்ப்பன பாசிச பயங்கரவாதி ஜெயலலிதாவின் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்பட்டவர்கள்.

கருவூலம் காலி என்று கூறி அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் உரிமைகள் பறிக்கப்படும் அதேசமயம் கோராமலேயே போலீசாருக்குக் கோடிகோடியாக சலுகைகள் அறிவித்து அமலாக்கப்படுகிறது. அரசு - ஆசிரியர் பணிகளுக்கான புதிய நியமனங்கள் கிடையாதென மறுக்கப்படும் அதேசமயம் போலீசு - அதிரடி கமாண்டோப் பணிகளுக்கு ஆளெடுக்கப்படுவதோடு, புதுப்புது போலீசு நிலையங்கள், பதவிகள் உருவாக்கப்படுகின்றன. ''அம்மா''வின் கடைக்கண் பார்வைபெற்ற புதுவேகத்தோடு போலீசு வெறியாட்டம் போடுவதில் வியப்பொன்றுமில்லை.

12 இலட்சத்துக்கும் மேலானவர்கள்; பிளவுகள் ஏதுமற்ற ஒன்றுபட்ட சக்தியாய் திரண்ட இந்தப் போராட்டத்தை எப்படியும் ஒடுக்கிவிட வேண்டும், அது முடியும் என்கிற ''நம்பிக்கை, ஆத்திரம், துணிவு'' எல்லாம் ஜெயலலிதா கும்பலுக்கு எப்படி வந்தது? லஞ்ச ஊழல், அதிகார முறைகேடு வழக்குகள் போட்டு ஜெயலலிதாவைப் பதவி நீக்கம் செய்யக் காரணமாக இருந்த எதிர்க்கட்சியினர், கருவூலம் காலி என்று அறிவித்து பல ஆயிரம் கோடி ரூபாய் சுமை ஏற்றியதற்கு எதிராகப் போராடிய பொது மக்கள், வேலையிழந்த தொழிலாளர்கள், நெசவாளிகள், விவசாயிகள், மாணவர்கள், போக்குவரத்து - மின்வாரிய ஊழியர்கள் - இப்படிப் போராடிய எந்தவொரு பிரிவினரையும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி ஒடுக்கியதில் ஜெயலலிதா அரசுக்கு கூடுதலான கொழுப்பும் திமிரும் ஏறிப் போயிருக்கிறது. தன்னை ''யாரும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது'' என்கிற நம்பிக்கை; யாரையும் விலைக்கு வாங்கி விட முடியும், எதிலும் தனக்குப் பின்னடைவு கிடையாது என்கிற திமிர்த்தனம் மேலும் உறுதியாகி இருக்கிறது.

போராடிய பல்வேறு பிரிவினரிடம் ஜெயலலிதா அரசும் போலீசும் எப்படி நடந்து கொண்டது என்பது ஒருபுறம் இருக்க அரசு ஊழியர்களும் - ஆசிரியர்களுமே கூட எத்தகைய பார்வை - அணுகுமுறை கொண்டிருந்தனர்? பாராமுகம் கொண்டு ஒதுங்கி நின்றனர் என்பது மட்டுமல்ல மக்களுக்கு எதிரான ஜப்தி, வரி-கட்டணச் சுமை

படிப்பகம்

www.padippakam.com

**கவுரவமான - மதிப்புக்குரிய வெள்ளுடைப் பணியாளர்களாக தங்களை அரசும் போலீசுக்காரர்களும் 'நாகரிகமாகவே' நடத்துவார்கள் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தனர். அந்தப் பிரமை இப்போது தவிடுபொடியாகி விட்டது.**

யேற்றம் போன்ற நடவடிக்கைகளில் அரசின் கருவியாக இருந்து செயல்பட்டனர். இவ்வளவு ஏன்? ''எஸ்மா'' சட்டம் பிறப்பிக்கப்பட்டபோது, அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் எவ்வாறு எதிர்கொண்டார்கள்?

''எஸ்மா'' என்பது அடிப்படையில் இரு தரப்பு ஒப்பந்த முறிப்பு துரோகமாகும். அது பணியாளர்களின் ஊதிய உரிமைக்கு உத்திரவாதமளிக்காத அதே சமயம், வேலைநிறுத்த உரிமையை பறிக்கிறது. அடிப்படையில் அநீதியானது, அக்கிரமமானது. பண்டைய அடிமைமுறை இலக்கணம் - நவீன சட்டவடிவம் கொடுத்து அமலாக்குவது. அந்த ''எஸ்மா'' தங்களுக்கு எதிராகவும் ஏவிவிடப்படும் என்று அதன் ஆரம்ப நிலையிலேயே எதிர்த்து முறியடிப்பதற்கு இவர்கள் என்ன செய்தார்கள்? அதே போல ஏராளமான சலுகைகளும் வரைமுறையற்ற அதிகாரங்களும் போலீசுக்கு வழங்கி போராடும் மக்கள் மீதும் அரசியல் எதிரிகள் மீதும் அடுக்கான பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தி சிறையிலடைத்தபோது இவர்கள் என்ன செய்தார்கள்.

இவர்கள் பொதுமக்களிடமிருந்து தனிமைப்பட்டுக் கிடப்பது; தொழிற்சங்கவாதம் - பொருளாதாரவாதம் - காரியவாதம் ஆகியவற்றில் மூழ்கிக் கிடப்பது; இவர்களின் கோழைத்தனம், அரசியலற்ற தன்மை, ஊசலாட்டம் போன்றவை போராட்டக்காரர்களின் பலவீனமாயும் ஒடுக்குமுறையாளர்களின் பலமாயும் அமைந்தன.

ஆனால், ஜெயலலிதாவோ கொஞ்சமும் ஈவிரக்கமும் கருணையும் இல்லாத பேய். சமூக அரசியல் ஆதரவே இல்லாது தனிமைப்பட்டுப் போனவர் என்று கூறிவிட முடியாது. ஆயிரம் ஏழைகளுக்கு அரசே சீதனம் வழங்கி, திருமணம் செய்கிறது. வேலையிழந்த நெசவாளர்களுக்கு இலவச அரிசி, வறட்சியால் பட்டினி கிடக்கும் விவசாயிகளுக்கு இலவசச் சோறு, பக்தர்களுக்கு அன்னதானம் இப்படி எத்தனையோ தானதர்மங்கள். அதாவது ''உரிமை கேட்காதே, பிச்சைத் தட்டேந்தி வா அம்மா தர்மம் போடுவார்'' என்ற இந்த அணுகுமுறை பார்ப்பன பாசிச பயங்கரவாதிகளின் முழு ஆதரவைப் பெற்றுள்ளது.

இதுவரையில் இந்தியா கண்டிருக்கும் எல்லா முதல்வர்களிலும் இவர்தான் ''ஆதர்ஷ்'' (முன்னுதாரணமான) இந்து முதல்வர் என்று ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி - பா.ஜ.க.வினர் ஏற்றிப் போற்றுகின்றனர். தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையை அமலாக்குவதில் ஜெயலலிதா கடைப்பிடிக்கும் உறுதியும், அறிவுக்கூர்மையும், நிர்வாகத் திறனும் கண்டு உலகவங்கி, ஐ.எம்.எஃப் மற்றும் பன்னாட்டுத் தொழிற்கழகங்கள் வியந்து பாராட்டுகின்றன.

தொழிலாளர்கள் - பணியாளர்கள் - விவசாயிகள் போராடினால் மூர்க்கத்தனமாக ஒடுக்குவது; பன்னாட்டு தொழில் நிறுவனங்கள், தரகுப் பெருமுதலாளிகளுக்கு ஊழியஞ் செய்வது என்ற இந்த அணுகுமுறை ஜெயலலிதா அரசு எத்தகைய தன்மையுடையது; இதற்கு எதிராக எத்தகைய போராட்டங்கள் அவசியமாக உள்ளன என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

பார்ப்பன பாசிச பயங்கரவாத ஆதிக்கத்தின் கீழ் ஏகாதிபத்திய - பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களின் நலன்களுக்காக மறுகாலனியமயமாக்கும் ஜெயலலிதா கும்பலின் முயற்சியை முறியடிப்பதற்குப் போராட வேண்டும். அதைவிட முக்கியமாகவும் உடனடியாகவும் அரசு என்றாலே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் போலீசு பேயாட்சி நடத்துவதுதான் என்று மாற்றிவிட்டார் ஜெயலலிதா.

எந்தவொரு பிரிவு மக்களின் பொருளாதாரக் கோரிக்கைகளுக்குமான போராட்டமும் இந்த போலீசு பேயாட்சியை எதிர்கொள்ள வேண்டிய அரசியல் பிரச்சினையாக்கி விட்டார். எதிர்த்து அரசியல் போராட்டம் நடத்தி வீழ்த்தாவிட்டால் இந்தப் போலீசு பேயாட்சி உழைக்கும் மக்களின் வாழ்வுரிமையையும் பறிக்கும் பேராபத்தாகவும் நாடு முழுவதற்குமே முன்னுதாரணமாகவும் வளர்ந்து விடும். ●

**அட்டை ஓவியம் : முகிலன்**
**அட்டை வடிவமைப்பு: ஸ்பார்ட்டகஸ்**

**தூ**ய்மை - அது நல்லதுதான். சுற்றுச் சூழலுக்கும், உடல் நலனுக்கும் அவசியமானதுதான்.

அமைதி - அதுவும் நல்லதுதான். சிந்தனைக்கும், செயலுக்கும் உகந்தது, உவப்பளிக்கக் கூடியதுதான்.

தூய்மையும் அமைதியும் குழைத்த அழகு - ரசிக்கத்தக்கது, கண்டுகளிக்கத்தக்கது. பேரழகு என்றால் பிரமிக்கத்தக்கது.

ஆனால், மிரட்டும் தூய்மையும், மயான அமைதியும் கூட இருக்கின்றன. இவை இரண்டும் கலந்த வக்கிர அழகு பயபீதியூட்டக் கூடியது; படுபயங்கரமானது.

இத்தகைய மிரட்டும் தூய்மை, மயான அமைதி அழகு என்கிற பெயரில் பயபீதியூட்டும் ஒருவித பயங்கரவாதம் நமது மாநகரங்களில் பரவி வருகிறது.

''ஆசியர்களும் நாய்களும் உள்ளே நுழையக் கூடாது'' என்று அறிவித்த எச்சரிக்கைப் பலகை கூட தூய்மை, அமைதி, அழகைப் பேணும் நோக்கத்தைக்கூறித்தான் வைக்கப்பட்டது. ஆனால், அதன் உள்ளே வெள்ளைத் திமிர் ஒளிந்து கொண்டிருந்தது.

கல்கத்தா - காஸ்மாபாலிடன் கிளப்பில் வேட்டி கட்டியவர்களும் முழுக் காலணி (ஷூ) அணியாத வெறுங்கால் ஆசாமிகளும் உள்ளே நுழைவதற்குத் தடை. இதுபோன்ற அடிமைச் சின்னங்கள் இன்னமும் ஒரு பக்கம் நீடிக்கத்தான் செய்கின்றன.

குறிப்பிட்ட எவரையும் உள்ளே நுழையக் கூடாது என்று அறிவிக்கும் எச்சரிக்கைப் பலகை இல்லைதான். ஆனால் இன்றைய நகரின் பல இடங்களின் சூழல், அந்த இடங்களில் பராமரிக்கப்படும் தூய்மை, அமைதி, அழகு ஆகியவை பயங்கரத்தை ஏற்படுத்துவதாக மாறி வருகின்றன.

கொடூரமான, நாசகார ஆயுதங்களைக் கொண்டு தமது நேரடியான எதிரிகளைத் தாக்குவதோடு குரூரமான வன்முறையால் ஒட்டு மொத்தச் சமூகத்தையே பயபீதியில் உறைந்து போகும்படி அச்சுறுத்தி நிலைகுலையச் செய்வது பயங்கரவாதம். அத்தகைய ஆயுதங்களின்றி, வன்முறையின்றி அதேசமயம் மிரட்டும் தூய்மை, மயான அமைதி, வக்கிர அழகு ஆகியவற்றைப் பயன்படுத்தி ''ஒட்டுமொத்தச் சமூகத்தையே பயபீதியில் உறைந்துபோகும்படி அச்சுறுத்து''வதும் ஒருவகை பயங்கரவாதம்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# அழகு, அமைதி, சுத்தம் பயங்கரவாதம்

வானொளி, திரைப்படங்கள் மூலமாக நடக்கும் ஏகாதிபத்தியப் பண்பாட்டுப் படையெடுப்பு; பன்னாட்டுத் தொழில் கழகங்கள் கொண்டுவந்து குவிக்கும் அதிநவீன நுகர்பொருட்கள்; அவற்றை விற்பதற்காகச் செய்யப்படும் விளம்பரங்கள். எல்லாம் நடுத்தர, மேட்டுக்குடி மக்கள் மத்தியில் ஒருவகை அந்நிய மோகத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. நமது மக்களின் பண்பாடும், இயல்பான வாழ்க்கையும் மொழியும் அநாகரிகமாக, அசிங்கமாக, அருவெறுக்கத்தக்கதாகவும் தெரிகிறது. எதுவானாலும் ''ஃபாரின்'' சரக்காகவும், ''ரிச்''சாகவும் இருக்க வேண்டும் என்று பலர் ஆசைப்படுகிறார்கள்.

வாழ்ந்தால் அமெரிக்காவிலோ, லண்டனிலோ, பாரிசிலோ, பெர்லினிலோ வாழ வேண்டும். பன்னாட்டுத் தொழில் கழகங்களின் பொருட்களையே பாவிக்க வேண்டும். வேலை செய்தால் அம்மாதிரியான நிறுவனங்களில் வேலை செய்யவேண்டும் என்று நடுத்தர வர்க்கத்தினர் கனவு காண்கிறார்கள்; அதற்காக ஏங்குகிறார்கள்.

ஆனால், நமது நடுத்தர வர்க்கத்தின் நிலை என்ன? பன்னாட்டு நிறுவனங்களின் தரத்தையோ, விலையையோ பற்றி மூச்சு விடமுடிகிறதா? ''நுகர்வோர் ஜனநாயகம்'' எல்லாப் பிரச்சினைக்கும் வழிகாணும் என்றார்கள். நமது நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் போலவே அது உருட்டல் மிரட்டலில் காணாமற் போய்விட்டது.

இவன் எப்போதும் பீட்டர் இங்கிலாந்து, பார்கின்ஸ், வான்ஹுசன் உடுப்புக்கள் மட்டுமே அணிந்து கொள்ள முடியாமல் போகலாம். இவன் நினைத்த மாத்திரத்தில் ''ஃபாரின்'' சரக்குகளை வாங்க முடியாமல் போகலாம். ஆனால், அந்தத் ''தரத்துக்கு''த் தன்னிடம் ஒரு சில உடுப்புக்களையாவது அணிய முடியும். கொஞ்சம் ''மென''க்கெட்டுக் கணக்குப் போட்டு எச்சரிக்கையாகக் ''கிரெடிட் கார்டை''ப் பயன்படுத்தவும் தெரியும். கூடுதலாகச் சிரமப்பட்டால் ஒரு ஃபிளாட்டும், தவணையில் குட்டிக் காரும் கூட வாங்கி விடலாம். இவன் சரளமாக நுனி நாக்கு ஆங்கிலத்தில் பேச முடியாது என்றாலும் தட்டுத்தடுமாறிப் பேசவும் புரிந்து கொள்ளவும் முடியும்.

ஆனாலும், இவன் தற்போது உருவாகி வரும் பன்னாட்டுத் தொழில் கழகங்களின் அலுவலகங்கள், நட்சத்திர விடுதிகள், நுகர்பொருள் விற்பனையகங்கள், வங்கிகள் போன்றவற்றுக்குள் நுழைந்து தயக்கமின்றியும், சுதந்திரமாகவும் உரிமையோடும் பேசும் சூழல் நிலவுகிறதா? திக்குத் தெரியாத ''கான்கிரீட்'' காட்டுக்குள் நுழைந்த சிறுவனைப் போலப் பேந்தப்பேந்த விழிக்கத்தானே முடிகிறது.

நியாயப்படி பார்க்கப் போனால் அதிகபட்சத் தூய்மையும் அமைதியும் பராமரிக்கப்பட வேண்டிய இடங்கள் மருத்துவமனைகள்தாம். அங்குதான் தொற்றுநோய் பரவாமல் இருக்க வேண்டும். நோயாளிகள் பாதிக்கப் படக்கூடாது. மருத்துவமனைகளுக்கு அருகில் உள்ள சாலைகளில் போகும் வாகனங்களில் ஒலி எழுப்பக் கூடாதென்று போக்குவரத்துச் சின்னங்கள் கூட உள்ளன.

நமது அரசுப் பொது மருத்துவமனைகளில் பேணப்படும் தூய்மையும் அமைதியும் ஓரளவு போதுமானவையாகவே உள்ளன. இன்னும் சற்றுக் கூடுதலாகப் பராமரிக்கப்பட்டால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் நோயாளிகளின் எண்ணிக்கை, ஊழியர்களின் பற்றாக்குறை, அரசின் நிதி ஒதுக்கீடு இவை காரணமாக இப்போதுள்ள தூய்மை, அமைதியே போதும் என்று திருப்தியடைய வேண்டியிருக்கிறது.

ஆனால், இப்போது நகரங்களில் நிர்மாணிக்கப்படும் நட்சத்திர மருத்துவமனைகளைப் பாருங்கள். தவிர்க்க முடியாத காரணங்களுக்காக அங்கு போகும் நோயாளிகளும் உறவினர்களும் முதல் நோக்கிலேயே மிரண்டு போகிறார்களா, இல்லையா?

கோடிக்கணக்கில் கட்டணம் வாங்கும் கட்டிடக்கலை நிபுணர்களால் வடிவமைக்கப்பட்டு, பளிங்குக் கற்களாலும் கண்ணாடிபோல இழைக்கப்பட்ட கருங்கற்களாலும் பதிக்கப்பட்ட நெடிய சுவர்கள், தூண்கள், அதே போன்ற தரைகள் இங்கே கை வைக்கலாமா, இங்கே கால் பதிக்கலாமா என்று தயங்க வைக்கின்றன.

மைய அளவில் குளிரூட்டப்படும் அந்த மாளிகைக்குள் கொஞ்சம் கூட தூசு வந்துவிடுவதற்கும் வாய்ப்பில்லை. மனிதர்கள் விடும் மூச்சுக் காற்று மூலம் மட்டுமே அழுக்காகிவிடலாம். இருந்தபோதும் பளபளக்கும் தரையையும், சுவர் கண்ணாடிக் கதவுகள், சன்னல்களையும் எப்போதும் சிலர் துடைத்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

பத்தடிக்குப் பின்னே போகும் மனிதரையோ, நான்கு இருக்கைகள் தள்ளி உட்கார்ந்திருக்கும் உறவினரையோ, குரல் கொடுத்து அழைக்கும் சூழல் அங்கு இல்லை. அப்படி யாராவது குரல் எழுப்பினால் அவர் பைத்தியக்காரன் அல்லது அநாகரிகப் பேர்வழி போலப் பார்க்கப்படுவார். முன்னால் போகும் மனிதரைச் சிறிதுகூட ஓசை எழுப்பாமல் ஓடிப்போய் சமிக்ஞையால் அழைக்கிறார்கள்.

அப்படி என்ன எல்லோருமே இரகசியம் பேசுகின்றனர். இல்லை அதுதான் நாகரிகம். மனிதர்கள் பேசிக் கொள்ளும் ஓசைகூட அந்தச் சூழலை மாசுபடுத்தி விடும் என்ற அச்சம் அங்கு பரவி நிற்கிறது. இந்த அமைதியின் அவசியத்தைப் புரிந்து கொள்ள முடியாத ஆரம்பப்பள்ளி மாணவனை அழைத்துக் கொண்டு வந்திருக்கும் பெற்றோர் பாடு திண்டாட்டம்தான். அடிக்கொரு தடவை உதடுகளின் முன்பு ஒற்றை விரலை வைத்து ''உஸ்! உஸ்!'' என்று அவனை எச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இந்த அளவு சுத்தம் பராமரிக்கப்படும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும் குழந்தைகள் சிறுநீரோ மலமோ கழித்துவிட்டால் என்ன செய்வது என்று தாய்மார்கள் தவிக்கிறார்கள்.

அங்கே வரவேற்பு மேசைக்கு அப்பால் இரண்டு மூன்று பெண்கள் கணினியின் திரையை முறைத்துக் கொண்டு தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொள்கிறார்கள். வரவேற்பாளர் என்ற பெயரில் பிறப்பாலும், இரத்தத்தாலும்


படிப்பகம்

www.padippakam.com

நம் ஊர்ப் பெண்கள். தோற்றத்தால், நடை உடை பாவனைகளால் ஐரோப்பிய - அமெரிக்கத் தோரணைகளுடன் பதுமைகளாக இருக்கிறார்கள். நுனிநாக்கு ஆங்கிலத்தில் நம்மோடு பேச்சுக் கொடுக்கும் அவர்களிடம் தமிழில் பேசினால் அதே நுனி நாக்கில் ''தமிங்கிலத்தில்'' பதில் கூறுகிறார்கள்.



அங்கே பணிபுரியும் ஊழியர்கள், மருத்துவர்கள் எல்லோரும் இதேபாணியில் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள். நோயாளியோ அவரது உறவினர்களோ இயல்பான முறையில் அணுகி ஆலோசனை பெற முடியாது. வாயைப் பொத்திக் கொண்டு மருத்துவரிடம் கெஞ்சலாகவோ, கிசுகிசுவென்றோ முனகத்தான் முடியும். மருத்துவம் சேவைத் துறையென்று பட்டியலில் சேர்த்துள்ளார்கள். மனிதர்களுக்கு மனிதர்கள் சேவை செய்வதாக இல்லை. ''கரன்சி'' நோட்டுக்களை எண்ணும் எந்திரம் வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்வதைப் போன்றுதான் உள்ளது.

மருத்துவமனைகள்தானே, இயல்பாக இருக்க வேண்டிய தூய்மையும் அமைதியும் சற்று தூக்கலாக இருக்கிறது என்று சமாதானம் கூறலாம். ஆனால், நகரங்களில் வேகமாகப் பரவி வரும் நாகரிகம், பண்பாடாக இது மாறிவருகிறது. வங்கிகள், விடுதிகள், பன்னாட்டு மற்றும் கூட்டுப் பங்குத் தொழில்கழகங்கள், புத்தகக் கடைகள், தங்கும் விடுதிகள் - உணவு விடுதிகள், சுயநிதிக் கல்லூரிகள், நுகர்பொருள் விற்பனையகங்கள் எங்கு போனாலும் மிரட்டும் தூய்மை, மயான அமைதி, அச்சுறுத்தும் அழகு.

வயல்வெளிகளில் சேறு பூசிக் கொண்டு ஓடும் உழவு எந்திரம் - டிராக்டரின் டயர்களை தினமும் எண்ணெய்ப் போட்டுத் துடைத்து ''கண்ணங்கரேல்'' என்று விற்பனையகங்களில் காட்சிக்கு வைத்திருக்கிறார்கள். புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறக்கும் மோட்டார் வாகனங்கள் வண்ணம் மாறாமல் கடைகளில் காட்சிக்குப் பளபளக்கின்றன.

பல அடுக்குகளைக் கொண்ட வணிக வளாகங்கள், நீரூற்றுகள், வண்ண வண்ண விளக்குகள், அலங்கரித்த பொம்மைகள் இவ்வளவும் கொண்ட துணிக் கடைகள், நகைக் கடைகள், தொலைக்காட்சிப் பெட்டிகள்

**சென்னையின் புத்தம் புதிய புத்தகமாளிகைகள் அழகானவை; ஆனால் அவற்றைப் பார்த்து ஏங்கத்தான் முடியும். அழகற்ற நடைபாதைக் கடைகளில்தான் நாம் வாங்க முடியும்.**

மின்மயமான சமையலறைகள் முதல் வாசனைத் திரவியங்கள் வரை எல்லாம் வெளிநாட்டுச் சரக்குகள். அங்கும் கூட ''நம்மவர்கள்''. ஆனால் ஐரோப்பிய - அமெரிக்கத் தோரணையில் அதே நுனி நாக்குத் ''தமிங்கிலத்தில்'' பேசி விற்கிறார்கள்.

இதற்கு நேர்மாறானதாக நமது மக்களின் நாகரிகமும், பண்பாடும், தூய்மை - அழகு - அமைதி பற்றிய கண்ணோட்டமும் இருக்கிறது. இவையெல்லாம் நமது மக்களின் தவிர்க்க முடியாத தொழில் - சமூக - வாழ்க்கைத் தேவைகளில் இருந்து பிறக்கின்றன. மேட்டுக்குடியின் கழிப்பறை - வீடு கழுவி, பாத்திரங்கள் துலக்கி, துணி துவைத்து, தோட்டம் கொத்தி - நீர்வார்த்து சுத்தப்படுத்தும் - அழகுபடுத்தும் மக்கள் சொந்தப் புத்தியில்லாத சோம்பேறிகள் என்பதாலா நகரத்துச் சேரிகளில், குப்பங்களில் வசிக்கிறார்கள்?

''மீன் மார்க்கெட்'', ''சந்தைக் கடை'' என்றெல்லாம் ஏளனமாகப் பேசப்படும் இடங்களில்தான் உண்மையான சந்தை ஜனநாயகம் நிலவுகிறது. எத்தனை விதமான மனிதர்கள், எத்தனை விதமான உணர்வுகள். சுவைக்கும் தேவைக்கும், வருமானத்துக்கும் தகுந்தவாறு பேரங்கள் படியும் சமூகச் சங்கமம். எல்லாவற்றையும் ''பாலித்தீன்'' பைகளில் போட்டு முத்திரை குத்தி, குறித்த விலைக்கு வாடிக்கையாளர் தலையில் கட்டும் அதிகார தோரணையில் விற்கப்படும் ''கம்பெனி''ச் சரக்குகள் இல்லை. ''டப்பா'' உணவும் புட்டி பானமும், இயந்திர வாழ்வுமாக மக்களை அவை மாற்றுவதில்லை.

நமது நகரங்களை அந்நியமயமாக்குவது, இப்போது உலகமயமாக்குவது, அதற்கேற்ப அழகுபடுத்துவது என்பது ஒரு கோரமான விமான விபத்தால் ஒரு 25 ஆண்டுகள் தள்ளிப் போய்விட்டது. நேரு - இந்திரா பரம்பரையின் இளைய இளவரசர் சஞ்சய் காந்தி எண்பதுகளில் பட்டங்கட்டி அரியணையேறி இருக்க வேண்டியவர் - அவர் மட்டும் டெல்லி விமான விளையாட்டின்போது மாண்டு போகாமலிருந்தால் அப்போதே நமது நகரங்கள் அழகுமயமாவது நிகழ்ந்திருக்கும்.

குரூரமான முறையில் காரியங்களைச் சாதிப்பது சஞ்சய் காந்தி அணுகுமுறை.

அவரது அண்ணன் ராஜீவ் வேறொரு அணுகுமுறையை முன்வைத்தார். பொருளாதாரச் சீரமைப்பு, புதிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டு ஆலைகளை மூடி ஏழை - எளிய மக்களின் வாழ்வாதாரங்களைப் பறித்து விடுவது; தொழிலையும் சந்தையையும் பன்னாட்டுத் தொழில் கழகங்களுக்குத் தாரை வார்த்து விடுவது; இவற்றால் பரவும் அந்நிய மோகமும் மேலைநாகரிக - பண்பாட்டுப் படையெடுப்பும் நகரங்களை அழகுபடுத்துவதற்கான சூழலை உருவாக்கி விடும்.

நகர்ப்புறத் தூய்மை, அமைதி, அழகு என்றாலே ''நம்மவர்கள்'' அடிக்கடி போய்வரும் சிங்கப்பூரை அடுத்து கோலாலம்பூரை ''ஓகோ'' என்று புகழ்கிறார்கள். பன்னாட்டுத் தொழில் கழகங்களின் சந்தை நகரங்கள்தாம் இவை. இன்னும் மேட்டுக்குடிகளின் பிரதிநிதியாக சிவசங்கரி, உதயமூர்த்தி, மணியன் போன்றவர்கள் மேற்கே ஐரோப்பிய அமெரிக்க நகரங்களை, கிழக்கே ஜப்பான் - ஆஸ்திரேலிய நகரங்களை வரிசைப்படுத்துகிறார்கள்.

அங்கெல்லாம் சாலைகளில் அப்படியே சோறு போட்டுத் தின்னலாம், அவ்வளவு சுத்தம் என்று பூரித்துப் போகிறார்கள். சாலைகளில் குப்பை போட்டால் பிடித்துப் போய்த் தண்டித்து விடுவார்கள். அதைவிட மக்களுக்கே ஒழுங்கு சுத்தம் பற்றிய


படிப்பகம்

www.padippakam.com

சமூக விழிப்புணர்வு ஏகத்துக்கும் பொங்கி வழி கிறது என்று பீற்றிக் கொள்கிறார்கள். மேலை நாடுகள் என்றால் அங்கே அமைதி பூத்துக் குலுங்கு கிறது. மக்களே நேர்மையின், நாகரிகத்தின் கலங்கரை விளக் கமாக இருக்கிறார்கள்; சட்டம் ஒழுங்கைத் தெய்வமாக வைத்துப் பூசை போடு கிறார்கள் என்றெல்லாம் புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

இதெல்லாம் அப்பட்டமான புளுகு தாம் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அதையெல்லாம் மேலை மோகத்தில் மூழ்கிப் போன அக்கிர காரத்து ஆசாமிகள் சொல்ல மாட்டார்கள். இருந்தாலும், நியூயார்க், இலண்டன், பாரிசு போன்று இல்லா விட்டாலும் சிங்கப்பூர், சியோல், கோலாலம்பூர் மாதிரி நமது நகரங்கள் மாறவேண்டும் என்று ரஜினி, சோ போன்றவர்கள் அடிக்கடி பேசிவரு கிறார்கள்.

சில போலீசு அதிகாரிகளைப் பற்றித் திண்ணைப் பேச்சு வீரர்கள் சவடால் அடிப்பதைக் கேட்டிருப் பீர்கள். ''அவர் பயப்படாத வீராதி வீரன் சூராதி சூரன். ரோட்ல யாரும் எச்சில் துப்பக் கூடாது, பீடி சிகரெட் பிடித்துக் கொண்டு, அரட்டை அடித்துக் கொண்டு வெட்டியாய்ச் சுற்றக்கூடாது. சட்டையைக் கழட்டிப் போட்டு ரோட்டைச் சுத்தம் செய்யச் சொல்வார். வெட்டிப் பேர்வழிகளை, கொத்தாகப் பிடித்து ரெண்டு விளாசுவார். சூதாடி யையோ, குடிகாரர்களையோ பிடித்து வெறுஞ் ஜட்டியோடு டேசனுக்கு இழுத் துட்டுப் போய் முட்டியைப் பேத்திடு வாரு.''

''சாமி'' சினிமா பாணியில் இப்படி ''ஹீரோத்தனம்'' செய்வதற்கு எந்த அதிகாரிக்கும் முன்பு உரிமையும் கிடையாது, அதிகாரமும் கிடையாது. ஆனால், இப்பாது போலீசுகாரர்களுக்கு அந்த அதிகாரம் வந்துவிட்டது!

பெரு நகரங்களில் பகுதி பகுதி யாகத் தூய்மை மண்டலங்கள் என்று அறிவிக்கப்பட்டு வருகின்றன. இங்கெல்லாம் சுவரொட்டிகள் ஒட்டவும், சுவரெழுத்துக்கள் எழுதவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. சுவர்க ளெல்லாம் பொட்டும் பூவும் பறிக்கப் பட்ட விதவைக் கோலத்தில் காட்சி தரு கின்றன. ஆங்காங்கே மஞ்சள் வண்ணம் பூசி கட்டங்கட்டி, ''இங்கே சுவர் விளம்பரம் செய்யக் கூடாது.



**கின்லேயும் பிஸ்லேரியும் 'அழகழகாய்' கடைகளில் கொலுவிருக்க, இவர்கள் ஏன் 'அசிங்கமாக'த் தண்ணி லாரியை மொய்க்கிறார்கள்?**

மீறினால் தண்டிக்கப்படுவீர்கள்'' என்ற எச்சரிக்கை மிரட்டுகிறது.

அம்மை போட்டதைப் போல நக ரெங்கும் போலீசு சாவடிகள் முளைத்து குடிமகன்கள் / குடிமகள்களைக் கண்காணித்து வருகின்றன. எங்காவது மக்கள் இயக்கங்களின் சுவரெழுத்தோ, சுவரொட்டியோ கண்ணில் பட்டால் போதும், காத்திருக்கும் கழுகுகள் உடனே பாய்ந்து கொத்தாகத் தூக்கிக் கொண்டு போய் விடுகின்றன. நகரத் தூய்மையைக் கெடுத்துவிட்டார்கள் என்று மட்டும் வழக்குப் போடுவ தில்லை. இனக் கலவரத்தை, வன்முறையைத் தூண்டினார்கள், ஆயு தங்கள் வைத்திருந்தார்கள், அரசைக் கவிழ்க்கச் சதி செய்தார்கள் என்று மனம் போனபடி வழக்குகள் பாய்கின்றன. இதற்கென ''பொடா'', ''தடா'' கூடப் பாயலாம்.

நகரங்களின் அமைதி கெடுகிறது, போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படு கிறது என்று சொல்லி நகரின் மையப் பகுதிகளில், முக்கிய ஊர்வலம் - பேரணி, பொதுக்கூட்டங்கள் நடத்து வதற்கு சாலைகளில் தடை விதித்திருக் கிறார்கள். ஆள் நடமாட்டம் இல்லாத சாலைகளில், நகரின் ஏதோ ஒரு மூலையில் கூட்டங்களும் அமைதி யான உண்ணாவிரதங்களும் மட்டுமே நடத்த அனுமதிக்கின்றனர். அதுவும் தடை செய்யப்படலாம். தற்போது அனுமதி பெற்று நடத்தப்படும் ஊர்வலத்தில் என்னென்ன முழக்கம் போடலாம், போடக்கூடாது, பொதுக் கூட்டத்தில் என்னென்ன பேசலாம் பேசக்கூடாது என்று ''நீதி மன்றங்கள்'' நிபந்தனைகள் விதிக்கின்றன.


அரசியல் இயக்கங்களின் பிரச்சாரம், பேரணி, பொதுக் கூட்டங்களால் நகரின் தூய்மை, அமைதி அழகு கெடுகிறது என்று கூறும் இந்த அரசுதான் மூலைக்கு மூலை மதுக்கடைகளைத் திறந்து ''குடி''மக்களைச் சாலைகளில் புரளச் செய்கிறது. அதேசமயம் உள்ளாடைகளுடன் நவீன அச்சுமுறையில் தயா ரிக்கப்பட்ட, ஆண்களும் பெண்களும் நிறைந்த பாலு ணர்வைத் தூண்டும் வாசகங்களும் படங்களும் நிறைந்த விளம்பரப் பல கைகள் நகரங்களின் முக்கியச் சாலைச் சந்திப்புக்களில் இரவைப் பகலாக்கி கொண்டிருக்கும் விளக்கொளியில் அழகைக் கூட்டுகின்றனவாம்.

அதேபோல, கிராமங்களில் வாழ வழியின்றி நகரங்களுக்குப் பிழைப்பு தேடி நடைபாதைகளின் சாக்கடைக் கால்வாய்களின் ஓரங்களில் அண்டி யிருக்கும் சாமானிய மக்கள், புறம் போக்கு நிலங்களில் குடிசைபோட்டுத் தலைமுறை தலைமுறையாய் வாழும், வாடும் ஏழை எளியவர்கள், மழை யிலும் வெய்யிலிலும், இரவும் பகலும் துடுப்பு வலித்துக் கடலை நம்பி வாழும் குப்பத்துக்காரர்கள் - இவர்களெல்லாம் நமது பட்டினங்களின் அழகைக் கெடுக்கும் அசிங்கம்; எல்லோரையும் அள்ளிக் கொண்டு போய் ஊருக்கு வெளியே வீசிவிடவேண்டும் என்கிறார்கள்.

பாசிச பயங்கரவாதிகள் தாம் இப்படிச் சிந்திக்க முடியும். இரத்தக் கலப்பால் ஆரிய இனத் தூய்மை மாச டைந்து விட்டதெனக் கூறி தூய்மைப் படுத்தும் பரிசோதனைகள் நடத்தினான் இட்லர். குஜராத் கிராமங்களில் வாழும் இசுலாமியர்களைக் கொன்றொழித்துத் தூய்மைப்படுத்தும் பரிசோதனையில் இந்துமதப் பாசிச பயங்கரவாதிகள் ஈடு பட்டனர். இந்த வகையிலே நமது மக்களைக் கூண்டோடு வெளியேற்றி நகரங்களைத் தூய்மைப்படுத்துகி றார்கள். நகரங்களையெல்லாம் ஏகாதி பத்தியத் தரகர்களிடமும், பன்னாட்டு நிறுவனங்களிடமும், தாரை வார்த்து விடுவார்கள்; அவர்களோ நகரை ''அழகுபடுத்துவார்கள்''. ஆனால் தமது பொருட்களை வாங்கும் வாடிக்கையா ளர்களும், எடுபிடிகளும், தரகர்களும் தவிர உள்நாட்டு மக்கள் உள்ளே நுழையக் கூடாது என்று தடைபோட்டு விடுவார்கள். இந்தத் தூய்மை, அமைதி, அழகு நமக்கு வேண்டுமா?

❑ சாத்தன்

www.padippakam.com



# எலி

துரை. சண்முகம்

''**ச**ரோஜா! சரோஜா!'' வாசலில் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்த கண்ணன் அலற ஆரம்பித்தான்.

''வர்றங்க'' சலிப்போடு முந்தானையில் கையைத் துடைத்தபடி வேகமாய் வந்தாள் சரோஜா. ''வீட்ல இருந்தா போதுமே சரோஜா சரோஜான்னு கூப்பிட்டுகிட்டே இருந்தா அடுப்படியில வேல ஆக வேணாம். என்ன வா கொப்புளிக்க தண்ணியா?''

''ஏய் எரும அங்க பாருடி!'' வாசலில் கிடந்த செத்த எலியைக் கண்ணன் காட்ட ஊவே எனக் குமட்டியபடி காறிக் காறித் துப்பினாள் சரோஜா.

''காலைல வாசக் கூட்டுனியே கண்ணுக்குத் தெரியல?''

''சாணிக் கரைச்சுப் போடறப்பக் கூட இல்லீங்க! இப்பதான் எந்த நாயோ சத்தம் போடாம வேல பண்ணிருக்கு! காலைல காட்டியும் அரை டப்பிப் பவுடரை அடிச்சிட்டு வாசப்பக்கம் தலை தொவட்டுறாளுவ, அடுத்தவங்க வீட்டு வாச முன்னாடி செத்த எலியைத் தள்ளி விடுறோம்னு அறிவில்ல. திருட்டு நாய்ங்க...'' எலிக்கு ஒப்பாரி வைப்பது போல அருவருப்பாய் நொடிக்கு ஒரு தரம் அதைப் பார்த்துப் பார்த்து இன்னும் வேகமாய் ஜாடை பேச ஆரம்பித்தாள் அவள்.

செத்துக் கிடக்கும் எலியை ஆராய்வதுபோல பல கோணத்தில் பார்த்தான் சரோஜா வீட்டுக்காரன். ''ஏய் தலைல ரத்தம் வந்துருக்கு பாத்தியா, அடிபட்ட எலிதான்.''

''ஆமாங்க எந்த நாயோ கூண்டுல அடிபட்டதக் கொண்டாந்து இங்க தள்ளி வுட்டுருக்குங்க.''

அருகே போய்க் குனிந்து பார்த்த பையனை ஒரு அதட்டுப் போட்டான் கண்ணன்.

''எப்பா மேல வவுத்துல கொத்துன மாரி இருக்கு பாரேன்.''

''ஆமா இவருதான் கொத்துனதப் பாத்தாரு உள்ளார போடா'' பையனை அவன் விரட்டியடித்தான்.

''ம்கூம், பொண நாத்தம்,'' முகத்தைச் சுழித்துக் கொண்டவன் - ''இல்ல, இல்ல, இவன் பஞ்சாயத்து போர்டு ஸ்கூல் கிளர்க்குதான என்ன பண்ணிடுவான்னு நினைக்கிறானுவ, பாரேன் ஒரு நாளு என் வேலையக் காட்டுனாதான் இந்தக் காலனிக்கே புரியப் போவுது.''

தன்மானத்திற்குப் பங்கம் வந்துவிட்டதுபோலச் சுற்றிலும் பார்த்து ஆத்திரப்பட்டான். யாரும் அக்கம் பக்கத்தில் வெளியே வராமல் நேரம் கூடக்கூட எலியின் மீதான அருவருப்பு எதிரிகளின் மீதான கோபமாக மாறிக் கொண்டிருந்தது. தாடையைத் தடவியபடி செத்த எலிக்குப் பக்கமாய்ப் போய் நின்று நோட்டமிட்டவன் கொஞ்சநேர அமைதிக்குப்பின் ''ஏய்! இங்க வா'' என்று மெதுவாக அடித்தொண்டையால் வீட்டுக்குள்ளிருந்த மகனைக் கூப்பிட்டான். சரோஜாவும் வா வா என ஜாடை காண்பித்தவாறு அக்கம் பக்கம் நோட்டமிட்டாள்.

கையில் தயாராக வைத்திருந்த குச்சியை மகன் கையில் திணித்த கண்ணன் ''பக்கத்து வீட்டுப் பக்கம் தள்ளிவுட்டுட்டு வந்துடு என்ன'' என்று பக்கத்து வீட்டு வாசல் பக்கத்தை ஜாடை காண்பித்தவாறு வீட்டுக்குள்ளே மனைவியுடன் தாவி வந்து நின்று கொண்டான்.

குச்சியை வாங்கிய சின்னப் பையன் எலியை மெதுவாகப் புரட்டுவது அவனையே புரட்டி எடுப்பது போல ஆத்திரம் வந்தது கண்ணனுக்கு. புரட்டிக் கொண்டே ''எங்கப்பா?'' என்று வாசலிலிருந்து சத்தமாய்க் கேட்டான் பையன். ''எரும, கத்துது பாரு, புள்ளையா இது, எமன்'' என்று கடுப்பாகிப் போனான். ''அண்டா வாயத் தொறக்காத'' என்று அடித் தொண்டையால் அதட்டிய சரோஜா கண்ணை ஒரு சிமிட்டுச் சிமிட்டி ஒரு பக்கமாய்த் தாடையை அசைத்துக் காட்டினாள்.

பதட்டத்தில் சின்னப் பையன் விழித்தபடி தன் வீட்டுப் பக்கமே எலியைப் புரட்டிக் கொண்டு வர ''ஐயோ பெத்தனே'' என்ற தலையிலடித்துக் கொண்டான் கண்ணன்.

''கம்முனாட்டி, பக்கத்துல தள்ரா, பக்கத்துல தள்ரா'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு, அவன் தன் மகனை எரித்துவிடும் பார்வையைப் பார்க்க, பயலும் பயத்தோடு ஒரு நெம்பு நெம்ப எலி மேலே போய் அதே இடத்தில் திரும்ப விழுந்தது.

பொறுமை இழந்த கண்ணன் வீட்டுக்குள்ளிருந்தபடியே அடிப்பது போல் மகனுக்கு ஜாடை காண்பிக்க, அவசரமாகப் பக்கத்து வீட்டுத் திசையில் எலியைத் தள்ளி விட்டு விட்டு குச்சியோடு சந்துப் பக்கம் ஓடி விட்டான் பையன்.

எலி நியாயம் கேட்பதுபோல் முன்காலை நீட்டியபடி பக்கத்து வீட்டு வாசலில் மல்லாந்து கிடந்தது.

''எரும, திங்கதான் லாயக்கு; ஒவ்வொன்னு சத்தம் போடாம சமுத்திரத்தையே முழுங்குது, புள்ளையா இது சின்ன வேலைக்கே ஊரையே படை கலைக்கிடும். இந்த குச்ச வேற அப்டியே எடுத்துக்கிட்டுப் போறாம் பாரு'' கோவத்தைத் தீர்க்க பையன் கைக்குக் கிடைக்காத ஆத்திரத்தில் கண்ணன் புலம்ப பையனோ கக்கூசுக்குள் போனவன் வெளியே வரவேயில்லை.

●●●

**வா**சல் பக்கம் வந்த சாந்தி திடுக்கிட்டுப் போனாள்.

''என்னங்க இது அநியாயம். இப்பதான் கோலத்தைப் போட்டுட்டுப் போனேன். நடுவுல பரங்கிப்பூ வெச்ச மாதிரி செத்த எலி வந்து கெடக்கு. எதும் காக்கா கீக்கா போட்டுருக்குமா!'' முனகிக் கொண்டே வானத்தை நோட்டமிட்டாள்.

''இல்லையே, இருந்தா கூட்டமா வந்து கத்துமே. எந்தத் திருட்டுக் காக்கா பண்ணுன வேலையோ, சே... சாப்ட


படிப்பகம்

www.padippakam.com

தெல்லாம் வாய்க்கு வருது. உவ்வாவ்.''

சாந்தியின் கணவன் மாணிக்கமும் விருட்டென்று வாசல் பக்கம் வந்து எலி வயிறு உப்பிக் கிடப்பதைப் பார்த்த வுடன் ''ச்சேய் கருமம்'' என்று முகத்தைச் சுருக்கி ஒநாய் போல கீழ்ப்பார்வை பார்த்து நெளிந்தான்.

''இங்க உள்ளதெல்லாம் படிச்ச நாய்ங்கதானா? இப்படி அநியாயம் பண்ணுதுங்களே, மகா மட்டமா இருக்கு போங்க'' - மாணிக்கம் கத்திய கத்தில் காலனியில் உள்ள ஆட்கள் அரசல் புரசலாக எட்டிப் பார்க்க ஆரம் பித்தனர்.

''முந்தா நாகூட, இப்படித்தான் மீனு முள்ள கொண்டாந்து யாரோ எங்காத்து வாசப்பக்கம் போட்டிருக்கா, கிரகச் சாரம், யாருன்னு அந்த பகவானுக் குத்தான் வெளிச்சம். காலனில குடுத் தனம் இருந்தாலே ஸ்ரமந்தான்'' - போகிற அவசரத்தில் எதிர் வரிசையிலி ருக்கும் ஐயர் செத்த எலியை ஆராய்ந்த வாறு சாந்தியிடம் துக்கம் விசாரித்தார்.

''நேக்கென்னவோ அது கிடக்கிற ஆங்கிள பாத்தா எவாளோ புரட்டி வுட்ட கணக்காத்தான் தெரியறது. இட் ஈஸ் வெரி டேஞ்சரஸ் அநிமல். இட் வில் இமீடியட்லி அட்டாக் அவர் ஹெல்த்'' கிடுகிடுவெனச் செத்த எலிக்கு ஒரு பொழிப்புரை போட்டுவிட்டு வேக மாக நகர்ந்து போனார் ஐயர்.

ஒரு நூல் ஆதரவுக் குரல் கிடைத்த வுடன் கோவத்தில் இன்னும் முன்னே றினான் மாணிக்கம். ''கெவர்மென்ட் ஸ்டாப்னா கம்முன்னு போயிடு வேன்னு நெனக்கிதுங்க கழுதைங்க. நமக்கு ஒன்னுந்தெரியாதுன்னு நெனக் கிறானுவ. இது அடிக்கடி நடக்குதுடி. அன்னக்கிகூட சைக்கிள ஒட்டி ரெண்டு தேரை செத்து கெடந்துச்சி தெரியுமா?'' கணவனின் புலனாய்வை எண்ணி வியந்தவளைப் போல வாயைக் கோணினாள் சாந்தி.

''ரெண்டுந் தானா வந்து அடிச்சி கிட்டா செத்துச்சி. எவளோ கூட்டிக் கூட்டித் தள்ளுவுடுறா, மக்கும்.''

வாசல் பக்கம் பையன்கள் விளை யாட செட்டு சேர்ந்து அலைந்து கொண்டிருந்தனர். கதவுப் பக்கம் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த சரோ ஜாவும், கண்ணனும் விளையாடக் கிளம்பிய மகனை வெடுக்கென இழுத்துப் பிடித்து உள்ளே தள்ளி னார்கள்.

''எங்கப்பன் குதிருக்குள்ளே இல்லேன்னு இப்ப போவுது பாரு கம்னாட்டி'' அப்பன் அதட்டல் போட வெதும்பிக் கொண்டே வீட்டுக்குள் போனான் பையன்.

கண்ணன் முன்னே காலை எடுத்து வைக்க, 'உஷ்' என்று ஜாடை காட்டி அவனை இருக்க வைத்துவிட்டு ''இருங்க நான் ஜாடையா பாக்குறேன்'' என்று மெதுவாக வாசல் பக்கம் வந்து தலை சீவுவது போல நின்று கொண்டாள் சரோஜா.

செத்த எலியின் நாற்றம் அந்தப் பகுதி முழுக்க வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. சாந்தியின் வார்த்தை யிலும் செத்த எலியின் வாடை அடிக்க ஆரம்பித்தது. ''ஒரு நாளப் போல இல்ல, இதே வேல, சோறத் திங்கிறாளு வளோ இல்ல வேற எதத் திங்கிறாளு வளோ, கூட்டி கோலம் போட்ட எடத் துல கொண்டாந்து எலியத் தள்ளுறா ளுவ. எந்த நாயின்னு தெரிஞ்சா இப்ப நல்லாயிருக்கும்.''

''சத்தம் போடாம பண்ணிட்டு நம்ம எழவெடுக்குதுங்க'' - யாரோ தன்னு டைய தலையில் அநாதைப் பிணத்தைக் கட்டிவிட்டதைப் போல மாணிக்கத் துக்கு ஆத்திரம் அதிகமானது.

''அவனவன் எழவ அவன் அவன் எடுக்க வேண்டியதுதானே.'' எலி நாற நாற பேச்சும் அருவருப்பாய்ப் போய்க் கொண்டிருந்தது.





படிப்பகம்

www.padippakam.com

**''ஹே, எலிய விட மோசமான ஆளுய்யா நீ, கூட இருந்தே நோண்டிட மாட்ட, நீ பேசுறியா பழக்கத்த பத்தி'' மாணிக்கம் ஆவேசமாய்க் கத்தினான். செத்த எலி மூச்சு முட்ட வைக்க அனைவருமே வாயைப் பொத்திக் கொண்டும் மூக்குக்குப் பக்கத்தில் கையால் காற்றை விரட்டிக் கொண்டும், நெருக்கமாய் வந்து கைகலப்பு நிலைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.**

காதில் வாங்கிக் கொண்டிருந்த சரோஜாவுக்கு உள்ளுக்குள் நறநறப்பு கூடியது. வாயைத் திறந்தால் செத்த எலிக்குப் பொறுப்பாகிவிடுவோம் என்ற பயத்தில் பேசாமல் இருந்தாலும் அதே நேரத்தில் வசவைத் தாங்க முடியாமல் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு அடிக்கொருதரம் வாசல் பக்கம் காறிக் காறித் துப்பிக் கொண்டிருந்தாள்.

நாலு பக்கமும் வசவை விட்டால்தான் எலியைப் போட்டவர்கள் பொறியில் சிக்குவார்கள் என்று சாந்தியும் சரளமாய் அவிழ்த்து விட்டாள்.

யார் பேச்சுக்கும் செவி கொடுக்காமல் எறும்புகள் முடிந்தவரை எலியை இழுத்துப் பார்க்க முயற்சித்துக் கொண்டிருந்தன.

''போட்ட நாய்ங்க வந்து ஒத்துக்கவா போவுது, நீ ஏண்டி வீணா கத்துற, பதிலுக்குச் செய்ய ஆரம்பிச்சோம்னா எல்லாம் தானா அடங்கும்'' என்று வார்த்தைகளில் எலிப் பாசாணத்தை வைத்துப் பேசினான் மாணிக்கம். மற்ற வீட்டுக்காரர்களும் மூக்கைப் பிடித்தபடி, ''ச்சே கருமம் சன்னலைச் சாத்து''என்று வளைக்குள் நுழையும் பிராணிகள் போல் வீட்டுக்குள் சென்றனர்.

''என்னமோ பைத்தியக்காரி கத்திக்கிட்டே இருக்கேன்னு நினைக்கிறாளுவோ. ஒரு நாளைக்கு கையுங்களவுமா மாட்றப்பல்ல இருக்கு. அவளுக மயிறு எங்கையில'' சாந்தி சத்தம் போட்டுப் பேசினாள். தலைமுடியை வாரிக் கொண்டிருந்த சரோஜாவுக்கு முகம் மாறிப் போனது. நிலைமை பொறுக்க முடியாமல் கண்ணன் வீட்டை விட்டு வெளியே வந்தான்.

''எம்மா, இத்தனப் பேரு காலனில குடியிருக்குறோம். நீ பாட்டுக்கு மயிறு மட்டன்னு ஓவரா பேசுறியே.''

''நீங்க ஏங்க சம்மந்தம் இல்லாம ஆஜராவுறீங்க, கொண்டாந்து போட்டவுங்க மாதிரில்ல குதிச்சிக்கிட்டு வாறீங்க'' என்றாள் சாந்தி. பார்த்துக் கொண்டிருந்த சரோஜா அள்ளி முடிந்தபடி பாய்ந்து வந்தாள். ''ஏம் பேசமாட்ட, ஆம்பளங்களப் பாத்து என்னமோ கைய நீட்டி நீட்டில்ல பேசுற, அப்புறம் நான் பேசுனா நாறிப் போய்டும் ஆமா.''

எலி மூக்கைப் பொத்திக் கொண்டு கிடப்பது போல வளைந்து கிடந்தது.

''நீ பேசுற வரைக்கும் ஏங்கை பூப்பறிக்குமா'' - பேசிய வேகத்தில் சாந்தியின் கொண்டை அவிழ்ந்து கொண்டது.

''தே, நீ பேசாம இரு, போட்டது வரட்டும், நான் வாயப்புடிச்சிக் கிழிக்கிறேன். என்னமோ இவங்கள்லாம் பொதுவா பேசாத ஆள் மாதிரி காட்டாப்பு காட்றீங்களா''.

''என்னங்க பத்துப் பேரு குடியிருக்குற எடத்துல பொதுவா திட்டுனா பாத்துக்கிட்டு இருக்க முடியுமா? பொம்பளைய அடக்குவீங்களா பேச விட்டு வேடிக்கை பாக்குறீங்க'' கண்ணன் பேசியபடியே முன்னேற செத்த எலியைப் பார்த்தவுடன் திரும்பவும் பின்னுக்கு வந்து கொண்டான்.

''நீ என்னையா பேசுற, எலி செத்து நாறுது. கமுக்கமா யாரோ தள்ளிவுட்டுட்டாங்க. ஒன் வீட்டில போட்டா வுடுவியா? நீ மொதல்ல பொண்டாட்டிய வுட்டு ஆளம் பாக்காதையா'' மாணிக்கம் முகம் சிவக்க கையை நீட்டி நீட்டிப் பேசினான்.

கோவத்தோடு முன்னோக்கி வந்த கண்ணன் கால் தவறி செத்த எலிமேல் வைக்கப் போய் தடுமாறி பிறகு சுதாரித்துக் கொண்டு ''இழுத்தெறிஞ்சன்னா எங்க போய் வுழுவ தெரியுமா?'' என்று ஆவேசமாகக் கத்தினான்.

''பாத்துர்லாம் வா'' என்று நாற்றம் தாங்காமல் காறிக் காறித் துப்பியபடியே மாணிக்கமும் முன்னே வந்தான்.

அதற்குள் சரோஜா பதட்டமாகி, ''வாங்க மல்லுக்கு நின்னுகிட்டு'' என்று வலுக்கட்டாயமாகக் கணவனை இழுத்துக் கொண்டு போனாள்.

''இந்தப் பக்கம் வாங்க'' என்று மாணிக்கத்தை ஒரு அதட்டல் போட்ட சாந்தி கையில் விளக்குமாத்துடன் வந்தாள். யாரையோ அடிப்பதாய் நினைத்து புடவைத் தலைப்பால் மூக்கைப் பொத்தியபடி எலியை பக்க வாட்டத்தில் ஓங்கி ஒரு அடி அடித்தாள். அது பாய்ந்து போய் அடுத்த வீட்டு வாசலில் விழுந்தது.

வீட்டிற்குள் நாற்றம் தாங்காமல் வெளியில் வந்து நின்று பார்த்த செல்விக்கு எலி வந்து விழுந்த வேகத்தில் கோவம் கொப்புளித்து வந்தது.

''நல்லா இருக்கு குமார் அம்மா, வேகமா கூட்டி இங்க தள்றீங்க. உங்களுக்குத்தான் தள்ளத் தெரியுமா? திரும்ப நான் தள்ளுனா பிரச்சன பெரிசாயிடும் ஆமா. பேசாம எடுங்க மொதல்ல.'' வரிந்து கட்டிக் கொண்டு வந்தாள் செல்வி.

''என்னமோ என் வூட்டு எலி மாதிரில்ல பாயுர. ஏதோ கொண்டாந்து என் வாசல்ல தள்ளிவுட்டுடிச்சி. நீயும் அந்தாண்ட தள்ளிவுட்டுப் போவியா, மத்தவங்க மாதிரி மறைச்சாப்ல செய்ற வேல நம்மகிட்ட கெடையாது'' விறைப்பாக நின்று கொண்டு பேசினாள் சாந்தி.

''நீ ரொம்ப சாமர்த்தியந்தான். இளிச்சவாயன் தலைல புளிச்சகீரையக் கட்டுன கதையா நல்லது செய்யிற மாதிரி செத்த எலியை இங்க தள்ளிவுட்டுட்டுக் கதையா பேசுற'' மூக்கைப் பிடித்தபடி பேசியதால், வல்லின வார்த்தைகளும் மெல்லினமாய் ஒலித்தன.

''ஒனக்குத்தான் கையுங்காலும் இருக்கா?'' வேகமாய் வீட்டுக்குள் போன செல்வி, விளக்குமாத்தோடு வந்து எலியைத் திரும்பவும் சாந்தி வீட்டுப் பக்கம் தள்ளிவிட, செத்தும் அவமானப்பட்ட மாதிரி எலி விளக்குமாத்தடி வாங்கிப் புரண்டு வந்து விழுந்தது. அவர்கள் ஏச்சிலும், பேச்சிலும் நாற்றம் தாங்காமல் உருமாறிப் போனதுபோல் கிடந்தது எலி.

''பொம்பளயின்னு கூடப் பாக்க மாட்டேன் அப்புறம்'' மாணிக்கம் ஓங்கிப் பேசினான்.

''என்னையா பெரிசா பொம்பள கிட்ட வந்து வீரத்த காமிக்கிற'' கையிலுள்ள குடும்ப மலரால் வாயைப் பொத்தியபடி நாற்றத்தில் மேற்கொண்டு வாயைத் திறக்க முடியாமல் தவித்தான் செல்வி வீட்டுக்காரன்.

''தாலுகா ஆபீசில வேல செஞ்சா பெரிய ஆளா நீ''

''டிரில் மாஸ்டர்லாம் ஓங் ஸ்கூல்ல, இங்க சேட்டையெல்லாம் காட்டக்


படிப்பகம்

www.padippakam.com

**செத்த எலியைக் கொம்போடு தூக்கிய சிறுவன் கோவிந்தா கோயிந்தா என்று கத்த மற்ற பையன்களும் "டண்டனக்க... ஏய் டண்டனக்க..." என்று சத்தம் எழுப்பிக் கொண்டே பெரியவர்களுக்கு இடையே புகுந்து காலனிக்குத் தொலைவிலிருக்கும் கருவக் கொல்லைப் பக்கம் ஓடினார்கள்.**

கூடாது. பஞ்சாயத்து போர்டு கிளார்க்கு மாதிரி பதுவுசா வுட்டுட்டுப் போய்டு வேன்னு நினைக்காத'' - செல்வி வீட்டுக்காரன் சொடக்குப் போட, ''பழக் கதோசத்த பாத்தா பொழைக்க முடியாது போல இருக்கு சார்'' என்று கண்ணனும் அவர் பேச்சில் சேர்ந்து கொண்டான்.

''ஹே, எலிய விட மோசமான ஆளுய்யா நீ, கூட இருந்தே நோண்டிட மாட்ட, நீ பேசுறியா பழக்கத்த பத்தி'' மாணிக்கம் ஆவேசமாய்க் கத்தினான். செத்த எலி மூச்சு முட்ட வைக்க அனை வருமே வாயைப் பொத்திக் கொண்டும் மூக்குக்குப் பக்கத்தில் கையால் காற்றை விரட்டிக் கொண்டும், நெருக்கமாய் வந்து கைகலப்பு நிலைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

●●●

காலனியில் விளையாடிக் கொண்டிருந்த சண்டை போட்ட வீடுகளின் பையன்கள் சத்தம் கேட்டு கிட்டே வந்து பார்க்க செத்த எலி மூக்கைத் துளைத்தது. பெரியவர்களை அவர்கள் கண்டு கொள்ளவில்லை, இடுக்கில் நுழைந்து எலியை அவர்கள் ஆராய்ந்து பார்த்தனர். ''ச்சே நாறுதடா'' என்றான் ஒருவன் காலரைத் தூக்கி மூக்கில் வைத்தபடி ''யேய் அந்த கவட்ட கம்ப எடுத்துக்கிட்டு வாடா'' என்றான் இன்னொருவன். அதற்குள் ஓணான் சுருக்கு வைத்திருந்த ஒரு சிறுவன் எலி வாலில் லாவகமாக மாட்டி இழுக்க சுருக்கு பிடித்துக் கொண்டது.

ஹேய்... என்று சிறுவர்கள் கோர சாகச் சத்தம் போட்டார்கள். சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்த பெரிய வர்கள் அப்போது சூடு சற்று தணிந்து, தங்களுக்குள் பஞ்சாயத்து பேசிக் கொண்டிருந்தனர். செத்த எலியைக் கொம்போடு தூக்கிய சிறுவன் கோவிந்தா கோயிந்தா என்று கத்த மற்ற பையன்களும் ''டண்டனக்க... ஏய் டண்டனக்க...'' என்று சத்தம் எழுப்பிக் கொண்டே பெரியவர்களுக்கு இடையே புகுந்து காலனிக்குத் தொலை விலிருக்கும் கருவக் கொல்லைப் பக்கம் ஓடினார்கள்.

செத்த எலி போனதும் ஒரு வழியாக நாற்றம் குறைந்தது. சத்தமும் குறைந் தது. அவரவர் வீட்டுக்குள் போனார்கள். சற்று நேரங்கழித்து மெல்ல வெளியே வந்த சாந்தி எலி கிடந்த இடத்தில் அடுப்புச் சாம்பலைக் கொட்டினாள். எட்டிப் பார்த்த செல்வியை சாந்தி சாதா ரணமாகப் பார்க்க, ''லேசுல போவா துங்க, பினாயில் தெளிக்கணும்'' என்று செல்வியும் அக்கறையோடு பேச்சு கொடுத்தாள்.

''போன வாரம் கோழி உரிச்சோம்ல, கழுவிவுட்டு தீர்ந்து போச்சு.. குமாரு அப்பாவ வாங்கிக்கிட்டு வாங்க, வாங்கிக்கிட்டு வாங்கங்கிறேன் எங்க அவங்க ஞாபகத்துல வச்சிக்கிறாங்க..''

ஹி... ஹி என்று பரஸ்பரம் சிரித்துக் கொண்டு உள்ளே போனார்கள்.

''யப்பா.... ஒரே புழுக்கம், காத்தும் அடிக்கமாட்டேங்குது, மழையும் பெய்வேனாங்குது. ஒரிசாவுல மழையாம், வெள்ளமாம், இங்க காயுது'' மாணிக்கம் பொதுவாகப் பேச ஆரம்பிக்க, ''என்ன சார் கோவமல்லாம் கொறஞ்சதா?'' என்று சிரித்துக் கொண்டே கண்ணனும் நெருங்கி வந்தான்.

''இல்ல கண்ணன் சார் எல்லாரும் டென்ஷன் ஆவுறது நேச்சர்தான?'' என்று சமாதானமாகப் பேசினார் மாணிக்கம்.

''எலிங்குறோம், பயங்கர பாய்சன் சார் அது'' செல்வி வீட்டுக்காரரும் பேசி யபடி நெருங்கி வந்தார்.

''பிளேக்னா சும்மாவா, கெட்ட ஜாதிசார் அது. அதான் சார் டென்ஷனா யிடுச்சு.''

''எங்க ஊர்ல கூட....''

— ஆளுக்கு ஆள் சகஜமாய் பேசிக் கொண்டிருந்தனர்.

●●●

''ஏய் வீட்டுப் பக்கம் சத்தம் இல்லடா'' என்று வியப்போடு வந்தார்கள் பையன்கள். ம்... ம்.. என்று மூக்கைத் தேய்த்தபடி ''ஏய்... என்னமோ நாறுதுல்ல'' என்றான் ஒருவன்.

''ச்சே.. எலியைத்தான் நாம கொண்டுபோயிப் பொதைச்சிட்டு வந்துட்டோமேடா..''

''இல்லடா, இங்கதான் நாறுதுங் குறேன்'' சிறுவர்கள் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தனர். ❑


புதிய வெளியீடு

அமெரிக்க ஏகாதிபத்தியம் வழங்கும்

**திடீர் ஜனநாயகம்**

ஒன்று வாங்கினால், ஒன்று கலவசம்

- அருந்ததி ராய்

(மே, 13, 2003 அன்று, நியூயார்க் நகரின் ஹார்லெம் என்ற கருப்பினச் சேரியில் நடந்த கூட்டத்தில் அருந்ததி ராய் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.)

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி வெளியீடு - நன்கொடை: ரூ.10




உலகின் ஆகப் பெரும்பான்மையான மக்கள் மட்டுமின்றி, முதலாளித்துவ ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அறிவுத்துறையினர் பலரும் அமெரிக்காவிற்கும் மறுகாலனி யாதிக்கத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகக் குரலெழுப்பத் தொடங்கியுள்ளார்கள். பிரபல எழுத்தாளர் அருந்ததி ராயின் இந்த உரை இதற்குச் சான்று.

நூல் கிடைக்குமிடம்:

கீழைக்காற்று வெளியீட்டகம்

10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.


அறிவிப்பு: இடம் பற்றாக்குறை காரணமாக ''குஜராத் - இந்துத்துவத்தின் சோதனைச் சாலை'' - தொடர் கட்டுரை இந்த இதழில் இடம் பெறவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# பண்பலையைக் கீறுவது எப்படி?

உண்மைச் சம்பவங்களைத் திரைப் படமாக்கும் ஆலிவர் ஸ்டோன் என்ற ஹாலிவுட் இயக்குநரின் *டாக் ரேடியோ* (Talk Radio) என்ற திரைப்படத்தை சமீபத்தில் 'பொதிகை'யில் பார்த்தோம். வானொலி என்ற அற்புதமான ஊடகத்தைப் பயன்படுத்தி, அமெரிக்க முதலாளித்துவச் சமூக அமைப்பையும், அதன் உள்ளே அங்கிங்கெனாதபடி எங்கும் ஊடுருவியிருக்கும் பிற்போக்குச் சிந்தனைகளையும் அவற்றின் அதிகாரத்தையும் சீண்டிப் பார்க்க முயன்று தோற்றுப் போன ஒரு இளைஞனின் கதை அது.

அரசியல் பொருளாதார பண்பாட்டு விசயங்களில் அமெரிக்க மக்களின் பொதுக் கருத்தை உருவாக்குவதில் தொலைக்காட்சிகளும் பத்திரிக்கைகளும் பெரும் பங்காற்றுகின்றன. இவையனைத்தும் ஒரு சில முதலாளிகளின் கையில்தான் இருக்கின்றன என்பது உலகறிந்த உண்மை. அமெரிக்கர்களின் விடுமுறை நாட்களையும், ஓய்வையும், அவர்கள் நாடும் பொழுது போக்குகளையும் கூட இத்தகைய முதலாளிகளே நெறிப்படுத்துகிறார்கள், கட்டுப்படுத்துகிறார்கள் - ஹாலிவுட் முதல் டிஸ்னிலாந்து வரை.

இந்த ஏகபோகத்திற்கு ஒரு மாற்று போலவும், அமெரிக்கக் கருத்துச் சுதந்திரத்திற்கு ஒரு அத்தாட்சியைப் போலவும், சமூகப் பிரச்சினைகளைப் பேசுவதற்கான ஒரு வடிகால் போலவும் தோற்றமளிக்கின்றன அமெரிக்க வானொலிகள். அநேகமாக அமெரிக்காவின் எல்லா ஊர்களிலும் உள்ளூர் வானொலி நிலையங்கள் இருக்கின்றன. உள்ளூர்ச் செய்திகள், அரசியல் - சமூகப் பிரச்சினைகள் குறித்த விவாதங்கள் ஆகியவையும் இவற்றில் இடம் பெறுகின்றன. இத்தகைய தனியார் வானொலி நிலையங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவை ஒரே முதலாளிக்குச் சொந்தமாக இருக்கின்றன என்பது போன்ற கேலிக்கூத்துகள் ஒரு புறமிருக்கட்டும். இன்றைக்கும் அமெரிக்க அதிபர் வாரம் ஒருமுறை வானொலியில் உரையாற்றுகிறார் என்பது இந்த ஊடகம் மக்களிடம் பெற்றுள்ள செல்வாக்கிற்கு ஒரு சான்றாக இருக்கிறது.

இனி திரைக்கதைக்கு வருவோம்.

● ● ●

விற்பனை அங்காடி ஒன்றில் சலிப்பான வேலையைக்கூட சுவாரசியமாகச் செய்துவரும் அந்த இளைஞனை ஒரு வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் சந்திக்கிறார். மூச்சு விடாமல் பேசும் அவனது பேச்சுத்திறனால் கவரப்பட்ட அவர் தனது வானொலி இரவு நிகழ்ச்சி ஒன்றுக்கு அவனை விருந்தினராக அழைக்கிறார். அந்த இரவுக் கலந்துரையாடலில் நமது இளைஞன் கலக்குகிறான். நிகழ்ச்சித் தயாரிப்பாளரே பொறாமைப்படுமளவுக்குப் பேசுகிறான். நேயர்களின் குதர்க்கமான கேள்விகளுக்கும் தடையின்றிப் பதிலளிக்கிறான். இறுதியில் வானொலி முதலாளி இவனையே இரவு நிகழ்ச்சியை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறார்.

விரைவிலேயே அவனது இரவு நிகழ்ச்சி பிரபலமடைகிறது. பொழுது போகாமலும், அதையே பொழுது போக்காகவும் ரசித்து மகிழும் அரட்டைப் பண்பை தனது நிகழ்ச்சியில் அவன் ஒழிக்கிறான். அவனது பேச்சு அக்கறையுடன் கேட்கப்படுகிறது. கேள்வி கேட்பவரின் போலி மேதாவித்தனத்தை மேம்போக்கான மனிதாபிமானத்தை, சமூக அக்கறையின்மையை பகிரங்கப்படுத்துகிறான். பேச்சின் போக்கிலே உரையாடுபவர் மறைக்க முயலும் அவரது உள்ளக்கிடக்கையை அவர்களுக்கே தெரியாமல் வெளியே கொண்டு வருகிறான். தொலை



பேசியின் மூலம் யாரும் அவனுடன் 'சும்மா' பேசமுடியாது.

அந்தச் சிறு நகரின் வழக்கமான அமைதியான இரவு நேரத்தை அவனது கூர்மையான விமரிசனம் கிழித்துச் செல்கிறது. வெள்ளை நிறவெறி, கருப்பின மக்களின் அவலம், யூதர்களின் ஆச்சாரமான பிற்போக்குத்தனம், முதலாளித்துவ வேட்கை, மனித உரிமை மீறல் அத்தனை விசயங்களையும் போட்டுடைத்துக் கலவரப்படுத்துகிறான். இவை தொடர்பான புள்ளி விவரங்களை விரல் நுனியில் வைத்து வாயடைக்க வைக்கிறான்.

இருப்பினும் இவனது ''எல்லை மீறிய பேச்சு'' வானொலி முதலாளியை கலக்கமடையச் செய்கிறது. தனது நிகழ்ச்சிக்கு முழுச் சுதந்திரமில்லையென்றால் தொடர முடியாது என்று அவரிடம் சண்டை போடுகிறான். விளம்பர இடைவெளிகளைக் கிண்டலுடன் அறிவிக்கிறான். ஒரு வானொலி நட்சத்திரம் என்ற முறையில் பல்வேறு நிறுவனங்களின் நிகழ்ச்சிகளுக்கும் செல்லுமாறு வற்புறுத்தும் முதலாளியிடம் தான் ''ஒரு விற்பனைப் பொருளல்ல'' என்று வாதிடுகிறான். சக ஊழியர்கள் அவன் மீது மதிப்பு கலந்த அன்பு வைத்திருக்கிறார்கள். இவனது விமரிசனங்களால் அவதியுறும் பழமைவாதிகள் பலர் அவனைத் தொலைபேசியில் மிரட்டுகிறார்கள். ஒவ்வொரு நாளும் அவனை உளவியல்ரீதியாகச் சித்திரவதை செய்கிறார்கள். இப்படிக் கலகலப்பும், கலவரமும் நிறைந்து நகர்கின்ற அவனது வாழ்க்கை தொடர்ந்து பிரச்சினைகளையே சந்திக்கிறது.

அவன் பிரபலமாவதற்கு முன்பு வேறு ஒரு வாழ்க்கையைத் தேடிச் சென்ற அவனது முன்னாள் மனைவி மீண்டும் அவனுடன் நட்புக் கொள்ள முனைகிறாள். அவனது இரவு நிகழ்ச்சியான கலந்துரையாடலில் ''நான் மீண்டும் உன்னை மணக்கமுடியுமா'' என்று கேட்கிறாள். விவகாரத்துக்குப் பின் அவளை ஒரு நண்பனாக வரவேற்கும் அவன் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் விதம் சுவாரசியமானது. பணம், ஆடம்பரம் தேடிச் சென்ற அவளது போலித்தனத்தை ஒரு கதையின் மூலம் வெளிக்கொணர்ந்து, அவளையே கோபமடையச் செய்து வெளியேற வைக்கிறான்.

இடையில் அவனது நிகழ்ச்சி தேசிய அளவில் ஒலிபரப்புவதற்கான வாய்ப்பு வருகிறது. அதற்கான வணிக ஒப்பந்தவிதிகள் அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்துகிறது. அதனால் அந்த



படிப்பகம்

www.padippakam.com

வாய்ப்பு இழுபறியில் இருக்கிறது. இதையெல்லாம் அவன் தன் நேயர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கிறான். ஒரு தனிமனிதனாக நின்று விமரிசிப்பதனால் ஏற்படும் பலவீனங்கள் அவனைத் தளர்ச்சியுற வைக்கின்றன. நள்ளிரவில் குடித்துவிட்டுத் தூங்கும் அவன் காலையில் நேரம் கழித்தே விழிக்கிறான். அப்போது எழும் உற்சாகம் இரவு குடிக்கும் வரை நீடிக்கிறது.

அப்படி வழக்கமாகத்தான் தொடங்கியது அந்த நாள். சற்றுத் தளர்ச்சியுடன் ஸ்டூடியோவிற்குள் நுழையும் அவன் நிகழ்ச்சியைத் தொடங்குகிறான். தொலைபேசியில் அழைப்புகள் வரத் துவங்குகின்றன. அவனை வெறுப்பேற்றும் வழக்கமான குரல்களும் மறக்காமல் வருகின்றன. ஒரு வயதான பெந்தகோஸ்தே பெண்மணி ''நீ இரத்தம் கக்கிச் சாவாய்'' என ஏசுவின் பெயரால் சாபமிடுகிறாள். அத்தருணத்தில் அந்நகரத்து மக்களின் அற்பத்தனத்தின் மீது பீறிட்டு வெடிக்கிறான். அவர்கள் வாழுகின்ற வாழ்க்கையை உள்ளபடி பேசுவது தவறா, அதன் அழுக்கை மறைக்க முடியாதபடி உற்பத்தி செய்வது யார், போட்டியும், பொறாமையும் வியாபார அநீதியும் கொண்டு வாழும் அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் கோபதாபங்களைத் தன்மீது கொட்டுவது ஏன் என்றெல்லாம் உணர்ச்சிகரமாகப் பேசுகிறான். திரையில் 5 நிமிடம் எந்தக் காட்சித் துண்டிப்பும் இல்லாமல் காமரா அவனையே சுற்றி வருகிறது. அவனது குமுறல் ஆவேசமாய் ஒலிக்கும்போது பின்னணியில் நகரத்துக் கட்டிடங்களின் விளக்குகள் சலனமின்றி ஜொலிக்கின்றன.

பேசி முடித்தபின் ''இன்று உனது பேச்சு அற்புதமாக இருந்தது'' 'என்று பாராட்டுகிறான் முதலாளி. அவனைக் காதலிக்கும் சக ஊழியரான ஒரு பெண் அவனை அன்புடன் வழியனுப்புகிறாள். காரை நோக்கி வருபவனை ஒரு நடுத்தர மனிதன் 'ஆட்டோ கிராப்' கேட்கிறான். அடுத்த கணம் கைத்துப்பாக்கியினால் சுட்டுக் கொல்கிறான். அவனது வழக்கமான இரவு அன்றுடன் ஒரு முடிவுக்கு வருகிறது.

• • •

அந்த இளைஞனை யார் சுட்டுக் கொன்றிருக்கக் கூடும் என்பது குறித்த புலனாய்வு நமக்குத் தேவையில்லை. தனது எல்லை மீறிய பேச்சுக்காக ஒரு வேளை அந்த வானொலி நிலையத்தின் முதலாளி அவனை வேலைநீக்கம் செய்திருந்தால் அதிலும் நாம் ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஆனால் அவனுடைய முற்போக்கான கருத்துக்களை அமெரிக்கச் சமூகத்தின் பிற்போக்குச் சக்திகள் கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள், தொலைபேசி மூலம் வானொலியில் அவனிடம் கருத்துப் போர் நடத்தியிருக்கிறார்கள். இறுதியாக 'யாரோ' அவனைச் சுட்டுக் கொலை செய்துமிருக்கிறார்கள்.

**பொழுது போகாமலும், அதையே பொழுது போக்காகவும் ரசித்து மகிழும் அரட்டைப் பண்பை தனது நிகழ்ச்சியில் அவன் ஒழிக்கிறான். அவனது பேச்சு அக்கறையுடன் கேட்கப்படுகிறது. கேள்வி கேட்பவரின் போலி மேதாவித்தனத்தை மேம்போக்கான மனிதாபிமானத்தை, சமூக அக்கறையின்மையை பகிரங்கப்படுத்துகிறான்.**

இந்தத் திரைப்படத்தில் பிற்போக்காளர்கள் காட்டும் இந்தச் சுறுசுறுப்பு அமெரிக்காவுக்கு மட்டுமே உரியதல்ல. நம்மூர் தினமணி, இந்து போன்ற பல பத்திரிக்கைகளில் வெளியாகும் வாசகர் கடிதங்களை ஒருமுறை படித்துப் பார்த்தாலே, யார் சுறுசுறுப்பாக இயங்குகிறார்கள் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். ஓய்வு பெற்ற அதிகாரிகளான கிழடுகளும், இந்துத்துவச் சக்திகளும் இவ்வாறு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்க, மக்கள் விடுதலை பேசும் 'முற்போக்கான' இளைஞர்களோ, ஒருநாளைக்கு 25 மணி நேரம் பாடுபட்டவர்களைப் போல மக்களைச் சலித்துக் கொள்கிறார்கள். தமது சோம்பேறித்தனத்திற்குப் பலவிதமான வியாக்கியானங்கள் தருகிறார்கள்.

இதற்கிடையில் தனியார் வானொலி நம் ஊருக்கும் வந்துவிட்டது. பண்பாட்டை மேலும் நாசமாக்கும் இந்த அலைவரிசைக்குப் பெயர் பண்பலை வரிசை. சென்னையில் சூரியன், மிர்ச்சி என இரு 24 மணிநேர அலைவரிசைகள், இன்னும் கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி என எல்லா இடங்களிலும் பண்பலை வரிசைகள்.

''அரசியல் சமூகப் பிரச்சினைகளைப் பேசக்கூடாது'' என்ற நிபந்தனையுடன்தான் இந்தத் தனியார் அலைவரிசைகளுக்கு உரிமம் வழங்கியிருக்கிறது அரசு. இந்த வானொலிகளில் நிகழ்ச்சிகளை வழங்கும் கவர்ச்சிகரமான ஆண்-பெண் குரல்களுடன் மக்கள் ஆர்வமாக உரையாடுகிறார்கள். மாணவர்கள், பெண்கள், சிறுவியாபாரிகள், உதிரித் தொழிலாளர்கள் என எல்லாப் பிரிவினரும் பேசுகிறார்கள், பேசுகிறார்கள், பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். நாமும் கேட்கிறோம், கேட்கிறோம், கேட்டுக் கொண்டேயிருக்கிறோம்.

இந்நிகழ்ச்சிகளில் அறிவிப்பாளர்கள் என்ன கேட்கிறார்கள், மக்கள் என்ன பேசுகிறார்கள் என்பது நாம் அறியாததல்ல. ''பில்டர் காபி, டோட்டல் உடான்ஸ், கடி ஜோக்ஸ், காதலா காதலா, காதல் நேரம், மணமான பெண்கள் மட்டும்'' இவையெல்லாம் நிகழ்ச்சிகள். ''எப்டி இருக்கீங்க, இன்று என்ன ஸ்பெஷல், ஜாலியாக இருந்துச்சா, உங்க நிகழ்ச்சி - குரல் சூப்பர், இந்தப் பாடலை யாருக்கு டெடிகேட் பண்ண விரும்புறீங்க...'' இவை பண்பலையில் பவனி வரும் சில கவிதை முத்துக்கள். இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டு இருக்கும் நாம் இவற்றில் எப்படித் தலையீடு செய்யப் போகிறோம் என்பதுதான் பிரச்சினை.

அப்படிச் செய்யவில்லை என்றால் ''கலியுகத்தில் காலம் கெட்டுப் போச்சு'' என்று சலித்துக் கொள்ளும் ஒரு பிற்போக்குச் சோம்பேறிக்கும் நமக்கும் வேறுபாடு இல்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் பண்பலையின் நிகழ்ச்சிகள் என்ன, அவற்றின் நேரடித் தொடர்புத் தொலைபேசி எண்கள் என்ன என்று தெரிந்து கொண்டு அந்த உரையாடல்களில் நாமும் நுழைய வேண்டும். தேனீக்களைப் போல அலை அலையாய்ப் படையெடுக்க வேண்டும். அப்படித் தொடர்ந்து கொட்டினால் பண்பலை வரிசைகளுக்கு ஒரு நெருக்கடியைத் தரமுடியும். இது குறித்த ஆலோசனைகள், குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் - அவற்றின் தொலைபேசி எண்கள், உரையாடிய அனுபவங்கள் ஆகியவற்றை வாசகர்கள் எழுதி அனுப்புமாறு வற்புறுத்துகிறோம்.

❑ வேல்ராசன்



படிப்பகம்

www.padippakam.com



# பாரதி அவலம்

❑ மருதையன்

*'தலித் முரசு'* இதழில் தொடர் கட்டுரையாக வெளிவந்த வே. மதிமாறனின் *'பாரதி'ய ஜனதா பார்ட்டி* தற்போது நூல் வடிவம் பெற்றுள்ளது. பாரதியின் கவிதைகளிலும் கட்டுரை களிலும் மலிந்து கிடக்கும் முரண்பாடுகளைப் பட்டியலிட்டுக் காட்டும் மதிமாறன், பாரதியிடம் வெளிப்பட்ட முற்போக்கு என்பது ''முதலாளித்துவ வடிவம் பெற்ற சனாதன தருமமே'' என்று அறுதியிடுகிறார்.

இந்நூல் பாரதி ரசிகர்களையும் பக்தகோடிகளையும் கொதித்தெழச் செய்திருப்பதில் வியப்பில்லை. இந்நூலிலி ருந்து பாரதியைக் காப்பாற்றும் பொருட்டு பார்த்திபராஜா என்பவர் *''பாரதி - கடந்த நூற்றாண்டுக் கவிஞர் பற்றிய ஒரு மதிப்பீடு''* என்ற நூலை வெளியிட்டுள்ளார். இந்த 'ஆய்வுக்கு'த் தரச் சான்றிதழாக பேரா. சிவத்தம்பியின் முன்னுரை செருகப்பட்டுள்ளது.

இரண்டாவது மறுப்பு நூல் பேரா. பாரதிபுத்திரனின் *''தம்பி - நான் ஏது செய்வேனடா''* என்ற நூல். ''அத்வைதத்தில் நம்பிக்கையுள்ள அசலான பிராமணன் சமதர்மக் கொள்கைக்கு இயற்கையாகவே வந்து சேருவான்'' என்ற புதியதொரு தரிசனத்தை இந்நூலுக்கான அணிந்துரையில் நமக்கு வழங்குகிறார் கோவை ஞானி.

இவையன்றி, இந்தியா டுடேயின் தளபதி இரவிக்கு மாரின் 'தலித்திய' விமரிசனம் ''பெரியாரைவிட பாரதி எவ்வ ளவோ மேல்'' என்கிறது. கவிதா சரண் இதழின் விமரிசகரோ ''படைப்பைத்தான் விமரிசிக்க வேண்டும், படைப்பாளியை அல்ல''என்று எச்சரிக்கிறார்.

மதிமாறனின் நூல் ஒரு ஆய்வே அல்லவென்றும், வெறு மனே பாரதியைப் பகிடி செய்திருக்கிறாரென்றும், மலிவான தரம் தாழ்ந்த நடையென்றும், எனவே அவரை அறிவாளி களின் ஜாதியிலேயே சேர்க்க முடியாதென்றும் இவர்களனை வருமே அவரைத் தள்ளி வைக்கிறார்கள்.

''சரி அறிவாளிகளே, தன் அறிவுக்கு எட்டியவரை அவர் கேட்டிருக்கும் கேள்விகளுக்கு உங்கள் பதில்தான் என்ன?'' என்று கேட்டால் ''பாரதி பயன்படுத்திய அந்தச் சொல்லுக்குப் பொருள் வேறு, இதைச் சொன்ன சூழல் வேறு, அவர் சொல்ல வந்த நோக்கம் வேறு'' என்று சப்பைக் கட்டு கட்டுகிறார்கள்.

அடுத்து வருவது வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் பெயரிலான தில்லுமுல்லு. ''அந்தச் சூழ்நிலைக்கு அவர் அவ்வளவுதான் சிந்தித்திருக்க முடியும், அந்தச் சாதியில் பிறந்து அன்று இவ்வளவு பேசியதே அதிசயம், அவரிடம் இருந்த இந்து மத உணர்வு வேறு இன்றைய மதவெறி வேறு, அவர் மத நம்பிக்கையுள்ள ஒரு கற்பனா சோசலிசவாதி'' என்று சுமார் 70 ஆண்டுகளாக அரைத்துப் புளித்த மாவையே மீண்டும் அரைக்கிறார்கள்.

இவ்வாறு விமரிசகர்களை ஒருமாதிரி மடையடைத் தாலும், பாரதியின் முரண்பாடு பேயாய் வந்து இவர்களையே அலைக்கழிக்கிறது.

இருட்டில் தனிவழி செல்பவன் தனது அச்சத்தை மறைத்துக் கொள்ள உரக்கப்பாடுவது போல, முந்தைய சப்பைக் கட்டுகளையே பிரித்துக் கோர்த்து விதம் விதமாக ஆலாபனை செய்து, தமது நிலைப்பாடுகளைத் தமக்குத் தாமே 'உறுதி' செய்து கொள்கிறார்கள். விமரிசனத்தின் அரவம் கேட்டவுடன் 'யாரது' என்ற ஒரு அசட்டுத் தைரியத்தில் நம்மை அதட்டுகிறார்கள்.

கூரைக்குக் கொள்ளி வைப்பவன் அசடா, அயோக்கியனா என்பதைப் பிறகு கண்டுபிடிப்போம். இவர்கள் அசடாகவே இருந்தாலும் இந்த அசட்டுத்தனத்தை நாம் அனுமதிக்க இயலாது. 30-களில் ஜீவா முதல் 80-களில் வலது, இடது கம்யூனிஸ்டுகள் வரை ஒரு நீண்ட பாரம்பரியமே பாரதிக்குக் காவடி எடுத்திருக்கிறது. தொலையட்டும். ஆனால் இன்று கண்முன்னே குஜராத்தைக் கண்ட பின்னரும் சொரணை வராமல் அழகியல் மயக்கத்தில் கிறங்கியிருந்தால் அதை அசட்டுத்தனம் என்று எப்படிச் சகித்துக் கொள்வது?


பாரதியை எத்தனை ஜாக்கி வைத்துத் தூக்கினாலும் காந்தியை விடக் கூடுதல் உயரத்துக்குத் தூக்க முடியாது என்பதை பாரதி பக்தர்கள் நிச்சயம் ஒப்புக் கொள்வார்கள். காந்தியின் மிதவாத இந்து தேசியம், அதன் அடிப்படையி லான மதச் சார்பின்மை, சாதி - தீண்டாமை குறித்த காந்தியின் கண்ணோட்டம் இவை எதையும் பாரதி தாண்டியதில்லை. 'பெருமைக்குரிய' அந்த காந்தியம் பார்ப்பன இந்துமத வெறியின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தி விடுமென்று பலரும் நம்பிக் கொண்டிருந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் சமீபத் திய குஜராத் இனப்படுகொலைகளுக்குப் பின்னர்தான் ''இந்துத்துவம் வளர்வதற்குக் காரணமான அடிக்கொள்ளியே காந்தியம்தான்'' என்ற உண்மை பலரால் 'கண்டுபிடிக்கப்' பட்டுள்ளது.

பாரதியின் கவிதைகளுக்கிடையிலும், கவிதைக்கும் கட்டு ரைகளுக்குமிடையிலும் உள்ள முரண்பாட்டில் தலையாயது இந்து தேசியம் தொடர்பானது. இந்த விசயத்தில் கனவுக்கும் எதார்த்தத்திற்குமிடையில், சூக்குமத்திற்கும் பருண்மையான தற்குமிடையில், உணர்ச்சிக்கும் தர்க்கத்துக்குமிடையில் பாரதி யிடம் நாம் காணும் முரண்பாட்டின் அடிப்படை எங்கே இருக் கிறது என்பதுதான் கேள்வி.

''ஒரு படைப்பாளி ஒரு வடிவத்தில் நல்லவனாகவும் இன்னொரு வடிவத்தில் தீயவனாகவும் தென்படுகிறான் என்று சொல்வது சரி அல்ல'' என்று இதற்குப் பதிலளிக்கிறார் பாரதி புத்திரன். ''குல்லாவுக்குத் தலை சரியாகத்தானே இருக்க வேண்டும்'' என்பது இவரது தர்க்கம்.

''இலக்கியத்தை, இலக்கிய வெளிப்பாடுகளைப் புரிந்து கொள்வதென்பது அவற்றின் உணர்வு, உணர்ச்சிப் பகைப் புலங்களைப் புரிந்து கொள்வதே ஆகும்'' என்று தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார் பேரா. சிவத்தம்பி.

பேராசிரியர் சொன்ன காரியத்தைத்தான் **புதிய கலாச் சாரம்** (அக். 2000) இதழில் வெளிவந்த *'பாரதி அவலம்'* எனும் கட்டுரை செய்தது. இருப்பினும் 'பாரதி பஜனை மண்டலி'யில் நாம் சேராத காரணத்தால் 'வரலாற்றுக் குருட் டுத்தனம், வக்கிரம்' என்ற இரண்டு சொற்களை 'புதிய கலாச்சார'த்தின் மீது கடாசிவிட்டுத் தனது அறிவொளி வீசும்



'பாரதி'ய ஜனதா பார்ட்டி விலை: ரூ. 30
ஆசிரியர்: ***வே. மதிமாறன்,***
வெளியீடு: தாத்தா ரெட்டமலை சீனிவாசனார் பேரவை, 7, 12 ஆவது நிழற்சாலை, அசோக் நகர், சென்னை - 83.
✆ : 24850186. பக். 135



படிப்பகம்

www.padippakam.com

ஆய்வைத் தொடர்ந்திருக்கிறார் சிவத்தம்பியின் சீடர் பார்த்திபராஜா. சிவத்தம்பி கூறிய ஆய்வு முறையின்படி அவரும் பிறரும் வந்தடைந்த முடிவுகள் என்ன?

''சாதி ஒழிப்புக்கும் இந்துமதப் புனருத்தார ணத்துக்குமிடையில் பாரதி ஊசலாடினார். ஆனால் இது தனிமனித ஊசலாட்டமல்ல, **பாரதி சார்ந்திருந்த சமூகத்தின் ஊசலாட்டம்''** - பார்த்திபராஜா.

''... **அந்தக் காலகட்டத்துக்குரிய** சமூகப் பின்புலம், அரசியல் கருத்துநிலை, **சமூகப் பார்வை** ஆகியனவற்றைக் கொண்டிருந்தான். **அவன் வேறு நிலையில் இருந்திருக்க முடியாது.''** - பேரா. சிவத்தம்பி.

கிருதயுகம் குறித்த பாரதியின் ''உணர்வையும் பார்வையையும் **யதார்த்த மனத்தின் உணர்வென்றும்** கற்பனாவாதப் பார்வை யென்றும் எடுத்துக் கொள்வதைத் தவிர பாரதியின் காலத்துக்குப் பிறகு வாழ்கிற நம்மால் வேறென்ன செய்ய முடியும்?'' - பேரா. பாரதி புத்திரன்.

இந்த மேற்கோள்களில் நாம் அழுத்தம் தந்துள்ள சொற்களை மனதில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். பாரதி குறித்த மையமான விமரி சனத்துக்கு ஜீவா, கைலாசபதி போன்ற 'பெரிய வர்கள்' உற்பத்தி செய்த நியாயப்படுத்தல்களும் இவையேதான். இவற்றைத்தான் வெவ்வேறு வண்ண அட்டைகளில் புத்தம் புதிய காப்பியாக மறுஉற்பத்தி செய்கிறார்கள் பார்த்திபராஜாவைப் போன்ற மாணவர்கள்.

பாரதியை விதந்து போற்றும்போது ''வேட்டி கட்டத் தெரியாத தமிழனுக்கு வேட்டி எடுத்துத் தந்தவன் பாரதி'' என்ற எல்லைக்குப் போகும் இந்த அறிஞர்கள், பாரதியின் நிர்வாண நிலை குறித்து லேசாக நாம் சுட்டிக் காட்டினாலே கொதிக் கிறார்கள். ''அந்தக் காலகட்டத்தில் எவன் வேட்டி கட்டினான்?'' என்று நம்மை மடக்குகிறார்கள்.

பாரதி சார்ந்திருந்த சமூகத்தின் ஊசலாட் டமாம்! எந்தச் சமூகம்? பார்ப்பனச் சமூகமா, சூத்திரர் - பஞ்சமர் உள்ளிட்ட தமிழ்ச் சமூகமா அல்லது பாரதச் சமூகமா? எந்தச் சமூகம் இந்து மதத்துக்காக ஊசலாடியது?

எதார்த்த மனத்தின் உணர்வாம்! வந்தே மாதரம் பாடிய பங்கிம் சந்திரரின் மன உணர்வும், அம்பேத்கரையும் கம்யூனிஸ்டுகளையும் ஒழித்துக் கட்டி ராம ராச்சியத்தை நிறுவ விழைந்த காந்தியின் மன உணர்வும், கவிஞர் வாஜ்பாயியின் மன உணர்வும் எதார்த்த மனத்தின் உணர்வில் சேருமா? வர்க்க, சாதியச் சார்பில்லாத ஒரு எதார்த்த மனம் எங்கே தொங்கிக் கொண்டிருக்கிறது?

பேரா. சிவத்தம்பியோ எல்லா பாரதி ஆய்வா ளர்களையும் சித்திரக் குள்ளர்களாக்கி விட்டார். அந்தக் காலகட்டத்துக்குரிய சமூகப் பார்வை, அரசியல் கருத்து நிலை என்கிறார். சரி, அவரு டைய நாட்டில் இந்தக் காலகட்டத்துக்குரிய அரசியல் கருத்துநிலை எது? சிங்களப் பேரின வாதத்தின் கீழான ஐக்கிய இலங்கையா, தனி ஈழமா, தன்னுரிமையா, மாநில சுயாட்சியா?

''அவன் வேறு நிலையில் இருந்திருக்க முடி யாது'' என்ற சிவத்தம்பியின் தீர்ப்பிற்கும் வேறு பொருள் உண்டு. ''அந்தக் காலத்தில் அவன்தான் மகாகவி. எனவே அவனைத் தாண்டி வேறெ வனும் சிந்தித்திருக்க முடியாது'' என்பதே இதன் உட்பொருள்.

இலக்கியத்தின் உணர்வு மற்றும் உணர்ச்சிப் பகைப்புலங்களைப் பேராசிரியப் பெருமக்கள் இந்த விதமாகப் புரிந்துகொள்வது குறித்து நாம் அதிர்ச்சியடையவில்லை.

''பாரதியின் முரண்பாட்டை அனுதாபத்துடன் பார்க்க வேண்டும் என்று கூறும் கவிஞர்களும் அறிஞர்களும் உண்மையில் தங்களுடைய இரட்டை நிலையை அனுதாபத்துடன் பார்க்க வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் இப்படி நாசூக்காக வெளிப்படுத்துகிறார்கள்'' என்று முன்னர் 'புதிய கலாச்சார'த்தில் குறிப்பிட்டோம்.

தங்களுடைய அனுதாபப் பார்வையை மார்க்சியப் பார்வை என்று அவர்கள் அழைத்துக் கொள்வதுதான் பிரச்சினை. அத்தோடு நில்லாமல் 'வரலாற்றுக் குருட்டுத்தனம்' என்ற வசவையும் நம்மீது துப்புகிறார்கள்.

இந்த 'வரலாறு' என்பது அகழ்வாராய்ச்சிச் சான்றுகளை வைத்து நிரூபிக்க வேண்டிய ஹமு ராபி காலத்து வரலாறல்ல, சென்ற நூற்றாண்டின் வரலாறுதான் என்பதால் பேராசிரியர்களால் அச்சுறுத்தப்படும் ''பாரதியின் காலகட்டம்'' என்ற அந்த குகைக்குள் நுழைந்துதான் பார்ப்போமே!

●●●

**1857** முதல் சுதந்திரப் போரின் தோல்வியைத் தொடர்ந்து கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி முடிவுக்கு வந்ததும், பிரிட்டிஷ் பேரரசின் நேரடிக் காலனியாதிக்கத்தின் கீழ் இந்தியா கொண்டு வரப்பட்டதும், முதலாளித்துவ வடிவிலான மையப்படுத்தப்பட்ட அரசு எந்திரம் நிறுவப்பட்டதும் நாமறிந்த வரலாறு.

இந்தக் காலகட்டத்தில்தான் ஆங்கிலேய அடிமைக் கல்வி விரிவுபடுத்தப்பட்டது; இந்திய சிவில் சர்வீஸ் ஏவல் நாய்கள் உருவாக்கப் பட்டன; வியாபாரிகள், லேவாதேவிக்காரர்கள் போன்ற வர்க்கங்களிலிருந்து தரகு முதலாளிகள் உருவாவது ஊக்குவிக்கப்பட்டது; சாதி, மத, பிராந்திய அடிப்படையில் நிலப்பிரபுக்கள் உள்ளிட்ட உள்ளூர் ஆதிக்க சக்திகள் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கையாட்களாக நியமிக்கப் பட்டார்கள். காலனி ஆட்சிக்கு ஆபத்து நேரா வண்ணம் தடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நிறுவனமயமாக்கலில், குறிப்பாக, கல்வி மற்றும் நிர்வாக எந்திரத்தில் பார்ப்பனர்கள் முந்திக் கொண்டு இடம் பிடித்தார்கள்.

இந்த நிறுவனமயமாக்கல் ஒருபுறமிருக்க, 1857 தோல்வியைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் போராட்டம் தீவிரமடைந்தது. 1859-60இல் ஆங்கிலேய

**30-களில் ஜீவா முதல் 80-களில் வலது, இடது கம்யூனிஸ்டுகள் வரை ஒரு நீண்ட பாரம்பரியமே பாரதிக்குக் காவடி எடுத்திருக்கிறது. தொலையட்டும். ஆனால் இன்று கண்முன்னே குஜராத்தைக் கண்ட பின்னரும் சொரணை வராமல் அழகியல் மயக்கத்தில் கிறங்கி இருந்தால் அதை அசட்டுத்தனம் என்று எப்படிச் சகித்துக் கொள்வது?**






padippakam

www.padippakam.com

**பாரதியின் கவிதைகளுக்கு இடையிலும், கவிதைக்கும் கட்டுரைகளுக்கும் இடையிலும் உள்ள முரண்பாட்டில் தலையாயது இந்து தேசியம் தொடர்பானது. இந்த விசயத்தில் கனவுக்கும் எதார்த்தத்திற்கும் இடையில், சூக்குமத்திற்கும் பருண்மையான தற்குமிடையில், உணர்ச்சிக்கும் தர்க்கத்துக்கும் இடையில் பாரதியிடம் நாம் காணும் முரண்பாட்டின் அடிப்படை எங்கே இருக்கிறது என்பதுதான் கேள்வி.**



அரசுக்கும், வெள்ளைக்கார அவுரி முதலாளிகளுக்கும் எதிராக நடந்த அவுரி விவசாயிகள் போராட்டத்தின் வெற்றியில் இந்து - முசுலீம் ஒற்றுமை பெரும்பங்காற்றியது. இந்தப் போராட்டத்திற்கு வங்காள அறிவுத்துறையினர் அளித்த ஆதரவுக்குச் சான்று தீன பந்து மித்ராவின் 'நீல்தர்பன்' எனும் நாடகம்.

ஆனால் இதையே வங்கத்து 'இந்து' அறிவுத்துறையினரின் மனப்போக்கிற்குச் சான்றாக நாம் கொள்ள முடியாது. இசுலாமியர் ஆட்சியை ஒழித்துக் கட்டிய பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளை 'மீட்பர்களாச'க் கருதிப் போற்றும் மனப்போக்குத்தான் இந்து நிலவுடைமையாளர்கள் மற்றும் உயர்சாதி அறிவுத்துறையினரிடையே பிரதானமாக இருந்தது. 'நீல்தர்பனு'க்கு எதிராக 'ஆனந்தமடம்' எனும் பங்கிம் சந்திரரின் புனைவு தோன்றுவதற்கு இதுதான் அடிப்படையாக இருந்தது.

இவை ஒருபுறமிருக்க, நிலவுடைமை முறையில் பிரிட்டிஷார் திணித்த மாற்றங்கள் விவசாயிகளின் போராட்டத்தைத் தீவிரப்படுத்தின.

1870 முதல் 85 வரை நீடித்த வங்காளத்தின் விவசாயிகள் போராட்டமும் இந்து - முசுலீம் விவசாயிகளின் ஒற்றுமையால் வெற்றி பெற்றது. 'பாதிக்கப்பட்ட' ஜமீன்தார்களில் பலர் இந்துக்கள்.

1875-இல் மகாராட்டிரத்தில் நடந்த விவசாயிகள் போராட்டம் கந்துவட்டிக்காரர்களான மார்வாரிகளையும் குஜராத்திகளையும் தாக்கியது. அவர்களைச் சமூகப் புறக்கணிப்பு செய்தது.

1872-இல் பஞ்சாப் விவசாயப் போராளிகள் 49 பேர் பீரங்கிவாயில் வைத்துப் பிளந்தெறியப்பட்டனர். கேரளத்தில் 50 ஆண்டுகள் தொடர்ந்த மாப்ளா விவசாயிகள் போராட்டமும் தாழ்த்தப்பட்ட, முசுலீம் விவசாயிகளின் ஒற்றுமைக்கு இன்னொரு சான்று.

இந்தப் போராட்டங்கள் அனைத்தும் உள்ளூர் ஆதிக்கச் சக்திகளையே குறி வைத்தன. அவர்களுக்குத் துணை நின்றதால் காலனி ஆதிக்கத்தையும் எதிர்த்தன. நாடு தழுவிய காலனியாதிக்க எதிர்ப்பு - தேச விடுதலை என்ற கண்ணோட்டமெல்லாம் இந்த எளிய விவசாயிகளுக்கு இல்லை.

''காலனியாதிக்கம் எனும் புதிய சிக்கலான விசயத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் விவசாயிகளுக்கு இல்லை. அதற்கு நவீன அறிவுத்துறையினரின் உதவி தேவைப்பட்டது. அந்த அறிவுத்துறையோ அப்போதுதான் உருவாகிக் கொண்டிருந்தது'' என்று 19-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி குறித்துக் குறிப்பிடுகிறார் வரலாற்றாய்வாளர் பிபன் சந்திரா.

பிரிட்டிஷ் அரசின் நிறுவனமயமாக்கல் கொள்கையால் தோற்றுவிக்கப்பட்ட இந்த அறிவுத்துறையினரின் கணிசமான பகுதியினர் காலனியாதிக்கவாதிகளிடம் பேரம் பேசிச் சலுகை பெறுவதையே தம் நோக்கமாகக் கொண்டிருந்தனர். சாதி, மதம், இனம், வட்டார அடிப்படையில் பல்வேறு பிரிவினர் இந்த பேரத்தில் ஈடுபட்டபோது தத்தம் சமூகத்தை ஒருபடித்தானதாகக் கற்பித்துக் கூறவும், அவர்களனைவருக்கும் தன்னையே ஏகப்பிரதிநிதியாகக் காட்டிக் கொள்ளவும், தங்களது நலனையே தம் மக்களின் நலனாகச் சித்தரிக்கவும் தலைப்பட்டனர்.

இந்த அறிவுத்துறையினரில் முதன்மையானவர்கள் பார்ப்பனர்கள். அவர்களுடைய கற்பிதம் இந்து தேசியம். புவியியல் ரீதியாகவும், மொழி - பண்பாட்டு ரீதியாகவும், உட்சாதி வழியிலும் அவர்கள் பிரிந்திருந்தாலும் பார்ப்பன மதம் அளித்த விழுமியங்கள், புனித நூல்கள், அவை முன் வைத்த கருத்தியல் ஆகியவற்றாலும், மிக முக்கியமாக சமஸ்கிருதம் எனும் மொழியாலும் அவர்கள் பிணைக்கப்பட்டிருந்தனர். எனவே, பிரிட்டிஷ் அரசிடம் சலுகை கோருவது என்ற வரம்புக்குட்பட்டு சாதி, மத, இன அடையாளங்களை முதன்மைப்படுத்திய மற்றெல்லாப் பிரிவினரிடமிருந்தும் இவர்கள் பாரிய அளவில் வேறுபட்டிருந்தனர். பொதுமரபு, பொதுப்பண்பாடு, பொது மொழி என்ற அடிப்படையில் ஒரு இந்திய தேசியத்தைப் புனைந்துரைப்பதற்கான 'தகுதி'யை இவர்கள் மட்டுமே பெற்றிருந்தனர்.

உழைக்கும் வர்க்கத்தின் மீதான சாதிய வெறுப்பையே தனது சாராம்சமாகக் கொண்டிருந்த பார்ப்பனீயம், கண்ணெதிரில் நடந்த விவசாயிகள் போராட்டத்தையும், உழைக்கும் மக்களின் மரபுகளையும் வெறுப்புடன் நிராகரித்துவிட்டு, தனக்கும் தன்னையொத்த 'உயர்' சாதியினருக்கும் உகந்ததொரு தேசியத்தை புதிய நிலைமைகளுக்கேற்ப கற்பிக்க முயன்றதில் வியப்பில்லை.

இந்து மீட்புவாதத்தின் இந்த அகண்ட பாரதக் கனவிற்கு, இதே காலகட்டத்தில் வளர்ந்துவந்த இந்தியத் தரகு முதலாளி வர்க்கத்தின் அனைத்திந்தியச் சந்தைக்கான வேட்கை, ஒரு புறநிலை அடித்தளமாகவும் உந்து சக்தியாகவும் அமைந்தது.

பேராசிரியர் சிவத்தம்பி கூறுவது போல, 'இந்திய ஒருமைப்பாடு என்பது பாரதியின் கருத்துநிலை உண்மையாக' உருப்பெறுவதற்கு முன்னால், அதை உருவாக்குவதற்குத் தேவைப்பட்ட 'கருத்து நிலை மாயை' உற்பத்தி செய்யப்பட்டது.

'இந்தியாவின் கடந்த காலம் இவ்வாறு இருந்திருக்கக் கூடும்' என்ற ஊகத்தில் தொடங்கி, 'இப்படித்தான் இருந்திருக்க வேண்டும்' என்ற கற்பனைக்கு மாறி, அதிலிருந்து 'இனி வருங் காலத்தில் உருவாக்கப்பட வேண்டிய பழைய பொற்காலம்' என்ற கனவாக பங்கிம் சந்திரரிடம் வெளிப்பட்டதை ஆய்வாளர் பார்த்தா சாட்டர்ஜி சுட்டிக் காட்டுகிறார். இதே காலகட்டத்தில் புத்ததேவ் முகோபாத்யாயா என்பவரால் இயற்றப்பட்ட கற்பனை வரலாற்று நூலின் பெயர் ''கனவில் தரிசித்த இந்திய வரலாறு''.

இன்று இந்துமதவெறியர்கள் உற்பத்தி செய்யும் கற்பனை வரலாறு வேறு, இது வேறு என்று பாரதி அபிமானிகள் வாதிடக் கூடும். இது முசுலீம் எதிர்ப்பைத் தனது நோக்கமாகக் கொண்டது என்றும், அது ஏகாதிபத்திய எதிர்ப்பு எனும் உயர்ந்த நோக்கத்தைக் கொண்டது என்றும்


படிப்பகம்

www.padippakam.com

இவற்றுக்கிடையிலான வேற்றுமையை அவர்கள் சுட்டிக் காட்டலாம். ஆனால் இந்தக் கற்பனை வரலாறுகளின் இதயம் இந்த வேற்றுமையில் இல்லை; வேதமரபையும் பார்ப்பன மரபையும் போற்றுவதிலும் மக்கள் மரபை இகழ்ந்து புறந் தள்ளுவதிலும்தான் அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது.

''மனித அறிவு மற்றும் ஞானத்தின் அதி உன்னத நிலை ஈந்த கனிகள்தான் வேதங்கள்... இந்தியாவில் நமது மதம் வேரூன்றவே முடியாது... மாறாக நம்முடைய அறிவிலும் சிந்தனை முறையிலும் இந்தியத் தத்துவ ஞானம்தான் அடிப் படையான மாற்றத்தைத் தோற்றுவிக்கப் போகிறது'' என்று ஷோப்பனேரும், இன்னும் மாக்ஸ்முல்லர் போன்ற ஐரோப்பிய அறிஞர்களும் (!) கூறியவுடன் பார்ப்பன அறிவுத்துறையினரின் பொற்காலப்பித்து மேலும் முற்றியது.

இந்தியாவை ஓர் அடிமை நாடாகவும், இந்தியர்களை சுதந்திரத்திற்குத் தகுதியில்லாத அடிமைகளாகவும், இந்தியப் பண்பாட்டை மூடநம்பிக்கைகளால் நிரம்பி வழியும் சாக்கடையாகவும் சித்தரித்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பதிலடி கொடுக்குமுகமாகத் தவிர்க்கவியலாமல் ஏற்பட்ட ஒரு விபத்துதான் இந்த வேதகாலப் பெருமிதம் என்று இதற்குப் பொழிப்புரை போடுவோர் உண்டு.

இந்தப் பொழிப்புரை அடிப்படையிலேயே தவறு என்பது ஒருபுறமிருக்க, வரலாறும் இந்தப் பொழிப்புரையை மறுக்கிறது. பார்ப்பன இந்து தேசியச் சித்தாந்தம் பிறப்பெடுத்த வங்காளம், மகாராஷ்டிரம் ஆகிய இரண்டு பகுதிகளிலுமே இதற்கு விசேடமான காரணங்கள் இருந்தன. ஆங்கிலேயர் வருகைக்கு முந்தைய இசுலாமிய ஆட்சியைத்தான் பங்கிம் சந்திரரின் ஆனந்த மடம் 'அந்நிய ஆட்சி' எனக் குறி வைக்கிறது.

இசுலாமியர்களையும் வெள்ளையரையும் 'மிலேச்சராக'ச் சித்தரிக்கும் பார்ப்பனக் கருத்தியல் இதன் சாதிரீதியான பரிமாணம். 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இந்து உயர்சாதி ஜமீன்தார்களுக்கு எதிரான இந்து-முசுலீம் விவசாயிகளின் ஒன்றுபட்ட கிளர்ச்சி தோற்றுவித்த அச்சம் என்பது இதன் (நிலப்பிரபுத்துவ) வர்க்க ரீதியான பரிமாணம்.

மராத்திய பேஷ்வா (பார்ப்பன) ஆட்சியின் இசுலாமிய வெறுப்பு, ஆங்கிலேயரின் படையில் சேர்ந்து அவர்களுடைய சிப்பாய்களாக வந்து தமது வரலாற்றுப் பழியைத் தீர்த்துக் கொண்ட மகர் (தாழ்த்தப்பட்ட) சாதியினர் மீதான வெறுப்பு, மார்வாரி - பனியா கந்துவட்டிக் கும்பலுக்கெதிராக 19-ஆம் நூற்றாண்டில் எழுந்த 'சூத்திர' சாதி விவசாயிகளின் கலகம், பின்னர் பூலேயின் பார்ப்பன எதிர்ப்பியக்கம் - போன்றவை பார்ப்பன இந்து தேசியத்தின் இன்னொரு பிறப்பிடமாக மகாராட்டிரம் அமைவதற்கான காரணங்கள்.

எனவே வெள்ளைத் திமிருக்கு எதிராக நிறுத்தப்பட்ட கனவல்ல இந்து தேசியம். மாறாக, இது சூத்திர பஞ்சம சாதி உழைக்கும் மக்களுக்கு எதிராக ஏற்கெனவே நிலவி வந்த பார்ப்பனத் திமிர். 'உலகை ஆளும் தகுதி படைத்த' வெள்ளையரோடு சேர்த்துத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு ஏங்கிய ஆரியக் கனவு. வேறு வார்த்தைகளில் சொன்னால், இந்த தேசியத்தின் சாராம்சம் ஏகாதிபத்திய எதிர்ப்பல்ல, மக்கள் எதிர்ப்பு.

இந்த மீட்புவாதக் கனவு அரசியல் ரீதியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியது வங்கப் பிரிவினை. இந்து - முசுலீம் பிளவைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் பிரிட்டிஷாரால் அறிமுகப்படுத்தப்பட்ட வங்கப் பிரிவினைக்கு எதிராக 1903 முதல் 1908 வரை வங்காளம் முழுவதும் நடைபெற்ற போராட்டம், அந்நியப்பொருள் புறக்கணிப்பைத் தனது செயல் திட்டமாக்கிக் கொண்டது. இப்போராட்டத்தில் முழுமையான இந்து-முசுலீம் ஒற்றுமை நிலவிய போதிலும், இதன் தலைமையானது மேல்சாதி மேட்டுக்குடியினர், ஜமீன்தார்கள், ஆதிக்க சக்திகள் ஆகியோரின் கைகளுக்கு மாறியிருந்தது.

19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நடந்த நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கிளர்ச்சியில் முன்முயற்சியைத் தம் கையில் வைத்திருந்த விவசாயிகள், இந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் மேல்சாதி, ஆதிக்க வர்க்கத்தினரைப் பின்தொடரும் கூட்டமாக்கப்பட்டார்கள். நிலப்பிரபுத்துவ சாதியப் பஞ்சாயத்துக்களின் மூலமாக அந்நியப் பொருள் புறக்கணிப்பு அமல்படுத்தப்பட்டது. (''18 பட்டியிலும் யாரும் பெப்சி குடிக்கக்கூடாது'' என்று சின்ன கவுண்டர் உத்தரவு போடுவது போல.)

இரண்டாவதாக, இந்து - முசுலீம் ஒற்றுமை பேணப்பட்ட அதே நேரத்தில் பங்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' என்ற முழக்கம் முதன்முறையாக விடுதலைப் போராட்டத்தின் 'மந்திரமாக' நுழைக்கப்பட்டது.


●●●

பாரதியின் மாணவப் பருவமும், அலகாபாத் பல்கலைக்கழக வாசமும், அவனுடைய அரசியல் கருத்துக்கள் உருவாக்கம் பெற்ற பின்புலமும், இதுதான். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியும், 20-ஆம் நூற்றாண்டின் துவக்கமுமான இந்தக் காலகட்டத்தில் இந்து மீட்புவாதம் ஒரு அரசியல் சக்தியாகத் தலையெடுக்கத் தொடங்கியதன் சுருக்கமான வரலாறு இது.

1905 ரசியப் புரட்சிக்கு மாகாளி பராசக்தியின் கடைக்கண் பார்வை தேவைப்பட்டதையும், ஆரியதேசம், பாரததேசம், சமஸ்கிருத மேன்மை, கிருத யுகக் கனவு போன்ற அனைத்துப் புனைவுகளையும், கவியுணர்வையும், இலக்கிய வெளிப்பாடுகளையும் தோற்றுவித்த வரலாற்றுப் பகைப் புலமும், உணர்ச்சிப் பகைப்புலமும் இதுதான்.

''பாரதியின் பிராமணப் பின்புலம், வாழ்க்கை வரலாறு (சென்ன, காசி), அவனுடைய மத அரசியல் கருத்து நிலை (வேதாந்தம் - சகல ஜீவன்

**எனவே வெள்ளைத் திமிருக்கு எதிராக நிறுத்தப் பட்ட கனவல்ல இந்து தேசியம். மாறாக, இது சூத்திர பஞ்சம சாதி உழைக்கும் மக்களுக்கு எதிராக ஏற்கெனவே நிலவி வந்த பார்ப்பனத் திமிர். 'உலகை ஆளும் தகுதி படைத்த' வெள்ளையரோடு சேர்த்துத் தம்மை அடையாளப் படுத்திக் கொள்வதற்கு ஏங்கிய ஆரியக் கனவு. வேறு வார்த்தைகளில் சொன்னால், இந்த தேசியத்தின் சாராம்சம் ஏகாதிபத்திய எதிர்ப்பல்ல, மக்கள் எதிர்ப்பு.**



www.padippakam.com

களையும் தமராகப் பார்க்கும் தன்மை) ஆகியன அவனுக்கு இந்திய ஒருமைப்பாட்டினை ஒரு ''கருத்து நிலை உண்மை'' (ideological truth) ஆக்கின'' என்று இதற்கு விளக்கமளிக்கிறார் பேரா. சிவத்தம்பி.

''வேதகால அறநிலைக் கருத்துக்கள் இந்தியாவின் மாபெரும் சொத்து என்றும் உலகின் வேறெந்த தத்துவமும், மதமும் இவ்வாறு ஒரு கருத்தை உருவாக்கியிருக்கவில்லை என்றும் அவன் திடமாக நம்பினான்'' என்று முட்டுக் கொடுக்கிறார் ஜீவா.

''பாரதியிடம் இந்து மதாபிமானமும் பழமைப்பிடிப்பும், மிதவாதமும் குடி கொண்டிருந்த அதேவேளையில், சமரச ஞானமும் புதுமை வேட்கையும், உணர்ச்சி ரீதியான அபேதவாதமும் (சோசலிசம்) பொங்கிக் கொண்டிருந்தன என்பதை எவரும் கண்டு கொள்ளலாம். பாரதியைப் போன்ற மகாகவிகளிடம் முரண்பாடுகளும் காணப்படும். சிக்கலான மனோபாவம் கொண்டவன் பாரதி. பார்ப்பனியம் என்ற லேபிளை அத்துணை இலகுவில் அவனுக்கு ஒட்டிவிட முடியாது'' என்று எச்சரிக்கிறார் பேரா. சிவத்தம்பி.

எங்கே ஒட்டுவது? பசை காய்வதற்குள் பிய்த்தெறியத்தான் ஒரு பெரிய ரசிகர் கூட்டமே காத்துக் கொண்டிருக்கிறதே!

இவர்களுடைய கூற்றுக்களைக் கூர்ந்து கவனியுங்கள். ''அவன் நம்பினான், அவன் கருதினான்'' என்று ''பாரதியின் சூழ்நிலை குறித்து விளக்கமளிப்பதற்கு மேல் தங்களுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை'' என்பது போன்ற தொனியில் விலகிக் கொள்ள இவர்கள் முயல்கிறார்கள். ஆனால் வேதாந்தம், ஒருமைப்பாடு, புதுமை, சமத்துவம், சோசலிசம் எல்லாமே ஒரு மனிதனிடத்தில் ஒருங்கே நிலவ முடியும். இதனால் முரண்பட்ட கருத்துக்கள் நிலவுவதும் இயல்பானதே - என்பதுதான் இவர்களது கருத்து.

இத்தகைய இயல்புகள் அக்கவிஞனை எதை நோக்கி இட்டுச் சென்றன என்பதையும் ஆராயத் தேவையில்லை என்பது இவர்களது ஆய்வு முறை. இதனை வெளிப்படையாகக் கூறத் தயங்குமிடத்தில்தான் வார்த்தை விளையாட்டுகள் நுழைகின்றன.

இத்தகைய பேராசிரிய வார்த்தை விளையாட்டுகளில் ஈடுபடாமல் இதே விசயத்தை நறுக்குத் தெறித்தாற் போல் சொல்கிறார் கோவை ஞானி: ''ஒரு உண்மையான அத்வைதப் பிராமணன் சோசலிசத்துக்குத்தான் வந்து சேர வேண்டும்'' (பாரதி புத்திரன் நூலின் அணிந்துரை)

இந்த வேதகால மீட்புக் கனவைக் கள்ளங் கபடமற்றதாகவும், நேர்மையானதாகவும், வரலாற்று ரீதியில் உலகத்தரம் வாய்ந்ததாகவும் சித்தரிக்கும் முயற்சியும் நடக்கிறது. ஐரோப்பிய மறுமலர்ச்சிக்காலச் சிந்தனையாளர்கள் பண்டைய கிரேக்கத் தத்துவ மரபிலிருந்து உணர்வெழுச்சி பெற்றதை இதற்கு ஒப்பிட்டுக் கூறுவோரும் உண்டு. நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மையையும், திருச்சபையின் அறிவியல் விரோத அரிஸ்டாட்டிலியச் சிந்தனை முறையையும் எதிர்த்துப் பண்டைய கிரேக்கத்தின் பொருள்முதல்வாத மரபைப் பெருமையுடன் மீட்டெடுத்து வளர்ந்தனர் ஐரோப்பிய மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள்.

பார்ப்பன மீட்புவாதமோ இந்தியத் தத்துவ ஞானத்தின் பெருமைக்குரிய மரபுகளான உலகாயதம், சுபாவவாதம், சாங்கியம், பவுத்தம் போன்றவற்றை வெறுப்புடன் நிராகரித்தது. (பவுத்தத்தின் அழிவை பாரதி கொண்டாடுகிறார்.) அறிவு நாணயமோ அறவுணர்வோ இல்லாத அத்வைதத்தையும் பார்ப்பனியத்தையும் அதன் செயல்தந்திரக் கையேடான கீதையையும் தன் மரபாக வரித்துக் கொண்டது. மேற்கத்தியக் கல்வி முறையின் வாயிலாகப் பெற்ற பகுத்தறிவுக் கண்ணோட்டத்தையும், விழுமியங்களையும் ஆபத்தில்லாத முறையில் தனது பொற்காலப் புனைவிற்குள் பதித்துக் கொண்டது. பாரம்பரியமிக்க பழைய மொந்தையில் சோமபானத்துடன் கொஞ்சம் ஒயினும் கலக்கப்பட்டது.

எனவேதான் ''இந்தப் போராட்டத்தின் உந்து சக்தி அறிவியல் சார்ந்ததாகவோ, அறம் சார்ந்ததாகவோ கூட இல்லை. மாறாக, உணர்வு, கற்பனை, புனைவு ஆகியவைதான் உந்து சக்தியாக இருந்தன'' என்று இதனை மதிப்பிடுகிறார் அஜாஸ் அகமது. இந்தப் புள்ளியில்தான் மீட்புவாதத்தைச் சந்திக்கிறது பாரதியின் கவியுள்ளம்.

**எனவேதான் ''இந்தப் போராட்டத்தின் உந்து சக்தி அறிவியல் சார்ந்ததாகவோ, அறம் சார்ந்ததாகவோ கூட இல்லை. மாறாக, உணர்வு, கற்பனை, புனைவு ஆகியவைதான் உந்து சக்தியாக இருந்தன'' என்று இதனை மதிப்பிடுகிறார் அஜாஸ் அகமது. இந்தப் புள்ளியில்தான் மீட்புவாதத்தைச் சந்திக்கிறது பாரதியின் கவியுள்ளம்.**



அப்படியானால், ''சூத்திரனுக்கொரு நீதி, தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கொரு நீதி'' ''பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே'' ''பேராசைக்காரனடா பார்ப்பான்'' என்றெல்லாம் பாரதி எழுதியதும் தன் சொந்தச் சாதி மரபுகளுக்கு எதிராகக் கலகம் செய்ததும் பொய்யா, புனைகதையா?'' என்று பாரதி அன்பர்கள் குமுறலாம். அவர்கள் இதே காலகட்டத்தைச் சேர்ந்த சாவர்க்கரையும், விவேகானந்தரையும் படித்துப் பார்க்க வேண்டும்.

விவேகானந்தர் பார்ப்பனரல்லாதவர் என்ற காரணத்தால் பார்ப்பனர்க்கு எதிரான அவரது கூற்றுகளை 'சீர்திருத்தம்' என்று கொள்வதோ, பாரதி பார்ப்பனன் என்பதால் அவனது கூற்றுகளைத் தந்திரம் என்று கொள்வதோ தவறு. இவர்கள் இந்துமீட்புவாதத்தின் வெவ்வேறு முகங்கள். அதேபோல, ஆளும் வர்க்கத்தின் அறிவுத்துறையினர் எனப்படுவோர் ஆளப்படும் வர்க்கத்தை ஏமாற்றும் பொருட்டு உணர்வுபூர்வமாகத் தெரிந்தே பொய்யைப் பிரச்சாரம் செய்கிறார்கள் என்று எல்லா சந்தர்ப்பங்களிலும் கூறிவிட முடியாது. குறிப்பிட்டசில வரலாற்றுச் சூழ்நிலைகளில் அவர்கள் தம்மை ஒட்டுமொத்தச் சமூகத்தின் பிரதிநிதியாகவே கருதிக் கொள்கிறார்கள்.

''அனைவருக்கும் பொதுவான நலன் குறித்த இந்த மாயை ***துவக்கத்தில்*** உண்மையாகவே இருந்தது'' என்று ஜெர்மன் முதலாளித்துவக் கருத்தியலாளர்களின் மனப்போக்கை (முதலாளித் துவப் புரட்சியின் போது) மதிப்பிடுகிறார்


படிப்பகம்

www.padippakam.com

மார்க்ஸ். ('ஜெர்மன் சித்தாந்தம்' - நூல்).

தேச முழுமையையும் நெறிப்படுத்தி புனர மைக்க வந்த தூதனாக ஒரு மனிதன் தன்னைக் கருதிக் கொள்ளும்பொழுது, அவனுடைய பிர மையைக் கேள்விக்குள்ளாக்கும் வலிமையான சமூக சக்திகள் எதுவும் அவனுடைய அகவு லகைத் தாக்காதபோது, அத்தகைய மனிதன் ஒரு கவிஞனாகவும் இருக்க நேரும்போது, கொந்த ளிப்பான புறச்சூழல் அவனுக்கு நம்பிக்கை யூட்டும்போது, அவனிடமிருந்து கவிதை பீறிடு வதும் அவனின் செயல்கள் சில 'வரம்பு' மீறிடு வதும் வியப்புக்குரியவையல்ல.

''இந்த (ஆளும்) வர்க்கத்திற்குள் ஒரு பிரிவு அந்த வர்க்கத்துக்கான சிந்தனையாளர்களாக உரு வெடுக்கிறது. இவர்கள் உருவாக்கும் கருத்துக்கள் மற்றும் மாயைகளை ஆளும் வர்க்கத்தின் இன்னொரு பிரிவு வெறுமனே ஆமோதிக்க மட்டுமே செய்கிறது. ஏனென்றால் இவர்கள் ஆளும் வர்க்கத்தின் செயலூக்கமுள்ள பிரிவினர். தங்களைப் பற்றிய கருத்துக்களையும் மாயை களையும் உருவாக்கிக் கொள்வதற்கு இவர் களுக்கு நேரம் இருப்பதில்லை.

ஆளும் வர்க்கத்துக்குள்ளேயே இருக்கும் இந்தப் பிரிவினை இரு பிரிவினர்க்குமிடை யிலான சச்சரவாகவும் பகைமையாகவும் கூட மாறக் கூடும். ஆனால் இந்த வர்க்கத்தையே ஆபத்துக்குள்ளாக்கும் அளவிற்கான மோதல் நடைமுறையில் எப்போது நிகழ்கிறதோ அப்போது (இவர்களுக்கிடையிலான) இந்தப் பகைமை தானாக மறைந்துவிடும். ஆளுமையில் இருக்கும் கருத்துக்கள் ஆளும் வர்க்கத்தின் கருத் துக்கள் அல்ல என்றும், அவற்றுக்கு அப்பாற்பட்ட சுயேச்சையானதொரு ஆற்றல் இந்தக் கருத்துக்க ளுக்கு இருப்பதாகவும் நிலவுகின்ற (பொய்த்) தோற்றமும் இத்துடன் சேர்ந்து மறைந்து விடும்.''

**(மார்க்ஸ், ஜெர்மன் சித்தாந்தம்)**

மார்க்ஸ் குறிப்பிடுவதைப் போன்ற பாரிய கருத்து மோதல்கள் எதுவும் பாரதிக்கும் சனாதனி களுக்குமிடையில் நடந்துவிடவில்லை. அவை மீட்புவாதம் என்ற சட்டகத்துக்குட்பட்டு நடை பெற்ற சில்லறைச் சச்சரவுகள்தான். எனினும் இத்த கைய சச்சரவுகள் நிலவிய காரணத்தினாலேயே, பாரதியை ஆளும் வர்க்கக் கவிஞன் அல்ல வென்றும், அந்த வர்க்கத்துக்கு அப்பாற்பட்ட முற்போக்கான கருத்தியலின் சுயேச்சையான வடிவம் என்றும் சித்தரிக்கின்ற அறிஞர்களுடைய ஆய்வுக் கண்ணோட்டத்தை மறுப்பதற்குத்தான் இதை மேற்கோள் காட்டுகிறோம்.

உண்மையில் சனாதனிகளுடனான மாபெரும் முரண்பாடுகளாக பாரதி அபிமானிகள் முரசறைந்து அறிவிக்கும் மோதல்களெல்லாம் வெறும் ஊடல் களாகப் பொசுக்கென்று அவிந்து விடுகின்றன.

பாரதியின் 'வரம்பு மீறல்களை' சநாதனிகள் எதிர்க்கும்போது அவன் சரணடைகிறான். பார்ப்ப னர்களிடம் சரணடைந்த பொழுதும் சரி, ஏகாதிபத் தியத்திடம் சரணடைந்த போதும் சரி, அகிம்சா வாதத்துக்கு மாறியபோதும் சரி அந்தக் கோழைத் தனம் அவனுடைய கவியுள்ளத்தில் குற்ற வுணர்வைத் தோற்றுவிக்கவில்லை. தான் போற்றிப் பாதுகாத்த அறவியல் விழுமியங்களை வெட்கக்கேடான முறையில் துறக்க நேர்ந்தால் ஒரு கவிஞனுக்கு ஏற்பட்டிருக்க வேண்டிய மனப்பிளவு அவனுக்கு ஏற்படவில்லை; அது கவி தையாக வெடித்துக் கசியவுமில்லை. மாறாக, அற வியல் முரண்பாடுகளையும் குற்றவுணர்வு களையும் இல்லாதொழிக்கும் அத்வைதத்தின் இருட்குகைக்குள் அவனுடைய கவியுள்ளம் ஒளிந்து கொள்கிறது.

முற்போக்கு என்றும், சீர்திருத்தமென்றும், சமத்துவம் என்றும் புரட்சி என்றும் பாரதி அன்பர் களால் அடையாளப்படுத்தப்படும் அவனது கவிதைச் சவடால்கள், திடீரென மத்தாப்பூவைப் போல எரிந்து மறைந்தது ஏன் என்பதற்கு நமக்கு விளக்கம் தேவைப்படுகிறது. ஏனென்றால் அது கனவு, அது புனைவு, அது கற்பனை, அவனு டைய கவித்துவ ஆவேசம் என்பது - கோபப்படா தீர்கள் - ஒரு மருளாளியின் (சாமியாடுபவனின்) ஆவேசம்!

''சீர்திருத்தம், மீட்புவாதம் ஆகியவற்றுக்கி டையிலான எல்லைக்கோடு எப்போதும் மங்கலா கவே இருந்தது. மீட்புவாதம் என்பதோ மேல் சாதியினரின் பல்வேறு விதமான அருவெறுக்கத் தக்க சுயமுக வழிபாடுகளை (Narcissisms) உள்ள டக்கிய, ஆனால் எதார்த்தத்தில் செலுத்தவியலாத ஆட்சி பற்றியதாக இருந்தது. எனவே, அது கற்ப னையில் ஆட்சி செலுத்தியது. அது கடந்த காலத்தில் செலுத்திய ஆட்சி குறித்த கற்பனை; ***எவ்வாறேனும்*** எதிர்காலத்தில் புனரமைத்து விடத் துடிக்கும் கற்பனை.'' — அஜாஸ் அகமது.

இதுதான் இந்து மீட்புவாதத்தின் சமூக உள வியல். பாரதி என்ற கவிஞனின் உளவியல். அதே நேரத்தில் சமூக சீர்திருத்தம் என்பதோ பாரதிக்கு வெளியில் இருந்தது; அந்தச் சீர்திருத்தவாதிகள் பாரதியைப் போல 'உன்னத இந்து மதத்தைக் கட்டமைக்க முயன்ற கற்பனாவாதிகளாக' இல்லை. தேச விடுதலைப் புரட்சியாளர்களும் பாரதிக்கு வெளியே இருந்தனர். அவர்கள் யாரும் பழைய பொற்காலத்தை மீட்டுருவாக்கம் செய்யக் கனவு காணவில்லை.

'அந்தக் காலகட்டத்துக்குரிய சமூகப் பார்வை' என்று பாரதியின் மீட்புவாதத்தை வருடிக் கொடுக் கிறாரே பேரா. சிவத்தம்பி, அந்தப் பார்வை அவர் களிடம் இல்லை.

கவிதையின் கனவுலகில் சஞ்சரித்த பாரதி, நன வுலகில் இக்கருத்துக்களை எதிர்கொண்டபோது என்ன செய்தான்? பாரதி என்ற நாணயத்தின் பூ-கவிதை; தலை எது? ''பூவா தலையா போட்டுப் பார்க்காதே, இருமை எதிர்வுகள் ஒழிக, சாராம்சவாதம் ஒழிக, பகுத்தறிவின் பயங்கர வாதம் ஒழிக!'' என்ற அறிவுத்துறையினரின் ஏளனக் கூச்சல் காதில் விழுகிறது. இருந்தாலும் அவ்வாறு பார்க்கத்தானே வேண்டியிருக்கிறது. அதுதான் அறிவியல்பூர்வமானது என்பதற்காக மட்டுமல்ல, அதுதானே நாணயமானது!

**படங்கள்: யாக்கன்** **(அடுத்த இதழில் முடியும்)**

**தேச முழுமையையும் நெறிப்படுத்தி புனரமைக்க வந்த தூதனாக ஒரு மனிதன் தன்னைக் கருதிக் கொள்ளும் பொழுது, அவனுடைய பிரமையைக் கேள்விக்கு உள்ளாக்கும் வலிமையான சமூக சக்திகள் எதுவும் அவனுடைய அகவுலகைத் தாக்காதபோது, அவனிடமிருந்து கவிதை பீறிடுவதும், அவனின் செயல்கள் சில 'வரம்பு' மீறிடுவதும் வியப்புக்குரியவை அல்ல.**



www.padippakam.com

# காஞ்சி மடத்தில் கரைந்து போன ஒரு 'தலித்' தளபதி!

உழைக்கும் மக்களை ஒட்டச் சுரண்ட பார்ப்பனியமே சாலச் சிறந்தது என அன்று அரச பரம்பரையினருக்குப் புரிய வைத்த ஆதிசங்கரன் பௌத்த - ஜைன மதத்தினரைப் பூண்டோடு அழிக்க முயன்றான். அவனளவுக்கு அறிவில்லையென்றாலும், திமிருக்குக் குறைவில்லாத ஓடிப்போன (ஓ.போ) சங்கராச்சாரி, ஜெயா கும்பல் மூலம் பார்ப்பன பாசிசத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்குக் கையிலெடுத்திருக்கும் ஒரு ஆயுதம் மதம் மாற்றத் தடைச் சட்டம்.

இதை எதிர்த்து சிறுபான்மை, தலித், புரட்சிகர மற்றும் ஜனநாயக சக்திகளிடையே எழுந்த பெரும் எதிர்ப்பைச் சரிக்கட்ட மெரினா கடற்கரையிலே வேட்டி, சேலை, லட்டு கொடுத்து கூட்டம் கூட்டி ஊளையிட்ட ஓ.போ. சங்கராச்சாரி தற்போது ஒரு தலித் அமைப்பையே மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு ஆதரவாக வளைத்து விட்டார்.

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பால் தலைமைச் சித்தர் எனப் போற்றப்பட்ட நபர் திருவள்ளுவன். இந்நபர் கடந்த சட்டசபைத் தேர்தலில் 'சீட்' கிடைக்காமல் வெகுண்டெழுந்து 'மக்கள் குடியரசுக் கட்சி' எனும் தனிக் கட்சியை, தன்னையே தலைவராகக் கொண்டு ஏப். 14-இல் கடலூர் நகரில் ஆரம்பித்தார். இதில் கடலூர் விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பில் பொறுப்புக்கள் கிடைக்காத சிலரும் சேர்ந்து கொண்டனர். இந்தச் 'சிலரின்' தொழில் கட்டைப் பஞ்சாயத்தும், ரவுடித்தனமும்தான்.

இத்தகைய 'மக்களைக்' கொண்ட இந்தக் கட்சியின் சார்பில் கடந்த 22.05.03 அன்று காஞ்சி சங்கராச்சாரியை வைத்து நடத்தப்பட்ட சமூக நல்லிணக்கப் பெருவிழா எனும் கேவலத்தைச் சுருக்கமாகத் தொகுத்துத் தருகிறோம்.

♦♦♦

❖ ''தலித் போராளி திருவள்ளுவன் தலைமையில் காஞ்சி காம கோடி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் உரை'' எனும் விளம்பரம் பரவலாக நிறுவப் பட்டிருந்தது. சில விளம்பரங்களை விடுதலைச் சிறுத்தைகள் தார் பூசி அழித்தனர். சினமடைந்த போலீசு அவர்களை குண்டர்கள் சட்டத்தின்கீழ் பிடிக்கப்போவதாக மிரட்டியது.

இதன் பின் காமகோடி + தலித் தளபதி விளம்பரங்கள் ஜரூராக அரங்கேறின. இத்தகைய 'வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியின்' போது 'பெரியவாளை' வைத்துப் பத்திரிக்கையாளர் சந்திப்பு நடந்தது. அல்வாவையும், முந்திரிப் பருப்புப் பாக்கெட்டையும் நாகரீகமாகப் பெற்று வரும் நிருபர்களுக்கு இங்கே கற்கண்டும் பூவும் கலந்த பிரசாதம் தெரு நாய்களுக்குத் தூக்கி எறிவது போல வீசப்பட்டது. அப்படியும் 'பெரியவாளை' நெருக்கிய நிருபர்களை 'ஏய் கிட்ட வராதே, தூரப் போய் நில்லு' என்று பார்ப்பனக் கூட்டம் விலக்கியது.

❖ மாலையில் நடந்த கூட்டத்துக்கு 6.15-க்கு 'பெரியவாள்' வந்து விட்டார். அவர் முன்னால் கூச்சத்துடன் அமர்ந்திருந்த திருவள்ளுவன் இன்னும் கூட்டம் சேரவில்லையே என்று துடித்துக் கொண்டிருந்தார். 'பெரியவாள்' வருவதற்கு முன் இந்து மதத்தின் தீண்டாமைக் கொடுமைகளை வாய்கிழியப் பேசியவர்கள், பின்னர் அடக்கி வாசித்தனர். கூடவே ''பெரியவரே நீர் இந்த உலகத்திற்கே பெரியவர், அண்ணல் அம்பேத்கரின் மறு அவதாரம், இந்து மதத்தின் புரட்சி நாயகன், தாழ்த்தப்பட்ட மக்களின் உயிர்மூச்சு'' என்றெல்லாம் உளறி உருகினர். விடுதலைச் சிறுத்தைகளின் இந்துப் பெயரைத் தமிழ்ப் பெயராக மாற்றும் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தினர். புலவர் மு. வரதராஜன் என்பவர் தேவாரம், திருவாசகம் பாணியில் 'பெரியவாளை'ப் புகழ் பாடினார்.

❖ அடுத்து திருவள்ளுவன் பேசத் தொடங்கினார்: ''சிறப்புமிக்க இந்த சமூக சமத்துவ நல்லிணக்கப் பெருவிழாவிற்கு வருகை தந்துள்ள என் அன்பிற்குரிய பெரியோர்களே, அமைப்பின் முன்னணி வீரர்களே, சமுதாய மறவர்களே, என் இனிய காவல்துறை நண்பர்களே, எங்களின் இந்த இனிய அழைப்பை ஏற்று வந்திருக்கின்ற எஸ்.வி.சேகர் அவர்களே, எங்களின் **குல** விளக்காய், இந்து மதத்தின் இதயமாய் இமயமாய் இங்கே வெளிச்சம் தந்து வீற்றிருக்கின்ற கா.கா.கோ. பெரியவாள் அவர்களே! அனைவருக்கும் வணக்கம். முதன் முதலில் காஞ்சி மடத்தின் தளபதி என்னை அழைத்தபோது, நமக்கா இந்த அழைப்பு என்று குழப்பம் ஏற்பட்டது. பின்னர் சென்றுதான் பார்ப்போமே என கட்சி நிர்வாகிகளுடன் கலந்து பேசி அனுமதி பெற்றுச் சென்றேன்.''

''இதற்கு முன் காமகோடி அவர்களை பலமுறை விமரிசித்ததுண்டு. 6 ஆண்டுகாலம் தீவிரவாத இயக்கத்தில் இருந்துள்ளேன். பத்தாண்டுக் காலம் தலித் அமைப்பில் பணியாற்றியுள்ளேன். அம்பேத்கர், பெரியார், காரல் மார்க்ஸ் போன்றவர்களின் தத்துவம் படித்துள்ளேன். ஆனால் இவற்றிலெல்லாம் தலித் மக்களின் விடுதலை என்பது விரைவாக இல்லை. இந்நிலையில் காஞ்சி மடத்தில் அந்தத் தலைவனைப் பார்த்த பின் இத்தனை நாள் நான் செய்த தவறுகளை எண்ணி மனம் வெதும்பினேன், வேதனையடைந்தேன். இதன்பின் அவருடன்

**6 ஆண்டுகாலம் தீவிரவாத இயக்கத்தில் இருந்துள்ளேன். பத்தாண்டுக் காலம் தலித் அமைப்பில் பணியாற்றியுள்ளேன். அம்பேத்கர், பெரியார், காரல் மார்க்ஸ் போன்றவர்களின் தத்துவம் படித்துள்ளேன். ஆனால் இவற்றிலெல்லாம் தலித் மக்களின் விடுதலை என்பது விரைவாக இல்லை. இந்நிலையில் காஞ்சி மடத்தில் அந்தத் தலைவனைப் பார்த்த பின் இத்தனை நாள் நான் செய்த தவறுகளை எண்ணி மனம் வெதும்பினேன், வேதனையடைந்தேன். பெரியவாள் அவர்கள் ஆயிரம் அம்பேத்கரின் மறு உருவம்!**

*- சொல்கிறார் ஒரு 'தலித் போராளி'*



படிப்பகம்

www.padippakam.com



நான் பலமுறை போனில் தொடர்பு கொண்டு பேசியுள்ளேன். பல பிரச்சினைகள், வழக்குகள் அத்தனைக்கும் சளைக்காமல் உதவி செய்தார். பெரியவாள் அவர்கள் ஆயிரம் அம்பேத்கரின் மறுஉருவம்!''

''தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை நாயகனாய், விடிவெள்ளியாய், இந்த விழாவின் நாயகனாய், ஏன் இந்தியாவுக்கே தலைவனாய், உலகத்தின் வழிகாட்டியாய் இருக்கும் அந்தத் தலைவனைச் சந்திக்கும்போது, ஒரு தாயைப் பிரிந்த பிள்ளை நீண்டநாள் கழித்துச் சேரும்போது எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுமோ அவ்வளவு சந்தோஷம் எனக்கு ஏற்பட்டது. அதன்பின் நான் பலமுறை அவரைச் சந்தித்திருந்தாலும் ஒருமுறை கூட காலில் விழவில்லை, ஏன் தெரியுமா? காஞ்சி மடத்தின் காலில் திருவள்ளுவன் விழுந்து விட்டான் என்று சொல்வார்கள் என்பதற்காகத்தான். என்றாலும் அவரது ஆசீர்வாதம் எனக்கும், என் சமூக மக்களுக்கும் என்றும் இருக்கும் என்பதை நானறிவேன்.''

''எம் சாதி மக்களுக்குத் தீண்டாமை ஒழிந்து, சமத்துவம், நீதி, வேலை கிடைக்கவேண்டும் என்பதே எனது ஆசை. அப்படி இந்தச் சமுதாயம் மாறுகிறபோது கோடானு கோடி மக்களின் முன்னிலையில் காஞ்சிப் பெரியவாள் அவர்களின் காலில் விழுவேன், ஆசீர்வாதம் பெறுவேன்! 2000 ஆண்டு காலமாய் இருண்டு கிடக்கும் எம் சேரிகளில் இந்தத் திருவுருவம் வந்தாலே வெளிச்சம் தானாய் வந்துவிடும். அப்படித்தான் இவர் ஒளி விளக்காய் விளங்குகிறார். நன்றி, வணக்கம்.''

❖ அடுத்துப் பேசினார் எஸ்.வி. சேகர்:

''எல்லாருக்கும் வணக்கம். அடுத்துப் பெரியவாள் பேச இருக்கிறதால நான் சுருக்கமாகப் பேசி முடிக்கிறேன். நான் என்ன சொல்ல வரேன்னா, உங்களைப் பயன்படுத்திண்டு, உங்க சமுதாயத் தலைவனுங்க உங்க உழைப்பால அவங்க முன்னேறிடறாங்க. அப்படி எல்லாரையும் முன்னேத்தி விட்ட உங்க வாழ்க்கை இன்னும் அப்படியே இருக்கு. இப்பத்தான் நீங்க சரியான இடம் தேடி வந்திருக்கீங்க. உங்களுக்கு வழிகாட்டியாய் இருக்கின்ற தலைவர் திருவள்ளுவன் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரைப் போன்றவர். அவர் ஒரு நல்ல தலைவர், அதே போன்று நமக்குக் கிடைத்திருக்கும் குரு அவர்களும் நமக்குச் சிறந்த வழிகாட்டி. நானும், பெரியவாள் அவர்களும், காஞ்சி மடமும் எந்நேரமும் உங்களுக்காகத் தயாராக உள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி! வணக்கம்!''

இதைத்தாண்டி ஒ.போ.சங்கராச்சாரி எதையும் பேசவில்லை என்பதாலும், அவர் பேசியது பத்திரிக்கைகளில் வெளிவந்துள்ளதாலும் இங்கே தவிர்த்து விடுகிறோம்.

**விழாவின் சிறப்புக் காட்சிகளில் சில!**

❖ அரங்கத்தில் 600 இருக்கைகள் போடப்பட்டிருந்தன. இதில் அமர்ந்தால் தீட்டாகிவிடுமோ என்று எண்ணிய மேல்சாதியினர் 'பெரியவாளி'டம் ஆசீர்வாதம் வாங்க நெருக்கியடித்து நின்று கொண்டிருந்தனர்.

❖ விழா மேடையில் அனைவருக்கும் துண்டு அணிவிக்கப்பட்டது. அப்போது ''காஞ்சிப் பெரியவாள் அவர்களுக்கு நமது தலைவர் திருவள்ளுவன் சந்தன மாலை அணிவிப்பார்,'' என்றவுடன் திருவள்ளுவன் சங்கராச்சாரி அருகில் செல்ல, எஸ்.வி. சேகர் உடன் ஓடிவந்து மாலையை வாங்க முயற்சித்தார். ஆனால் திருவள்ளுவன் ''நானே போடுகிறேன்'' என்றவுடன் பார்ப்பனக் கும்பலுக்கு முகம் இருண்டு போனது. இதனையடுத்து அந்த மாலையை திருவள்ளுவன் கையை உரசாமல் தனது இடது கையால் வெடுக்கென்று பிடுங்கினார் சங்கராச்சாரி.

❖ 3 வயதுக் குழந்தையொன்று சங்கராச்சாரி காலில் விழச்சென்ற போது, ஒரு பார்ப்பன அடிவருடி, குழந்தை 'பெரியவாளின்' காலைத் தொடாதபடி வெடுக்கெனப் பின்னுக்கு இழுத்தான். குழந்தை அப்புறப்படுத்தப்பட்டது.

❖ நிகழ்ச்சியின் முடிவில் சங்கராச்சாரி, ''பெரியோர்களே உங்களுக்கெல்லாம் மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலிருந்து பிரசாதம் எடுத்து வந்துள்ளேன். இதை இப்போது விநியோகிக்க நேரம் இல்லாதபடியால் திருவள்ளுவன் உங்களுக்குத் தருவார், அதை வாங்கிச் செல்லவும்'' என்று ஆணையிட்டார். இங்கேயும் நேரடியாகப் பிரசாதம் விநியோகித்தால் கை தீட்டாகிவிடும் என்ற அச்சம்தான் காரணம்!

❑ **புதிய கலாச்சாரம் வாசகர் வட்டம், கடலூர்**


## பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு - 2003

**ஒளிக்குறுந்தகடுகள்**

மாநாட்டில் நடந்த கலைநிகழ்ச்சிகள் 5 ஒளிக்குறுந்தகடுகளாக வெளிவந்துவிட்டன.

1. **குறவன் குறத்தி ஆட்டம்**
   **சங்கராச்சாரி ஒட்டம்**
   *மையக்கலைக்குழு, ம.க.இ.க*
   **லுங்கி - நாடகம்**
   *நாடகக் குழு, வி.வி.மு., கம்பம்*
   மற்றும் புரட்சிகரக் கலைநிகழ்ச்சி - *மையக்கலைக்குழு, ம.க.இ.க,* மாநாட்டின் இரண்டாம் நாளில் நடத்தியப் பாடல்கள் தெரிவுசெய்யப்பட்ட தொகுப்பு.
   விலை ரூ.100
2. **புரட்சிகரக் கலைநிகழ்ச்சி**
   *மையக்கலைக்குழு, ம.க.இ.க*
   மாநாட்டின் முதல் நாளில் நடத்திய பாடல்களின் முழுமையான தொகுப்பு
   விலை ரூ.100
3. **சாம்பான்** - நாடகம்
   *ஒத்திகை நாடகக் குழு, தஞ்சை*
   **அடிமாடு** - நாடகம்
   *நாடகக் குழு, வி.வி.மு., கம்பம்*
   **தப்பாட்டம்**
   *வீரசோழத் தப்பாட்டக் குழு, தஞ்சை*
   **மகுடாட்டம்**
   *முத்துராமலிங்கம், ஆத்திமுத்து குழுவினர், சிறீவைகுண்டம்*
   விலை ரூ.100
4. **போகாதே நந்தா போகாதே** - நாடகம், *ஒத்திகை நாடகக் குழு, தஞ்சை*
   **தமிழ்த்தீட்டு** - வில்லிசைப்பாடல்
   *ஆத்தூர் கோமதி குழுவினர் மற்றும்*
   **சிறுவர்கள் இசை நிகழ்ச்சி**
   *ம.க.இ.க*
   விலை ரூ.100
5. **இசைச் சித்திரம்** - *ம.க.இ.க.*
   **திண்ணியம், பள்ளப்பட்டி**
   நேருரைகள்
   விலை ரூ.100

www.padippakam.com

# குஜராத் படுகொலை: குற்றவாளிகளின் பிடியில் சாட்சிகள்

குஜராத்தில் நடந்துவரும் முசுலீம் இனப்படுகொலை தொடர்பான வழக்குகளில், குறிப்பிடத்தக்க, முக்கியமானதொரு வழக்கு, ''பெஸ்ட். பேக்கரி வழக்கு''. பரோடா நகரில் அனுமன் தேக்ரி என்ற ''இந்து''ப் பகுதியில், ஷேக் என்ற முசுலீம் குடும்பத்துக்குச் சொந்தமான பெஸ்ட் பேக்கரி, கோத்ராவில் ரயில் பெட்டி எரிக்கப்பட்ட மறுநாள் இரவே, இந்துமதவெறிக் கும்பலால் தாக்கப்பட்டது. கிட்டதட்ட 700 இந்து மதவெறிக் குண்டர்கள் திரண்டு வந்து நடத்திய இந்தத் தாக்குதல், 14 மணி நேரம் நடந்தது.

அந்நிறுவனத்தில் வேலை பார்த்து வந்த தொழிலாளர்கள், மத வேறுபாடின்றித் தாக்கப்பட்டு, உயிரோடு கொளுத்தப்பட்டனர்; இத்தாக்குலின் பொழுது கொல்லப்பட்ட 14 பேரில், 3 பேர் இந்துக்கள். இறுதியாக, பெட்ரோல் குண்டுகளை வீசியெறிந்து அந்நிறுவனத்தைத் தீக்கிரையாக்கி விட்டு, இந்துமதவெறிக் குண்டர்கள் திரும்பிப் போனார்கள்.

கோத்ராவில் ரயில் பெட்டியை எரித்தது யார் என்பது தெரியாத நிலையிலேயே முசுலீம்கள் மீது பாய்ந்த பொடா சட்டம், மிகவும் கொடூரமான, குரூரமான முறையில் பெஸ்ட் பேக்கரி மீது தாக்குதல் நடத்தி, 14 பேரை உயிரோடு கொளுத்திக் கொன்ற இந்து மதவெறிக் குண்டர்கள் மீது பாயவில்லை. எனினும், அனுமன் தேக்ரியைச் சேர்ந்த 21 பேர், சாதாரணக் கொலை வழக்கின் கீழ் கடந்த ஆண்டே கைது செய்யப்பட்டனர்; கடந்த மார்ச் மாதம் அவர்கள் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மே மாதம் விசாரணை தொடங்கியது.

இவ்வழக்கை விசாரித்த பரோடா விரைவு நீதிமன்றம், ''குற்றவாளிகளுக்கு எதிராக ஒரு சிறு ஆதாரம் / சாட்சியம் கூடக் காட்டப்படவில்லை. நிரபராதிகளைக் குற்றவாளிகளாக்க போலீசு முயற்சி செய்துள்ளது'' எனக் கூறி, இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 21 பேரையும் ஜூன் மாதம் 28-ஆம் தேதி விடுதலை செய்துவிட்டது.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி மஹிதா, தனது தீர்ப்பில், ''அரசு அமல்படுத்தி வரும் இட ஒதுக்கீடு கொள்கையும், அரசு நடைமுறைப்படுத்திய ரசிய பாணி பொதுத்துறை தொழிற் கொள்கையின் தோல்வியும்தான் மதக் கலவரங்களுக்குக் காரணம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது தீர்ப்பு அல்ல; ஆர்.எஸ்.எஸ்.இன் கொள்கை. காவித் துணியைக் கட்டிக் கொண்டு ஆர்.எஸ்.எஸ்.காரன் பேசும் கொள்கையை, கருப்பு அங்கியை மாட்டிக் கொண்டு மாண்புமிகு நீதிபதி தீர்ப்பாக எழுதும்பொழுது, அக்கொள்கை சட்டபூர்வ அங்கீகாரம் பெற்று விடுகிறது. இப்படிப்பட்ட நீதிபதியிடம் இருந்து, தீர்ப்பு வேறு மாதிரியாக வந்திருந்தால்தான் அதிர்ச்சியாக இருந்திருக்கும்.

இவ்வழக்கின் மீதான விசாரணை தொடங்கி முழுமையாக இரண்டு மாதங்கள் முடிவதற்குள்ளாகவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது - அதுவும் இந்து மதவெறியர்களுக்குச் சாதகமாக. சட்டத்தின் மீது இன்னும் நம்பிக்கை கொண்டுள்ள பலரும் 'நீதி தேவதை'



**கொலைகாரர்கள் தண்டிக்கப்படாமல் திருமணம் செய்யமாட்டேன் என்று சூளுரைத்த ஜஹிரா, நீதிமன்றத்தில் அவர்களை அடையாளம் காட்ட மறுத்தாள் - காரணம் எஞ்சியுள்ளவர்களும் கொல்லப்படுவோம் என்ற அச்சம்.**

இந்து மதவெறியர்களுடன் கொண்டுள்ள கள்ள உறவைக் கண்டு துவண்டு போய், கலவர வழக்குகள் அனைத்தும் இப்படித்தான் முடியும் என இப்பொழுதே கூறத் தொடங்கிவிட்டனர்.

பெஸ்ட் பேக்கரி வழக்கில் 120 பேர் சாட்சிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இவர்களுள் மிகவும் முக்கியமான சாட்சி ஜஹிரா ஷேக் என்ற பெண். இந்து மதவெறியர்களால் சூறையாடப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்ட பெஸ்ட் பேக்கரி, ஜஹிரா ஷேக்கின் தந்தையாருக்குச் சொந்தமானது. ஜஹிராவின் இரண்டு சகோதரர்களையும், தாய் மாமனையும், மாமனின் குழந்தையையும் இந்து மதவெறியர்கள் எரித்துக் கொன்றதை நேரடியாகப் பார்த்தவர் அவர்.

இந்து மதவெறியர்களால் தாக்கப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே ஜஹிரா, இச்சம்பவம் பற்றி போலீசிடம் வாக்குமூலம் கொடுத்தார்; இத்தாக்குதலை தலைமை தாங்கி நடத்திய குற்றவாளிகள் அனைவரையும் அடையாளம் காட்டினார். குஜராத்தில் நடந்த இனப்படுகொலை பற்றி விசாரணை நடத்திய தேசிய மனித உரிமைக் கமிசனின் தலைவரையும், தலைமைத் தேர்தல் ஆணையர் லிங்டோவையும் நேரிலேயே சந்தித்து, இத்தாக்குதல் பற்றிப் புகாரும், வாக்குமூலமும் கொடுத்திருந்தார்.

''குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வரை திருமணம் செய்து கொள்ள மாட்டேன்'' எனக் கூறிவந்த ஜஹிரா பரோடா விரைவு நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின்பொழுது, ''தாக்குதல் சம்பவத்தைத் தான் நேரில் பார்க்கவில்லையென்றும், குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களைத் தான் அடையாளம் காட்டவில்லையென்றும்'' பிறழ்ந்து கூறினார். குற்றவியல் சாட்சியச் சட்டப்படி, ஜஹிரா பிறழ் சாட்சியாக மாறியவுடனேயே இவ்வழக்கு ஆட்டம் காணத் துவங்கிவிட்டது.

ஜஹிராவைத் தொடர்ந்து, அவரது தாயார் செருன்னிசா, அவரது சகோதரி சஹேரா, அவரது சகோதரர்கள் நபிதுல்லா, நபிபுல்லா ஆகியோரும் போலீசாரிடம் ஏற்கெனவே கொடுத்திருந்த வாக்குமூலத்திற்கு நேர் எதிராக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தனர்.

ஜஹிரா குடும்பத்தினரைத் தவிர, குற்றவாளிகளை அடையாளம் காட்டிய சாட்சிகளுள் முக்கியமானவர் லால்


படிப்பகம்

www.padippakam.com

முகம்மது. போலீசிடம் குற்றவாளிகளை அடையாளம் காட்டிய லால் முகம்மது, நீதிமன்ற விசாரணையின் பொழுது, ''இவர்கள் குற்றவாளிகள் அல்லவென்றும், தாக்குதல் நடந்த இரவில், தனது குடும்பத்தைக் காப்பாற்றிய இரட்சகர்கள் இவர்கள் தானென்றும்'' கூறினார்.

இவ்வழக்கில் சாட்சிகளாகச் சேர்க்கப்பட்டிருந்த 120 பேரில், 73 சாட்சிகள் நீதிமன்ற விசாரணைக்கு வந்திருந்தனர். அந்த 73 சாட்சிகளுள் 41 பேர், போலீசிடம் ஏற்கெனவே கொடுத்திருந்த வாக்குமூலத்திற்கு நேர் எதிராக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தனர். நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த பலரும், ''போலீசுதான் இவர்களைக் குற்றவாளிகளாக அடையாளம் காட்டக்கூறி, தங்களை அச்சுறுத்தியதாக''க் கூறினார்கள். இந்து மதவெறியர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பு எழுத வேண்டிய நிலையில் இருந்த நீதிமன்றத்தின் சுமையை, சாட்சிகளே வெகுவாகக் குறைத்தனர்.

பெஸ்ட் பேக்கரி வழக்கின் முக்கிய சாட்சிகளான ஜஹிரா குடும்பத்தினரின் மனதை மாற்றியவர், பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் மது சிறீவத்ஸவா. நீதிமன்ற விசாரணைக்காக ஜஹிரா வந்த பொழுது, அவருடன் சிறீவத்ஸவாவும் கூட வந்தார். ஆடும், ஓநாயும் ஒரே குளத்தில் நீர் குடிப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த நிருபர்கள், இது பற்றி சிறீவத்ஸவாவிடம் கேட்ட பொழுது, ''தான், ஜஹிரா குடும்பத்தைச் சமூக விரோதக் கும்பலிடமிருந்து பாதுகாப்பதாக'' அந்த ஓநாய் பதில் அளித்தது. நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபின், ஜஹிராவை பரோடா நகரில் காணமுடியவில்லை. ஜஹிரா திருமணம் செய்து கொண்டு, தில்லிக்குப் போய் விட்டதாக அவரது குடும்பத்தினர் கூறுவதை நம்புவதற்குத்தான் ஆட்கள் யாருமில்லை.

பெஸ்ட் பேக்கரி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் இந்து மதவெறி அமைப்பினைச் சேர்ந்த அடிமட்டத் தொண்டர்கள். நீதிமன்றம், தொண்டர்களையே தண்டிக்க மறுக்கும் பொழுது, நரோடா பாட்டியா கொலை வழக்குகளிலும், குல்பர்கா சொசைட்டி கொலை வழக்குகளிலும் சம்பந்தப்பட்டுள்ள வி.இ.ப. / பா.ஜ.க. தலைவர்களைத் தண்டிக்கவா போகிறது?

குஜராத்தில் நடந்த முசுலீம் இனப் படுகொலை தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட 4,252 வழக்குகளில், சரி பாதி வழக்குகளைப் போதிய சாட்சியம் இல்லை என்று கூறி போலீசே கை கழுவிவிட்டது. விசாரணை நடந்து வரும் மீதி வழக்குகளை ஊத்தி மூடும் திருப்பணியை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

**சட்டமும், நீதிமன்றமும் ஆயுதமேந்திய இந்து மதவெறி பாசிஸ்டுகளைக் காப்பாற்றும் பொழுது, எந்தச் சட்டத்திற்கும் இந்து மதவெறி பாசிஸ்டுகள் கட்டுப்பட மறுக்கும்பொழுது, இம்மதவெறி பாசிஸ்டுகளை எதிர்ப்பவர்கள் மட்டும் சட்டத்திற்கு உட்பட்டுப் போராட வேண்டும் என்பது தற்கொலைக்கு ஒப்பானது.**

இந்தப் படுகொலை பற்றி விசாரணை நடத்துவதற்காக மோடி அரசால் நியமிக்கப்பட்டுள்ள நானாவதி கமிசன், ''கலவரத்தின் பொழுது போலீசார் கடமை தவறாமல் நடந்து கொண்டதாக'' விசாரணை முடியும் முன்பே தீர்ப்புக் கூறிவிட்டது. இக்கமிசன் பரோடா நகரில் விசாரணை நடத்த வந்த பொழுது, அக்கமிசனின் முன் சாட்சியம் அளிக்க வேண்டிய சாட்சிகள் அனைவரையும் வீடு தேடிப்போய், மாவட்டப் போலீசுக் கண்காணிப்பாளர் அலுவலகத்துக்கு அழைத்து வந்து, போலீசே அறிவுரைக் கூட்டமொன்றை நடத்தியது.

இக்கூட்டத்தில் சாட்சிகளிடம் பேசிய அரசு வழக்குரைஞர், ''பழசை மறந்துவிடுங்கள்; எல்லோரிடமும் நல்ல உறவை வளர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் போலீசை ஆதரித்தாலும், ஆதரிக்காவிட்டாலும், பிற்பாடு அவர்களின் (போலீசின்) உதவி உங்களுக்குத் தேவைப்படும். எனவே, அவர்களுக்கு ஆதரவாகப் பேசுவது நல்லது. நான் சொல்லுவதைச் செய்யத் தேவையில்லை; ஆனால், உங்களுக்கு எது நல்லதென்று படுகிறதோ, அதைச் செய்யுங்கள்'' எனப் ''புத்திமதி'' சொல்லியிருக்கிறார்.

அரசு வழக்குரைஞர்கள் என்ற பதவியில் அமர்ந்திருக்கும் வி.இ.ப. / பா.ஜ.க. பேர்வழிகளும், போலீசும் சொல்லும் இந்த மிரட்டல் கலந்த புத்திமதியைக் கேட்டு, ஜஹிரா குடும்பத்தினரைப் போல மனம் மாறிப் போனவர்களும் உண்டு; சொந்த மனசாட்சிக்குத் துரோகம் செய்ய முடியாமல், மனச்சாட்சியைக் கொல்லவும் முடியாமல் அமினா பென்னைப் போல விசாரணைக் கமிசனையும், நீதிமன்ற விசாரணையையும் அடியோடு புறக்கணித்து விட்டவர்களும் உண்டு.

''இனப்படுகொலையை நடத்திய இந்து மதவெறிக் குண்டர்களுக்கு எதிராகச் சாட்சி சொல்லிவிட்டு, எங்கே ஓடி ஒளிந்து கொள்வது?'' என்ற அச்சம்தான், இப்போது குஜராத் முசுலீம்களைப் பிடித்தாட்டுகிறது. இப்படிப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்குச் சாட்சிக்காரன் காலில் விழுவதை விட, சண்டைக்காரன் காலில் விழுவது புத்திசாலித்தனமாகப் படுகிறது.

இதுதான் காரிய சாத்தியமான முடிவு என்றால், இனப்படுகொலையை நடத்திய இந்து மதவெறி பாசிஸ்டுகளைத் தண்டிக்கவே முடியாதா? பாதிக்கப்பட்ட முசுலீம்கள் மறப்போம், மன்னிப்போம் என நடைப்பிணங்களாக, இந்து மதவெறியர்களின் தயவில் வாழ வேண்டியதுதானா என்ற கேள்விகள் எழுந்துவிடுகின்றன. இந்த நிலைமையை இப்படியே அனுமதிப்பது, குஜராத் பரிசோதனையை நாடெங்கும் நடத்திப் பார்க்கும் திமிரை இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்குக் கொடுத்துவிடும்.

சட்டமும், நீதிமன்றமும் ஆயுதமேந்திய இந்து மதவெறி பாசிஸ்டுகளைக் காப்பாற்றும் பொழுது, எந்தச் சட்டத்திற்கும் இந்து மதவெறி பாசிஸ்டுகள் கட்டுப்பட மறுக்கும்பொழுது, இம்மதவெறி பாசிஸ்டுகளை எதிர்ப்பவர்கள் மட்டும் சட்டத்திற்கு உட்பட்டுப் போராட வேண்டும் என்பது தற்கொலைக்கு ஒப்பானது. எனவே, இந்து மதவெறி பாசிஸ்டுகளை எதிர்த்துப் போராடத் துணியும் அனைவரும், 'சட்டத்திற்குப் புறம்பான' வழிகளைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆயுதமேந்திய மக்கள் படையும், தற்காப்புக் குழுக்களும், மக்கள் நீதிமன்றங்களும் இல்லாமல், ஆயுதமேந்தியிருக்கும் இந்து மதவெறி பாசிஸ்டுகளை வீழ்த்தவும் முடியாது; அவர்களைத் தண்டிக்கவும் முடியாது.

இந்தப் பாதையை வன்முறை, தீவிரவாதம், பயங்கரவாதம் எனக் குற்றம் சாட்டுபவர்கள், ஒன்று அசட்டுக் கற்பனாவாதிகளாக இருக்க வேண்டும்; இல்லையென்றால், ஆர்.எஸ்.எஸ். இந்து ராஷ்டிரம் அமைப்பதற்கு, மக்களைப் பலி ஆடுகளாக்கும் சட்டவாத மோசடிப் பேர்வழிகளாக இருக்க வேண்டும்.

❑ பாலன்

www.padippakam.com

# ஸ்டாலின் நினைவு ஐம்பதாண்டு:

# மக்களே அழிவற்றவர்கள்

ஸ்டாலின் - மறைந்தபோதும் 1953) சரி, இன்றும் சரி சோவியத் மக்களால் மக்கள் நாயகனாகவே அவர் நினைவு கூறப்படுகிறார். ஏகாதிபத்தியத் தாசர்களுக்கும், அவர்களின் பிரச்சார ஊது குழல்களுக்கும் மட்டும் அவர் தனிநபர் (வீர) வழிபாட்டை ஊக்குவித்த சர்வாதிகாரி. அமெரிக்காவின் பெரிய முதலாளித்துவ நிறுவனங்களில் ஒன்றான ஹெர்ஸ்ட் பிரஸ் பரப்பிய பொய்களை, அவதூறுகளை இன்றைய தினமணி வரை பல உலக ஏடுகள் அப்படியே எடுத்து விழுங்கி அதையே கக்குகின்றன. உலகமெங்கும் இத்தகைய ஆதாரமற்ற பொய்களை அதிகமும் நம்பிப் பரப்புகிறவர்கள் முக்கியமாக - முதலாளித்துவ - அறிவு ஜீவிகள், மற்றும் கலை இலக்கியவாதிகள் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று.

ஸ்டாலின் தற்செயலாக நாயகன் ஆக்கப்பட்டவர் அல்ல. அவர் ஐம்பதாண்டுகள் கம்யூனிஸ்டு கட்சியில் பாடுபட்டு, சோவியத்துக்காக 1917 அக்டோபர் புரட்சியிலும், பின் நாற்பதுகளின் தேசபக்தப் போரிலும் பங்கு கொண்டு உச்சியைத் தொட்டவர். ஸ்டாலின், கலை இலக்கியம் உள்ளிட்டு உழைக்கும் மக்களின் பண்பாட்டுச் செல்வம் எதிர்காலத்துக்குக் கொண்டு செல்லப்படவேண்டும் என்று உறுதியாகச் செயல்பட்டவர். என்றுமே தன்னை அவர் முன் நிறுத்திக் கொண்டவர் அல்லர். 1937-ஆம் ஆண்டு சோவியத் உருக்காலைத் தொழிலாளர்களிடம் பேசியபோது அவர் சொன்னார்: ''தலைவர்கள் வருவார்கள் போவார்கள். ஆனால் மக்கள் என்றும் இருப்பார்கள். மக்களே அழிவற்றவர்கள்!'' கம்யூனிஸ்டு கட்சியில் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியதிலிருந்து கடைசி மூச்சு வரை 60 ஆண்டுகளுக்கும் மேலாக அவர் அதை நிரூபித்தார். ஆரம்ப ஆண்டுகளில் அவர் எழுதிய ஒரு கவிதையையும் மாபெரும் சோவியத் நாவலாசிரியர் ஃபடயேவ் போன்றோருக்கு அவர் அளித்த ஒரு பேட்டியையும் உங்கள் முன் வைக்கிறோம்.

(குறிப்பு: 'கண்களில் கனலுடன் வலம் வந்த இளைஞன்' என்று அன்றைய ஸ்டாலினைப் பாராட்டினார் ஜியார்ஜிய இலக்கியவாதி இலியா சவ்சவாத்சே. ஸ்டாலினின் இயற்பெயர் ஜோசப் ஷூகாஸ்விலி - அவர் கவிதை எழுதிய ஆண்டுகள் 1893 முதல் 1896 வரை - 4 ஆண்டுகள், டிரான்ஸ் காகஸ் ரசியாவின் ரகசிய மார்க்சிய வட்டங்களில் அறிமுகமாகி, தொழிலாளர் மத்தியில் அரசியல் வேலை தொடங்கிய ஆண்டுகள். அப்போது அவர் வயது 15. அவர் செய்துவந்த மார்க்சியப் பிரச்சாரத்தைக் காரணம் காட்டி 'கிறித்தவச் சாமியார்ப் படிப்பிலிருந்து' அவர் விரட்டப்பட்டதும் அதே ஆண்டுகளில் தான்.)



### எழுத்துலக அறிவு ஜீவிகளுடன் ஸ்டாலின் விவாதம்

### (1946)

*நாற்பதாம் ஆண்டுகளில் சோவியத் ரசியாவில் எழுத்தாளர்களின் மத்தியில் படைப்பாளிகளின் இலக்கு என்ன, யாருக்காக - எப்படி - என்ன எழுதுவது என்ற கேள்விகள் விவாதிக்கப்பட்டு வந்தன. பல முதலாளித்துவக் கோட்பாடுகள் விவாதிக்கப்பட்டன. சோவியத்தை உலகப்போரில் ஆழமாக இழுத்து மூழ்கடித்து அழித்துவிடுவது என்று ஏகாதிபத்தியங்கள் தீட்டிய திட்டங்கள் மண்ணைக் கவ்வியதால், கலாச்சாரத் தளத்தின் மூலமாக ஒரு மறைமுகப் போரைத் தீவிரமாக முடுக்கிவிட்டார்கள் முதலாளித்துவக் கலைக் கோட்பாட்டாளர்கள். இதற்கெதிராக சோவியத் எழுத்தாளர்கள் தீவிரமான கலாச்சாரப் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த நாட்களில் சோவியத் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்தவர் ஃபடயேவ். அவரும் உறுப்பினர்களும் ஸ்டாலினைச் சந்தித்து கலை இலக்கியத் துறையில் உள்ள பிரச்சினைகள் பற்றி விவாதித்தனர். அத்தகைய ஒரு சந்திப்பின் சுருக்கம் கீழே:*

**ஃபடயேவ்:** *உங்களிடம் சில ஆலோசனைகளுக்காக வந்திருக்கிறோம். நமது கலை இலக்கியம் ஒரு முட்டுச் சந்துக்குள் போய்த் தேங்கிவிட்டது என்று பலர் எண்ணுகிறார்கள். அதை எப்படி வளர்ப்பதென்று எங்களுக்குத் தெரியவில்லை. இப்போது தியேட்டரில் ஓடுகிற எல்லாச் சினிமாக்களிலும் ஹீரோக்கள் எல்லோருமே எதிரியோடு மோதிக் கொண்டே இருக்கிறார்கள்; மனித ரத்தம் ஆறுபோல ஓடுகிறது. எங்கள் படைப்புக்களில் மனித வாழ்வை வேறு எப்படிக் காட்டுவது? ரத்தம் சிந்தாத, வன்முறை இல்லாத, நம் தேசம் தொடர்ந்து சந்திக்கும் கஷ்டங்கள் நீங்கிய எதிர்கால வாழ்க்கையை எப்படிச் சித்தரிப்பது?*

**ஸ்டாலின்:** உங்கள் வாதத்தில் நான் எதிர்பார்த்த முக்கியமான அம்சம் இல்லை. பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மார்க்சிய - லெனினியப் பகுப்பாய்வு முறை அதில் இல்லையே. கலை இலக்கியவாதிகளின் முன்னால் வாழ்க்கை கொண்டு வந்து சேர்க்கும் பிரச்சனைகளே இவைதான். முன்னொரு காலத்தில் ரசியப் பேரரசன் முதலாம் பீட்டர் ஐரோப்பாவுக்கான வாசலைத் திறந்து கொடுத்தான். ஆனால் 1917 அக்டோபர் புரட்சிக்குப் பிறகு ஏகாதிபத்தியங்கள் அந்த வாசலைக் கடுமையாக முற்றுகையிட்டுத் தாக்கின - தங்கள் நாடுகளுக்குள்ளே சோசலிசம் பரவிவிடக் கூடாதென்ற பயம் அவைகளுக்கு; நாற்பதுகளின் மாபெரும் தேசபக்தப் போரின் போது, ரேடியோ - சினிமா - செய்திப் பத்திரிக்கைகள் மற்றும் வார - மாத ஏடுகள் மூலமாக - ரத்தம் சொட்டும் கத்தியைப் பற்களில் கடித்துக் கொண்டு பாயும் காட்டுமிராண்டிகளாக உலகத்தின் முன்பு நம்மை அவர்கள் சித்தரித்தார்கள். இது பாட்டாளி வர்க்கச்



படிப்பகம்

www.padippakam.com

**''வீரம் விளைந்தது'' நாவலில் வரும் கதாநாயகன் பாவெல் கோர்சகின் நம் இதயத்தைத் தொடுவது ஏன்? புரட்சிக்கும், மக்களுக்கும், சோசலிசத்துக்கும் அவன் அர்ப்பணிப்போடு வேலை செய்வது; அவனது தன்னலமற்ற தியாகம் - இவைதான் அவனிடம் ஈர்க்கின்ற பண்புகள். இந்தப் பாரம்பரியத்தை நமது கலை இலக்கிய ஊழியர்கள் தொடரவேண்டும். மக்கள் யாரை ஒப்பிட்டுப் பார்த்துப் பின்பற்ற வேண்டுமோ அப்படிப்பட்ட கம்யூனிசப் போராளி களைப் பற்றி இலக்கியங்கள் உருவாக்கப்படவேண்டும்.**



சர்வாதிகாரம் பற்றிய அவர்களின் அவ தூறு. அழுக்கும் கந்தலுமான சட்டைகள் போட்டுக் கொண்டு, சமோவரிலிருந்து வோட்கா குடித்து, கெட்டு அழிபவராக நம் மக்களை அவர்கள் காட்டினார்கள்.

இத்தனை மோசமான பின் தங்கிய ரசியா - உலக முதலாளிகளால் குகை களில் வாழும் காட்டுமிராண்டிகளாகக் காட்டப்பட்ட நம்நாடு - உலகமே அஞ்சி நடுங்கிய பாசிச ஜெர்மனி மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்தியம் என்று இருபெரும் உலக சக்திகளை எதிர்த்து நின்று மிகக் குறைந்த ஆண்டு களில் வென்று காட்டிவிட்டது. இப்போது உலக மக்கள் விழித்துக் கொண்டு புரிந்து கொண்டு விட்டார்கள் - இப்படிப்பட்ட வீரதீரச் செயலைச் சாதித்துக் காட்டி, மனிதகுலத்தையே அழிவிலிருந்து காப்பாற்றியவர்கள் யார் என்று கேட்கிறார்கள்.

மனிதகுலம் எளிய சோவியத் மக்களால் காப்பாற்றப்பட்டு விட்டது - கம்யூனிஸ்டு கட்சித் தலைமையின் கீழ் மிகமிகக் கடினமான சூழ்நிலைமையின் மத்தியில் ஆலைத் தொழிலையும் கட்டி அமைத்துக் கூட்டு உற்பத்தியின் கீழே நாட்டை மாற்றிக் கொண்டே போரும் செய்தார்கள் சோவியத் மக்கள். அப்போரில் முதல் ஆறு மாதங்களில் மட்டும் 5 லட்சம் கம்யூனிஸ்டுகள் முன்னணியிலும், பிற பணியிடங்க ளிலும் கிராமங்களிலுமாக 30 லட்சம் கம்யூனிஸ்டுகளும் உயிரைக் கொடுத் தார்கள். (அவர்களையும் சேர்த்து மொத்தம் 2 கோடி சோவியத் மக்கள் போரில் உயிரைக் கொடுத்தார்கள் - மொ.ர்) இப்போது அவர்கள் இல்லை; அவர்கள் இருந்தால் எத்தனையோ பிரச்சினைகளைத் தீர்த்திருக்க முடியும். ***படைப்பூக்கமிக்க சோவியத் எழுத்தா ளர்களும் அறிவு ஜீவிகளுமான தோழர்களுக்கு இன்றுள்ள முக்கியப் பணியே நமது எளிய சோவியத் மனி தனின் அனைத்துக் குணாம்சங்க ளையும் தங்கள் படைப்புக்களில் கொண்டு வருவதுதான்; அதாவது, அவனது மிகச் சிறந்த பண்புக் கூறு களை வெளிக் காட்டுவதும் சித்தரிப் பதும்தான்; இன்று கலை இலக்கியம் செல்லவேண்டிய பொதுவழி இதுதான்.***

''வீரம் விளைந்தது'' நாவலில் வரும் கதாநாயகன் பாவெல் கோர்சகின் நம் இதயத்தைத் தொடுவது ஏன்? புரட் சிக்கும், மக்களுக்கும், சோசலிசத் துக்கும் அவன் அர்ப்பணிப்போடு வேலை செய்வது; அவனது தன்னல மற்ற தியாகம் - இவைதான் அவனிடம் ஈர்க்கின்ற பண்புகள். இந்தப் பாரம்பரி யத்தை நமது கலை இலக்கிய ஊழி யர்கள் தொடரவேண்டும். மக்கள் யாரை ஒப்பிட்டுப் பார்த்துப் பின்பற்ற வேண்டுமோ அப்படிப்பட்ட கம்யூ னிசப் போராளிகளைப் பற்றி இலக்கி யங்கள் உருவாக்கப்படவேண்டும்.

**கே:** *நவீன சோவியத் எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள், சினிமா இயக்குனர் களின் ஆக்கங்களில் உள்ள முக்கிய மான குறைபாடாக எதைக் கருதுகி றீர்கள்?*

**ஸ்டாலின்:** குறைகள் கணிசமாக இருக் கின்றன. அண்மைக் காலங்களில் பல இலக்கியப் படைப்புகளில் மிக ஆபத் தான ஒரு போக்கு நுணுகிப் பார்க்கும் போது தெரிகிறது; சீரழிந்த மேற்கத் தியப் பண்பாட்டின் கேடான தாக்கங்க ளிலிருந்து அப்போக்கு விளைந்திருக்கி றது; ஒருவகையில் அந்நிய ஏகாதிபத் திய உளவாளிகளின் கலக நடவடிக் கைகள் நம் மக்களின் வாழ்க்கையில் ஊடுருவும்படி செய்யப்பட்டு வருகின் றன; சோவியத் இலக்கிய ஏடுகளில் அடிக்கடி இப்படிப்பட்ட படைப்புக்கள் வருகின்றன; சோவியத் மக்களை, கம்யூ னிசக் கட்டுமானப் பணியின் முன்னோ டிகளை அந்தப் படைப்புக்கள் இரக்கப் படத்தக்க, பரிதாபப்படத்தக்க ஜீவி களாகக் காட்டுகின்றன; அல்லது கேலி செய்கின்றன.

சிறந்த பண்புள்ள நேர்மறைக் கதா நாயகர்கள் இழிவுபடுத்தப்படுகி றார்கள்; அவர்களோடு ஒப்பிட்டு அந்நி யவகை, உலகத் தொடர்பு கொண்ட பெருநகர வகைப்பட்ட மேட்டுக்குடிக் கதாபாத்திரங்கள் போற்றப்படுகி றார்கள். ***வெளிநாட்டுச் சரக்குகள்*** என்றால் எல்லாமே இவர்களால் வர வேற்கப்படுகின்றன. அரசியல் கழிச டைகள் இவ்வேலைகளைச் செய்கி றார்கள். மேடையை எடுத்துக் கொண்டால், அயல்நாட்டு முதலாளித் துவ நாடகாசிரியர்களின் வெட்கக் கேடான நாடகங்கள் சோவியத் நாடகங் களை ஓரம் தள்ளி இடம் பிடித்துக் கொள்கின்றன.

சினிமாவில் அற்பமான கதைக் கருக்கள் நிரம்பி வழிகின்றன; வீரதீர மான சோவியத் மக்களின் எழுச்சிமிக்க பண்புகளை அவை சிதைக்கின்றன.

**கே:** *'' 'அவாங் கார்டு' (Avant - Garde) முன்னோடி'' என்ற இசைத்துறை இயக் கமும், ஓவிய - சிற்பத் துறையிலான அருபவகை (Abstract School) இயக் கமும் சித்தாந்த ரீதியாக எவ்வளவு ஆபத்தானவை என்று கருதுகிறீர்கள்?*

**ஸ்டாலின்:** பரிசோதனை முயற்சிகள் என்று சொல்லிக் கொண்டு சோவியத் இசைத் துறையில் ***வடிவவாதம்*** கடத் தப்பட்டு உள்ளே நுழைக்கப்பட்டுள் ளது; ஓவியத் துறையில் ***அருபவகை*** நுழைக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது, இது உங்களுக்குத் தெரிந்ததுதான்: ''மிக உன்னதமான போல்ஷ்விக்குகள், லெனினிஸ்டுகள் அருப ஓவியம் மற்றும் வடிவ வாதம் போன்ற அற்ப விஷயங்களில் தலைகொடுத்து விமரி சனம் செய்து நேரத்தை வீணடிக்க வேண்டுமா? அதை மனோதத்துவ மருத்துவர்கள் கவனிக்கட்டுமே'' - இப்படிப்பட்ட வகைக் கேள்விகளில், நமது தேசத்துக்கும் இளைஞர்களுக்கும் எதிரான சித்தாந்த ரீதியான மாபெரும் சதிகளின் பங்கு - பாத்திரம் பற்றி அறி யாமையும் தெளிவின்மையும்தான் பளிச்சென்று தெரிகிறது.

www.padippakam.com

நமது சோசலிசக் கோட்பாடுகளுக்கு எதிராகப் போர் செய்ய அந்த வகைக் கலைகளே உதவி செய்கின்றன. அவர்கள் நேருக்கு நேர் வெளிப்படை யாக மோதுவதில்லை. ஒட்டு மொத்த சோவியத் மக்களின் மகிழ்ச்சிக்காக, கம்யூனிசத்திற்காக, வருங்கால முன்னேற்றப் பாதைக்காக மக்கள் யாரைப் பின்பற்ற விரும்புகிறார்களோ - அப்பண்புகளைக் கொண்ட எந்த மனிதர்களின் உண்மை முகங்களும் சொல்லிக் கொள்ளப்படும் அந்த அரூப ஓவியங்களில் இல்லை; அதற்குப் பதிலாக, முதலாளித்துவத்துக்கு எதிரான சோசலிச வர்க்கப் போராட்டத்தின்மீது மேகமூட்டத்தைப் பரப்பிவிட்டு அரூபமான ஆன்மீகத்தைக் கடை விரிக்கிறார்கள்.

பாசிசத்துக்கு எதிரான போர் நடந்த நாட்களில் செஞ்சதுக்கத்தில் இருக்கும் மினின் மற்றும் பொழார்ஸ்கி ஆகிய கலைஞர்களின் சிற்பங்களை ரசிக்க பல ஆயிரக்கணக்கான மக்கள் வந்து போனார்கள். அச்சிலைகளிலிருந்து வெற்றியை விரைந்து காணும் ஆர்வம், ஆவல், போராட்ட உணர்வை அவர்கள் பெற்றார்கள்; நாமும் அதேபோன்ற உணர்வைப் பெறுகிறோம். ஆனால், சோதனை முயற்சி என்று சொல்லி இரும்புக் கம்பிகளை முறுக்கிப் பீடத்தில் ஏற்றி வைக்கிறார்களே, அந்தக் கலை என்ன அகத்தூண்டலைக் கொடுக்க முடியும்? ஓர் அரூப ஓவியம் எதைத் தூண்டும்?

இக்காரணத்தால்தான் நவீன அமெரிக்க முதலாளிகள், செல்வச் சீமான்கள் 'நவீனத்துவத்தை'ப் பரப்புகிறார்கள்; அப்படிப்பட்ட படைப்புக்களுக்குப் பல கோடிப் பணத்தை அள்ளிக் கொட்டுகிறார்கள். யதார்த்தக் கலையின் வித்தகர்கள் இந்த அளவுப் பணவருவாயை என்றாவது பார்த்திருக்க முடியுமா?

வெகு மக்கள் ரசனைக்கான மேற்கத்திய இசையிலேயும் அடிநாதமாக ஒரு வர்க்கப் போராட்டம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அதற்கான வடிவவாத இசையை 'அசைத்து நெளித்து ஆட்டும் நடனம்' என்று அழைத்துக் கொள்ளும் (SHAKERS) ஒருகுழுவினர் உருவாக்கியிருக்கிறார்கள். இவ்வகை நடனம் மக்களைப் பரவசமூட்டுகிறதாம்; இந்த இசை தன் வயம் அழிந்த வசிய வெறி மயக்கத்திற்குள் கேட்போரைத் தள்ளுகிறது; எந்த வெறிச் செயலையும் செய்யத் தயாராகும் அளவுக்கு ரசிகர்களைக் காட்டு விலங்குகளாக்கி விடுகிறது. இந்த வகை இசையை - மனோதத்துவ நிபுணர்களின் உதவிகளோடு மக்களின் மூளையை, மனத்தைப் பணிய வைக்கின்ற சோதனை ரகங்களாகத் தயாரிக்கிறார்கள்.

**இது ஒருவகையான இசைப் போதை; இதற்கு ஆட்பட்டவர்கள் புதிய எண்ணங்களைச் சிந்திக்க லாயக்கற்ற மந்தைகளாகி விடுகிறார்கள். இப்படிப் போதைக்கு அடிமையானவர்களை புரட்சிக்கோ, கம்யூனிசக் கட்டுமான வேலைகளுக்கோ பங்குபெற அழைப்பது வெட்டிவேலை. ஆனால் உங்களுக்குத் தெரியும், இசை மூலமாகவும் போராட முடியும்.**

இது ஒருவகையான இசைப் போதை; இதற்கு ஆட்பட்டவர்கள் புதிய எண்ணங்களைச் சிந்திக்க லாயக்கற்ற மந்தைகளாகி விடுகிறார்கள். இப்படிப் போதைக்கு அடிமையானவர்களை புரட்சிக்கோ, கம்யூனிசக் கட்டுமான வேலைகளுக்கோ பங்குபெற அழைப்பது வெட்டிவேலை. ஆனால் உங்களுக்குத் தெரியும், இசை மூலமாகவும் போராட முடியும்.

1944-இல் பிரிட்டிஷ் உளவு நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவனின் குறிப்பைப் படிக்க எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அதன் தலைப்பு: ''எதிரிப் படையை வடிவச் சோதனை இசை மூலம் ஊழல்படுத்துவது, சீரழிப்பது எப்படி?''

........... இன்று நமக்குத் தூண்டுதலாக இருப்பது எதுவோ அதைப்பற்றி கலை இலக்கியத்தின் மூலம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். இதன்மூலம் சித்தாந்தச் சதிகளுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். கலாச்சாரம் - சமூகச் சித்தாந்தத்தின், வர்க்கத்தின் ஒருங்கிணைந்த ஒரு கூறு, இது ஆளும் வர்க்க நலனைக் காக்கப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நமக்குப் பாட்டாளி வர்க்கத்தின், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் நலன்களைக் காப்பாற்றுவதற்காக கலாச்சாரம் செயல்படவேண்டும்.

......... கலை, கலைக்காக என்று ஒரு போதும் இருக்க முடியாது. 'சுதந்திரமான' - சமூகத்திற்கு மேலாக நிற்கிற கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாடகாசிரியர்கள், இயக்குனர்கள், பத்திரிக்கையாளர்கள் - கிடையாது; அவர்கள் யாருக்கும் தேவையற்றவர்கள்.

❑ குப்பண்ணன்

## நீ இசைத்த இறவாப் பாடல்!

### (ஸ்டாலின் எழுதிய கவிதை)

*எமதருமைப் பாடகனே!*
*கசந்துபோன*
*விவசாயிகளின் விதிகண்டு*
*கண்ணீர் வடித்த நாள்முதலாய்*
*தீவிரமாக எரியும்*
*அவர்களின் வலியை உணர்வதே*
*உனது விதியாகி விட்டது.*

*உனது அன்னை பூமியின்*
*பேராற்றல் கண்டு கிளர்ந்தெழுந்து*
*நீ வெற்றிக் கனியும் ஈட்டியபோது*
*உயர்ந்த மலைகளின் முகடு திறந்து*
*பொங்கிவந்த பாடல்கள்*
*உனக்குச் சொந்தமாகிவிட்டன.*

*தந்தையர் நாடு*
*உன்னை உயிர்ப்பூட்ட*
*உனதுயிரின் ஆழ்நரம்புகள் தொட்டு*
*காதல் வசத்தால் ஓர் இளைஞன்*
*காதலின் காலடியில்*
*கனவுகளை வைத்ததுபோல்*
*கவிதைகளை இசைத்தாய்!*
*அக்கணமே*
*அன்பால் பிணைந்து*
*ஒவ்வொரு ஜியார்ஜிய நெஞ்சிலும்*
*படிமமாய்ச் சமைந்து விட்டாய்!*

*எம்மண்ணின்*
*பாட்டுக்காரன் நீ இசைத்த*
*இறவாப் பாடலுக்குப்*
*பரிசொன்று தரவேண்டும்*
*நீ விதைத்த விதை - எப்போதோ*
*வேர் கொண்டு*
*விளைந்து பயிராகி விட்டது;*
*அறுவடையை நீ*
*இன்றே தொடங்கு!*

*மக்கள் என்றும்*
*வீணே உன்னைப்*
*போற்றியதில்லை*
*எம் நெஞ்சம் குளிர*
*எரிஸ்தவி* என்று நாங்கள்*
*ஆசையாய் அழைக்கும்*
*கவிஞனே,*
*காலம் காலமாய் நீ வாழ்க!*


*எம்தேசம்*
*புதிய தலைமுறையை*
*உன்னைப்போல வளர்க்கட்டும்!*

* ரஃபேல் தவதோவிச் எரிஸ்தவி (1824-1901): சோவியத் - ஜியார்ஜியக் கவிஞன், மானுடவியல் ஆய்வாளன், நாட்டுப்புறக் கலைக் களஞ்சியமாய்த் திகழ்ந்தவன். அவரது படைப்புக்களின் முக்கியக் கருப்பொருள் - விவசாயிகளின் கஷ்ட சீவனம்.

www.padippakam.com











## இயேசு அழைக்கிறார்

விலை: ரூ. **20.** பக்: 96

**வ**ங்கிப் பணியை உதறிவிட்டு 'இயேசு அழைக்கிறார்' கூட்டங்களினால் கோடீசுவர ரான டி.ஜி.எஸ். தினகரன், 1962-இல் இயே சுவை 3 மணி நேரம் கண்டாராம்! 1981-இல் ஒரு தேவதூதன் காருண்யா பல்கலைக்கழ கத்தின் வரைபடத்தைக் கொடுத்தானாம்! ஒரு லட்சம் பேர் கூடுகின்ற நற்செய்திக் கூட்டங்க ளுக்குத்தான் தினகரன் போவாராம்! அங்கே இவரது ஒலி-ஒளிப் பேழைகள் மட்டும் விற்கப் படுமாம்! தலையில் கை வைத்து ஆசீர்வதிப்ப தற்கு 1000 ரூபாய் கட்டணமாம். மனைவி, மகன், மருமகள், பேரன்-பேத்தி அனைவரும் பெண்கள், வாலிபர், சிறார் கூட்டங்களை நடத்த, பத்திரிக்கை, தொலைக்காட்சி, பல்கலை, ட்ரஸ்ட் என்று பன்னாட்டு நிறுவனமாய்ச் சுரண்டி நிற்கும் பகற்கொள்ளைக்காரன் டி.ஜி.எஸ். தினக ரனைத் தோலுரிக்கிறார் நாத்திகம் இராமசாமி.

ஆசிரியர்: ***நாத்திகம் பி. இராமசாமி***

நாத்திகம் வெளியீடு:
97/55, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024. ✆ : 52134024.

## அரசு பாசிச அரசாக மாறியபோது... குஜராத் இனப்படுகொலை

விலை: ரூ. **10.** பக்: 96

**கோ**த்ரா சம்பவம் தொடங்கி பார்ப்பன இந்துமதவெறிக் கும்பல் குஜராத் முசுலீம் மக்கள் மீது மிகக் கொடூரமாக நடத்திய இனப் படுகொலையை சுருக்கமாக விவரிக்கிறது இந்நூல். இதில் படுகொலைக்குத் துணைபோன போலீசு, நியாயப்படுத்திய பா.ஜ.க. அமைச் சர்கள், கண்டும் காணாமலும் இருந்த மனித உரிமை, பெண்ணுரிமை அமைப்புக்கள், ஆர்.எஸ்.எஸ். வானரப்படையின் பங்கு ஆகிய னவும் இடம் பெற்றிருக்கின்றது. கற்பு, சாதி மதக் கௌரவச் சின்னமாக கருதப்படும் பெண், எல்லாக் கலவரங்களிலும் கொல்லப்படுவதை நினைவு கூறும் இந்நூல் இங்கே இசுலாமியப் பெண்கள் அடைந்த கொடுமைகளைத் தொகுத்துக் கூறுகிறது. கலவரம் நடந்த சமயத்தில் இவ்வறிக்கையைத் தயார் செய்த பெண்கள் குழுவினர் நடத்திய கள ஆய்வும், புகைப்படங்களும் நூலில் இடம்பெற்றிருக்கின் றன. முசுலீம் பகுதிகளுக்கு இக்குழுவினர் போக வேண்டாமென சில இந்துக்கள் அன்புடனும் வெறுப்புடனும் இருவிதமாகவும் எச்சரிக்கை செய்திருப்பது, குஜராத்தின் நோயை மறைக் காமல் காட்டுகிறது.

அறிக்கைத் தயாரிப்பு: ***பெண்களுக்கு எதிரான வன்முறை எதிர்ப்பு - தற்காலிகக் குழு***

ஆங்கிலம் வழி தமிழில்: ***கலைச்செல்வன்***

தொடர்புக்கு: ஷோமா சென்,
8, அனுஸ்ரீ அபார்ட்மெண்ட்ஸ்,
184, பாஜி பிரபு நகர், நாக்பூர் - 440010.

## புதிய கோடாங்கியின் இருட்டடிப்பு இதழியல் - பக். 35

**கோ**டியங்குளம் ஜெயா, மாஞ்சோலை கருணாநிதி ஆகிய ஆண்டைகளுடன் எவ்விதக் கூச்சநாச்சமுமின்றிச் சிரித்தவாறு 'போஸ்' கொடுக்கும் மேடம் சிவகாமி ஐ.ஏ.எஸ், பெரியாரையும், பொதுவுடைமைக் கொள்கையையும் ஒருவகை வன்மத்துடன் சாமியாடித் தாக்குவதினூடாகத் தானும் ஒரு தலித் போராளி எனத் தற்புகழ்ச்சி அடைவதற்கு நடத்தப்படும் சிறுபத்திரிக்கை 'புதிய கோடாங்கி'. இந்தச் சன்னதியைச் சுற்றி வரும் தொண்டரடிப் பொடிகள் பலர் அப்பத்திரிக் கையில் எழுதுகின்றனர். அதில் சோதிப் பிர காசம் என்றொரு முட்டாள் பொடி மார்க்சியச் சொற்களை வைத்து மேடத்தின் தற்புகழ்ச்சி தலித் அரசியலை பஜனை பாடியது. இந்தப் பாடலால் சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு எனக் கருதிய, தோழர் ருத்ரன் அந்தப் பஜனையின் அபஸ்வரத்தைப் பிட்டு பிட்டுக் காட்டினார். அவரது முதல் கடிதத்தை 'எடிட்' செய்தும் (வெட்டியும்), இரண்டாவது கடிதத்தை 'டெலிட்' செய்தும் (வெளியிட மறுத்தும்) தனது புகழ்ச்சியை, அதாவது முட்டாள்தனத்தை 'புதிய கோடாங்கி' பாதுகாத்துக் கொண்டது. சலிக்காத ருத்ரனோ அதை தனி வெளியீடா கவே கொண்டு வந்துவிட்டார். தேவைப்ப டுவோர் கடிதம் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர்: ***ருத்ரன்,*** 12, குலாளர் தெரு, காவேரிப்பட்டினம், தருமபுரி மாவ. - 635 112, ✆ : 954343 251346.

## குடும்ப உறவில் கனவுத் திரை டி.வி. மற்றும் சினிமாவின் தாக்கங்களைப் புரிந்து கொள்ளும் வழிமுறைகள்

விலை: ரூ. **67.** பக்: 160

**இ**த்தலைப்பில் என்ன ஆய்வு செய்திருக்கி றார்கள் என்ற ஆர்வமும், கவர்ச்சியும் நூலைப் படித்தவுடன் சப்பென்று ஆகிவிடுகிறது. டி.வி, சினிமா குறித்துப் பரவலாக அங்கீகரிக்கப்பட்ட, ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட விமர்சனங் களைப் பாடப்புத்தகப் பாணியில் தொகுத்து, தேவையற்ற கோட்பாட்டுச் செருகல்கள், வரை படங்கள் மூலமும், கண்ணை உறுத்தும் வடிவ மைப்புடனும் படிக்கும் போது கண்ணீர் வருகி றது. ''ஜெமினி'' திரைப்படம் ஒரு ஆணின் பார்வையிலே சொல்லப்பட்டிருக்கிறது! எம்.ஜி.ஆருடைய அரசியல் வெற்றியின் ரக சியம் அவரின் சிவந்த நிறத்தில் இருக்கிறது! புரை யோடிப் போன சமூக அமைப்பை நையாண்டி செய்வது அல்லது எதிர்ப்பைத் தெரிவிப்பது ஆகி யவற்றின் ஒரு வடிவமே ஆபாசம்!...'' போன்ற ஆங்காங்கே தூவப்பட்டிருக்கும் நகைச்சுவைகள் நமது அழுகைக்கு அவ்வப்போது ஆறுதல் தருகின்றன.

ஆசிரியர்: ***ச. ராஜநாயகம்,***
வெளியீடு: இல்லிடம், C-1 சிட்டி கிங் அபார்ட்மெண்ட்ஸ், 69, வன்னியர் தெரு, சூளைமேடு, சென்னை - 94.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, ஜெகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN/PMG (CCR)/239/03-05

www.padippakam.com

# நிலத்தைப் பழிக்கும் நெல்லுமிரட்டிகள்

துரை. சண்முகம்

"கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தால்
கருத்துரிமை பறிபோகு"மென்று
முறுக்கிக் கொண்டு போன
கதாசிரிய நண்பனைக்
காணநேர்ந்தபோது
தயாரிப்பாளர் சொல்லச் சொல்ல
தயக்கமில்லாமல் தனது கதையை
நறுக்கிப் போட்டுக் கொண்டிருந்தான் அவன்.


"புரட்சி, போராட்டம் இதெல்லாம்
என் இளகிய இதயத்தால் - இயலாது
இயக்கத்தில் சேரமாட்டேன்" என
பழக்கத்தை முறித்துக் கொண்ட
பழைய நண்பனைப் பார்க்கப் போனால்
ஆட்டுக்கறி உரிப்பது போல
ஒரு பெண்ணின் அங்க அவயங்களை
பாட்டில் பச்சையாக உரித்துக் கொண்டிருந்தான்
"என்னடா இப்படி?" என்றால்
சினிமாவில் சேர்ந்துவிட்டேன் என
சிரிக்கிறான் கோரமாக.

"இலக்கியவாதிகளுக்கே உரிய அடையாளம் கிடைப்பதில்லை...
கட்சிகள் வாகனமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன" என
காட்டமாகப் பேசிய இலக்கியவாதியை தேடிப் போனால்
"ஓ அந்த ஆம்வே (AMWAY) ஏஜெண்ட்டா" என
அடையாளம் காட்டுகிறார்கள் தெருவாசிகள்.

"எனக்கு இலக்கியம் பண்ணத் தெரியும்
அரசியல் பண்ணத் தெரியாது" என்று
இரட்டுற மொழிந்து
விலகிச் சென்ற நண்பனை விசாரித்தால்
இப்போது பத்திரிக்கையாளர் குடியிருப்பில் வீடாம்.
எப்படியெனக் கேட்டால்
கனிமொழியின் இலக்கியச் சந்திப்பால் வந்த கோட்டா
என்கிறார்கள் கூட இருப்பவர்கள்.

"வீரமிக்க தமிழினம்
இப்போது ஈழத்திலிருக்கிறது" என்று
கவியரங்குகளில் கைதட்டல்களை எழுப்பும்
அண்ணனைத் தேடினேன்,
'வாடி வாடி நாட்டுக்கட்டை'க்கு அடுத்த வரியைத் தேடி
அவர் ஆத்துப் பக்கம் போயிருப்பதாய்த்
தம்பிகள் சொன்னார்கள்.

மலம் உருட்டும் வண்டுகள் கூட
வெளிப்படையாய் இயங்குகின்றன
மனங்கவரத் துடிக்கும் இலக்கியவாதிகளே
நீங்கள் மட்டும் ஏன் இப்படி?



(குறிப்பு: நெல்லுமிரட்டி என்பது நெல்லுடன் சேர்ந்து வளரும்
நெற்பயிரைப் போலவே தோற்றமளிக்கும் களை)

படிப்பகம்